# தோஸ்த் 10

# தமிழ்

## எளிய வழி கற்றல் கையேடு

(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி நூல்)


**ஆன்லைனில் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் படிக்க ஸ்கேன் செய்யவும் !**

**எண்ணமும் எழுத்தும்**

**தமிழகத் தொழில்நுட்பப் புலவர்க் குழு**

TAMILNADU TECHNICAL & DIGITAL SCHOLORS ASSOCIATION

## தமிழ்ப்பாடம்

| பார்க்கலாம் | படிக்கலாம் | கேட்கலாம் | எழுதலாம் |
|---|---|---|---|
| dhosth.org | ONLINE<br>DIGITAL BOOK | DHOSTH TV<br>YOU-TUBE CHANNEL | examport.in |
|  |  | | EXAM PORT<br>FREE ONLINE MOCK TEST |

# DHOSTH PUBLICATIONS

**TUTICORIN-PALAYANKOTTAI-CHENNAI**

**CONTACT.NO. 9443172023-8144447811**

PUBLISHERS

**SRI.SANKARANARAYANAN & SRI.V. MUTHUKUMAR CHOZHAGAR**

| ADDRESS | E-MAIL ID- WEBSITE | WHATS APP |
|---|---|---|
| SAKTHI COPIER<br>NO.36A, II STREET<br>SUBBIAHPURAM<br>TUTICORIN-628003 | dhosthassociation@gmail.com<br>www.dhosth.org<br>www.examport.in | To get the Digital & physical copy of competitive exam materials<br>**6385524257** |

**BANK DETAILS**

| | |
|---|---|
| NAME | DHOSTH ASSOCIATION |
| BANK NAME | KARUR VYSA BANK |
| ACCOUNT NO | 1202115000014363 |
| IFSC CODE | KVBL00010202 |
| MICR CODE | 6270530041 |

## Warning

All Rights reserved. No part of this publication may be reproduced, stored in retrieval system or transmitted, in any form or by any means, without the prior permission in writing of **Dhosth Publications** or as expressly permitted by law, by license or under terms agreed with the appropriate reprographics rights organisation. Enquiries concerning reproduction outside the scope of the above should be sent to the rights department, **Dhosth Publications**. You must not circulate this work in any other form and you must impose this same condition on any acquirer.

Price - Rs. 125/-

# பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | மின்னூல் (Digital Copy) | i |
| 2 | காணொளி, கேட்பொலி | i |
| 3 | பலவுள் தெரிக | 1 |
| 4 | உரைநடை குறுவினா | 6 |
| 5 | செய்யுள் குறுவினா | 9 |
| 6 | விடைக்கேற்ற வினா | 13 |
| 7 | மொழிப்பயிற்சிகள் | 14 |
| 8 | இலக்கண குறுவினா | 22 |
| 9 | உரைநடை சிறுவினா | 24 |
| 10 | செய்யுள் சிறுவினா | 27 |
| 11 | இலக்கண சிறுவினா | 29 |
| 12 | செய்யுள் நெடுவினா | 31 |
| 13 | கடிதம் | 33 |
| 14 | விண்ணப்பப் படிவம் | 35 |
| 15 | உரைநடை நெடுவினா | 36 |
| 16 | துணைப்பாடம் நெடுவினா | 39 |
| 17 | கலைச்சொற்கள் | 44 |
| 18 | இலக்கணக்குறிப்பு | 45 |
| 19 | பகுபத உறுப்பிலக்கணம் | 45 |
| 20 | தமிழ் எண்கள் | 46 |
| 21 | அணி இலக்கணம் | 48 |
| 22 | பா நயம் பாராட்டுக | 53 |
| 23 | மொழிபெயர்ப்பு | 59 |
| 24 | நிற்க அதற்குத் தக | 62 |
| 25 | காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | 64 |
| 26 | விரைவுக் குறியீட்டு வினா - விடை | 68 |
| 27 | அரசு மாதிரி வினாத்தாள் | 79 |
| 28 | தோஸ்த் மாதிரி வினாத்தாள் | 84 |




தோஸ்த் தமிழ் உரையை
மின்நூல் வடிவில்
இலவசமாகப் படித்திட குறியீட்டை
விரவவும்....

தோஸ்த் தமிழ் உரையை
ஒலி *(Audio)* வடிவில்
கேட்டு மகிழுங்கள்...



## நம்மை அளப்போம்

**1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது**

அ) வணிகக் கப்பலும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

விடை: **(அ) வணிகக் கப்பலும் ஐம்பெரும் காப்பியங்களும்**

**2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

விடை: **(ஈ) சருகும் சண்டும்**

**3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

விடை: **(இ) எம்+தமிழ்+நா**

**4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

விடை: **(ஈ) பாடல்; கேட்டவர்**

**5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை**

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

விடை: **(ஆ) மணி வகை**

**6. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

விடை **: ஆ) மோனை, எதுகை**

**7. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**
**செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடம் என்பதில் எனக்கு பெருமையே.**
**செய்தி 3 - காற்றின் ஆற்றலை பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்**

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

விடை: **ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

**8. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

விடை **: ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்**

**9. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை: **இ) அன்மொழித்தொகை**

**10. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

**அ) கொண்டல் - 1. மேற்கு ஆ) கோடை - 2. தெற்கு**

**இ) வாடை - 3. கிழக்கு** **ஈ) தென்றல் - 4. வடக்கு**

*அ) 1,2,3,4* *ஆ) 3,1,4,2* *இ) 4,3,2,1* *ஈ) 3,4,1,2*

விடை **: ஆ) 3,1,4,2**

**11. பின்வருவனவற்றுள் முறையான தொடர்**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

விடை **: இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு**

**12. "சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது**

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

விடை **: ஈ) சிற்றூர்**

**13. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்திக் காரணமாக அமைவது**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

விடை **: அ) வேற்றுமை உருபு**

**14. காசிக்காண்டம் என்பது**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுப்பெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

விடை **: இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

**15. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டத்தால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை**

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

விடை **: ஆ) இன்மையிலும் விருந்து**

**16. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது ?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

விடை: **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**

**17. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**
**குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையை திருப்புகிறது.**
**திரன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டிள்ளன.

ஈ) குறிப்புகளுக்குத் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடை: **அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**

**18. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

விடை: **இ) வானத்தையும் பூமியையும்**

**19. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

விடை **: இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

**20. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

விடை **: ஈ) இலா**

**21. 'மாபாரதம்தமிழ்ப்படுத்தும்மதுராபுரிச்சங்கம்வைத்தும்'என்னும்சின்னமனூர்ச்செப்பேட்டுக்குறிப்புஉணர்த்தும்செய்தி.**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

விடை: **அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது .**

**22. அருந்துணை என்பதைப் பிரித்தால்**

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

விடை: **அ) அருமை + துணை**

**23. "இங்கு நகரப் பேருந்து நிற்கும்?" என்று வழிபோக்கர் கேட்டது ............... வினா. "அதோ அங்கே நிற்கும்." என்றும் மற்றொருவர் கூறியது ............... விடை.**

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

விடை: **இ) அறியா வினா, சுட்டு விடை**

**24. "அருளைப் போக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகள் குறிப்பிடுவது எது?**

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

விடை **: இ) கல்வி**

**25. இடைக்காடனாரிடம் பாடலை இகழ்ந்தவர் ................. இடைக்காடனார் அன்பு வைத்தவர்........**

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னர் ஈ) மன்னன், இறைவன்

விடை: **ஈ) மன்னன், இறைவன்**

**26. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

விடை: **ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்**

**27. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரில் செயப்பாட்டுவினை தொடர் எது ?**

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர். ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது. ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

விடை: **இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.**

**28. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

விடை: **ஆ) தளரப் பிணைத்தால்**

**29. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?**

அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

விடை: **ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

**30. கோசல நாட்டின் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

விடை: **ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

**31. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உழவு, மண், ஏர், மாடு அ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

விடை **இ) உழவு, ஏர், மண், மாடு**

**32. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே.**

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருசெந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

விடை **அ) திருப்பதியும் திருத்தணியும்**

**33. 'தன்நாட்டுமக்களுக்குத்தந்தையும்தாயும்மகனுமாகஇருந்தஅரசன்'என்னும்மெய்க்கீர்த்தித்தொடர்உணர்த்தும்பொருள்**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

விடை **- ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

**34. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல் இ) வலிமையை நிலை நாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

விடை **- இ) வலிமையை நிலை நாட்டல்**

**35. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

விடை **- ஈ) சிலப்பதிகாரம்**

**36. மேன்மை தரும் அறம் என்பது**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

விடை: **அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**

**37. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது**

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

விடை: **இ) இடையறாது அறப்பணி செய்தலை**

**38. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்**

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தான் இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

விடை: **அ) உதியன்; சேரலாதன்**

**39. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்**

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

விடை: **அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

**40. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்**

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

விடை: **அ) அகவற்பா**

**41. "இவள் தலையில் எழுதியதோ**
**கற்காலம்தான் எப்போதும்" - இவ்வடியில் கற்காலம் என்பது**

அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

விடை **- ஈ) தலையில் கல் சுமப்பது**

**42. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

விடை: **ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

**43. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று--------, ------- வேண்டினார்.**

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

விடை: **அ) கருணையன் எலிசபெத்துக்காக**

**44. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

விடை **- இ) உருவகம்**

**45. கலையின்கணவனாகவும்சமுதாயத்தின்புதல்வனாகவும்இருந்துஎழுதுகிறேன்-இக்கூற்றிலிருந்துநாம்புரிந்துகொள்வது**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார். ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

விடை **- ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.**

## உரைநடை குறுவினா

**1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக் காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**சரியான தொடர்கள்**

★ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர்**

★ ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

★ **காரணம்:** தாறு என்பது வாழைக்குலை சீப்பு என்பது பழங்கள்.

**2. தமிழ்நாட்டு நெல்வகைகளைக் கூறுக.**

★ செந்நெல் ★ வெண்ணெல் ★ கார்நெல் ★ சம்பாநெல் ★ மட்டை நெல்

**3. தாவரங்களின் இலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

★ இலை ★ தாள் ★ தோகை ★ ஓலை ★ சண்டு ★ சருகு

**4. தாவரத்தின் நுனிப்பகுதிகளை குறிக்கும் சொற்கள் யாவை ?**

★ துளிர் ★ தளிர் ★ முறி ★ குருத்து ★ கொழுந்து ★ கொழுந்தாடை

**5. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

★ அரும்பு ★ கமலர் ★ வீ ★ போது ★ அலர் ★ செம்மல்

**6. தாவரத்தின் பிஞ்சு வகைகளை குறிக்கும் சொற்களை எழுதுக.**

★ பூம்பிஞ்சு ★ பிஞ்சு ★ வடு ★ மூசு ★ கவ்வை ★ குரும்பை
★ முட்டுக்குரும்பை ★ இளநீர் ★ நழாய் ★ கருக்கல் ★ கச்சல்

**7. நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் மரங்களை**
**வெட்டி எரியாமல் நட்டு வளர்ப்போம்**
**- இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக**

★ மரம் வளர்ப்போம் மனிதம் காப்போம். ★ உயிர்களுக்குத் தேவை காற்று, உலகிற்கு தேவை மரம்.

**8. காற்றுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

★ காற்று ★ வளி ★ தென்றல் ★ புயல் ★ சூறாவளி

**9. காற்று மாசடைவதால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?**

★ கண் எரிச்சல் ★ தலைவலி ★ தொண்டைக்கட்டு ★ காய்ச்சல் ★ நுரையீரல் புற்று நோய் ★ இளைப்புநோய்

**10. பருவநிலை, சூழல், வீசும் தன்மை இவற்றிற்கு ஏற்ப காற்றுக்கு வழங்கப்படும் பெயர்கள் யாவை?**

★ தென்றல் ★ பூங்காற்று ★ கடல்காற்று ★ பனிக்காற்று
★ வாடைக்காற்று ★ மேல்காற்று ★ கீழ்க்காற்று ★ மென்காற்று
★ பேய்க்காற்று ★ கடுங்காற்று ★ சுழல் காற்று ★ சூறாவளி

**11. ஹிப்பாலஸ் பருவக்காற்று என்றால் என்ன?**

★ பருவக்காற்றின் மூலம் கடல் பயணத்திற்கு புதிய வழியைக் கண்டுபிடித்தவர் ஹிப்பாலஸ். அந்தப் பருவக்காற்றுக்கு ஹிப்பாலஸ் பருவக்காற்று என்று பெயர்.

**12. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கியச் செய்தி விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடவும்.**

★ விருந்தோம்பலுக்குச் செல்வம் தேவையில்லை. ★ நல்ல மனம் இருந்தால் போதும்.

**13. விருந்து குறித்து ஔவையார் கூறும் செய்தி யாது?**

★ மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - கொன்றை வேந்தன்.

**14. விருந்தோம்பல் குறித்து புறநானூறு கூறுவது யாது?**

★ விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குற்றியெடுத்து விருந்தளித்தனர்.

**15. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டு பிடிப்புகளை எழுதுக.**

**செயற்கை நுண்ணறிவால் இயங்கும்**

★ போக்குவரத்து ஊர்திகள் ★ பெட்ரோல் நிலையங்கள்

**16. மெய்நிகர் உதவியாளர் என்பது எது?**

★ திறன் பேசியில் இயங்கும் மென்பொருள் மனிதனைப் போல உதவி செய்யும். ★ இதுவே மெய்நிகர் உதவியாளர்.

**17. பெப்பர் என்பது யாது?**

★ ஜப்பானின் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர்.

**18. இலா ( ELA ) குறித்து எழுதுக.**

★ பாரத ஸ்டேட் வங்கியின் மென்பொருள் இலா. ★ ஒரு விநாடிக்கு பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.

**19. தாய்மொழியையும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.**

★ நான் கற்க விரும்பும் மொழி மலையாளம்.

★ **காரணம்:** மலையாள மொழியிலுள்ள இலக்கியங்களைப் படித்துச் சுவைப்பதற்கு

**20. இந்திய அரசின் மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை?**

★ சாகித்ய அகாதெமி ★ தேசிய புத்தக நிறுவனம் ★ தென்னிந்திய புத்தக நிறுவனம்

**21. இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது ஏன்?**

★ தேசிய உணர்வை ஊட்டுவதற்கு ★ ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு

**22. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

★ வாருங்கள், வாருங்கள். ★ உங்களைக் கண்டதில் மிகவும் மகிழ்ச்சி, உட்காருங்கள்.

★ நீர் பருகுங்கள். ★ கண்டிப்பாக உணவு உண்டுவிட்டே செல்லவேண்டும்.

**23. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம. பொ. சி. என்பதற்குச் சான்று தருக.**

★ ம. பொ. சிவஞானம் அவர்கள் நூல் வாங்க பணம் போதிய அளவில் இல்லாதபோது பழைய புத்தகக் கடையில் குறைந்த விலைக்குப் புத்தகங்களை வாங்குவார்.

★ பட்டினி கிடந்தாவது உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகம் வாங்குவார்.

**24. அவையம் குறிப்பு வரைக.**

★ அரசரின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்த மன்றங்கள் அவையம் என அழைக்கப்பட்டது.

**25. பண்டைத் தமிழரின் விருந்தோம்பும் பண்பில் இரண்டைக் கூறுக.**

★ தனித்து உண்ணாமை ★ இரவில் வந்தாலும் வரவேற்று உணவிடுதல்

**26. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.**

★ பணம் எடுக்கும் தானியங்கி இயந்திரம் (ATM) ★ திறன் பேசி ★ கண்காணிப்பு புகைப்படக் கருவி

**27. மொழிபெயர்ப்பு குறித்து மணவை முஸ்தபாவின் கருத்து யாது?**

★ ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா.

**28. வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவை யாவை?**

★ பெருங்கதை ★ சீவகசிந்தாமணி ★ கம்பராமாயணம் ★ வில்லிபாரதம்

**29. காவடியின் வகைகள் யாவை?**

★ மச்சக்காவடி ★ சர்ப்பக்காவடி ★ பூக்காவடி ★ தேர்க்காவடி ★ பறவைக்காவடி

**30. தமிழகத்தில் உள்ள நிகழ் கலைகள் யாவை?**

★ கரகாட்டம் ★ மயிலாட்டம் ★ காவடியாட்டம் ★ ஒயிலாட்டம் ★ தேவராட்டம்

★ தப்பாட்டம் ★ புலியாட்டம் ★ தெருக்கூத்து ★ தோற்பாவைக் கூத்து

**31. மழை வேண்டி நிகழ்த்தும் கலை எது?**

★ அர்ச்சுனன் தபசு என்னும் கலை

**32. போலச் செய்தல் பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகள் இரண்டை எழுதுக.**

★ குதிரையாட்டம் ★ மயிலாட்டம்

**33. ஒயிலாட்டத்தில் பயன்படுத்தும் இசைக்கருவிகள் யாவை?**

★ குடம் ★ தவில் ★ சிங்கி ★ டோலக் ★ தப்பு

**34. அறம் குறித்த சங்ககால மக்களின் கருத்து யாது?**

★ அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது.

★ இப்பிறவியில் அறம் செய்தால் மறுபிறவியில் பெறலாம் என்ற நோக்கமும் இல்லை.

**35. அறத்தின் குறியீடுகள் யாவை?**

★ மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகும்.

**36. போதி தருமர் குறிப்பு தருக?**

★ போதி தருமர் காஞ்சி மாநகரத்து சிற்றரசர். ★ ஜென் தத்துவத்தை சீனாவில் போதித்தவர்.

★ சீனர்கள், சீனாவில் போதிதருமருக்குக் கோவில் கட்டி வணங்கி வருகின்றனர்.

**37. அறங்களின் முப்பிரிவுகள் பற்றி எழுதுக.**

★ முதல் தரம் - இயல்பாக அறியும் அறம் ★ இரண்டாம் தரம் - சிந்தித்து அறியும் அறம்

★ மூன்றாம் தரம் - தாமே சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம்

**38. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகள் யாவை?**

★ சில நேரங்களில் சில மனிதர்கள் ★ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் ★ தாருக்கு நூறு பேர்

**39. எழுத்தில் தம்மைப் பெரிதும் பாதிப்பவையாக ஜெயகாந்தன் எதனைக் குறிப்பிடுகிறார்?**

★ மனிதவாழ்வின் பிரச்சினைகள்

## செய்யுள் குறுவினா

**1. மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**
**- இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக**

★ சீவக சிந்தாமணி ★ வளையாபதி ★ குண்டலகேசி

**2. மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**
**தென்னன் மகளே!**
**திருக்குறளின் மாண்புகழே! - மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

★ மூன்று இடங்களுக்குமான ஓரேவிடை தமிழ் ★ பாடலின் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**3. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**

★ ஒரு சொல்லோ தொடரோ இரு பொருள் பட வருவது.

**4. மூன்று வகையான சங்குகளின் பெயர்களைச் சுட்டுக?**

★ வெண்சங்கு ★ சலஞ்சலம் ★ பாஞ்சசன்யம்

**5. வசன கவிதை குறிப்பு வரைக.**

★ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பு விதிகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவமே வசன கவிதை.

**6. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

★ தம்பியிடம் அன்பாகப் பேசுவேன்- ★ அழாதே கண்ணா!

★ இதோ அப்பாவும் அம்மாவும் வந்துவிடுவார்கள் சாக்லேட் சாப்பிடு

★ வா தொலைக்காட்சியில் சோட்டா பீம் பார்க்கலாம்.

**7. மாஅல் பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.**

★ பொருள்: திருமால் ★ இலக்கணக் குறிப்பு: இசைநிறை அளபெடை

**8. நிமிர்ந்த மாஅல் போல - உவமையை விளக்குக.**

★ மாவலிக்கு காட்சி தந்த திருமால் போல மழை இருந்தது.

**9. முதுபெண்டிர் நற்சொல் கேட்க தெய்வத்தை எவ்வாறு தொழுதனர்?**

★ முல்லைப் பூக்களோடு நெல்லையும் தூவி தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டனர்.

**10. விருந்தினரை எவ்வாறு வழியனுப்ப வேண்டும்?**

★ புகழ் மொழிகள் கூறி, வாயிற்படிவரை சென்று வழியனுப்ப வேண்டும்.

**11. இறடி பொம்மல் பெறுகுவிர் இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.**

★ இறடி - தினை; பொம்மல் - சோறு ★ தினைச் சோற்றைப் பெறுவீர்.

**12. ஆற்றுப்படை என்றால் என்ன?**

★ வள்ளலிடம் பரிசு பெற்றவர், பரிசு பெற விரும்புபவரை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

**13. மலைபடுகடாம் பெயர்க்காரணம் கூறுக.**

★ மலையை யானை என்றும் மலையில் எழும் ஓசைகள் யானையின் மதம் என்றும் பொருள்பட உருவகம் செய்து பெயரிடப்பட்டுள்ளது.

**14. பண்டைக்காலத்தில் மக்களை மகிழ்வித்த கலைஞர்களைக் கூறுக.**

★ பாணர் ★ கூத்தர் ★ விறலியர்

**15. நச்சப்படாதவன் செல்வம் இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

★ நச்சப்படாதவன் - பிறருக்கு உதவாதவன்

**16. பொருளுக்கேற்ற அடியைக் பொருத்துக.**

★ உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும் உயிரினும் ஓம்பப்படும்

★ ஊரின் நடுவில் நச்சு மரம் பழுத்தது நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று

★ ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்

**17. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

★ உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம். ★ ஒழுக்கமே ஒருவனுக்கு உயர்வைத் தரும்.

**18. யாருக்கு இவ்வுலகமே உரிமையுடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?**

★ நடுநிலை தவறாது இரக்கம் காட்டுபவருக்கு

**19. நச்சப்படாதவன் செல்வம் எத்தகையது?**

★ நடு ஊரில் நச்சு மரம் பழுத்தது போன்றது.

**20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

★ மருத்துவர் நோயாளியிடம் அன்பு காட்ட வேண்டும்.

★ நோயாளி மருத்துவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**21. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

★ காற்று ★ வானம் ★ நெருப்பு ★ நீர் ★ நிலம்

**22. விசும்பில் ஊழி யாழ் ஊழ் செல்ல - இத் தொடரின் பொருள் யாது?**

★ உலகம் தோன்றும் முன் ★ நிலம் நீரிலும் ★ நீர் தீயிலும்

★ தீ காற்றிலும் ★ காற்று வானத்திலும் ★ வானம் பிரகிருதியிலும் பல காலம் ஒடுங்கி இருந்தது.

**23. செய்குத் தம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

★ அருளைப் பெருக்கு! அறியாமையை நீக்கு! ★ அறிவைப் பெருக்கு அதுவே சிறப்பு!

★ கல்வியைப் போற்று ஆவியைக் காப்பாற்று!

**24. சதாவதானம் என்றால் என்ன?**

★ சதம் - நூறு ★ பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்வது.

**25. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக்கேட்டு**
**நய முழுது உணர்ந்த கபிலன் தன்பால்**
**நய பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான்**
**நயஇடைக்காட்டுப் புலவன் தென் சொல்"**
**நய - இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார் ? காதல் மிகு கேண்மையினான் யார்?**

★ கழிந்த பெரும் கேள்வியினான் - மன்னன் குசேல பாண்டியன் ★ காதல் மிகு கேண்மையினான் - புலவர் இடைக்காடனார்

**26. முரசுக் கட்டிலில் கண்ண யர்ந்தவர் யார்? அவருக்குக் கவரி வீசியவர் யார்?**

★ கண்ண யர்ந்தவர் - புலவர் மோசி கீரனார் ★ கவரி வீசியவர் - பெருஞ்சேரல் இரும்பொறை

**27. இடைக்காடனார் இறைவனிடம் சினந்து கூறியது என்ன?**

★ பாண்டியன் என்னை இகழவில்லை. ★ பார்வதி தேவியையும் உன்னையும் அவமதித்தான்.

**28. மருவூர்பாக்க வணிக வீதிகளில் விற்கப்பட்ட பொருள்களை எழுதுக.**

★ வண்ணக்குழம்பு ★ சுண்ணப்பொடி ★ சாந்து ★ அகில் ★ சந்தனம்

★ உரோமம் ★ பருத்தி ஆடைகள் ★ முத்துகள் ★ மணிகள்

**29. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

★ மக்கள் பழங்கள் விரும்பி உண்ணலாம் ஆனால் பழங் கள் விரும்பக்கூடாது.

**30. உறங்குகின்ற கும்பகன்ன எழுந்திராய் எழுந்திராய் கால தூதர்கையில் புறங்குவாய் புறங்குவாய் - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை புறங்கச் சொல்கிறார்கள்?**

★ உறங்குகின்ற கும்பகன்னனை

★ உனது மாய வாழ்வு விழத் தொடங்கிவிட்டதைக் காண எழுந்திராய் எனச் சொல்லி எழுப்புகிறார்கள்.

★ எமதூதர் கையில் உறங்கச் சொல்கிறார்கள்.

**31. சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.**

★ ஒல்லியான தண்டு மலரைத் தாங்குகிறது. ★ மென்மையான அன்பே உலகைக் காக்கிறது. கவித்துவம் அருமை.

**32. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.**

★ கரம்பு - மறைத்தல் ★ இடும்பை - துன்பம்

**33. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.**

★ உழைத்ததால் கிடைத்த ஊதியம். அதுவே வலிமையான ஆயுதம்.

**34. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?**

★ பாசவர் - வெற்றிலை விற்பவர் ★ வாசவர்-நறுமணப் பொருள்கள் விற்பவர்

★ பல்நிண விலைஞர்- இறைச்சி விற்பவர் ★ உமணர்- உப்பு விற்பவர்

**35. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?**

★ மன்னரது வரலாறு, பெருமை முதலான செய்திகள் காலம் கடந்தும் நின்று நிலைக்க வேண்டும் என்பதே நோக்கம் ஆகும்.

**36. "கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க் உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"**

**அ ) அடியெதுகையை எடுத்தெழுதுக.** ★ அடியெதுகை - கொள்வோர் உள்வாய்

**ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக.** கொள்க, குரைக்க ★ கொள்க, குரைக்க - வியங்கோள்வினை முற்று

**37. மாற்றம் குறித்து கண்ணதாசனின் கூற்றை எழுதுக.**

★ மாற்றம் எனது மானிடத்தத்துவம். ★ அரசியல், ஆன்மீகம், திரைப்படம் கண்டவர்.

★ மாறும் உலகின் மகத்துவம் அறிந்தவர்.

**38. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

★ அன்று கவிஞர் வேணுகோபாலன் சாளரத்தை வயதானபோதும் தூய்மை செய்தார். இன்று காலக்கழுதை கட்டெறும்பான வேளையிலும், தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி கொண்டு வண்ணம் பூசுகிறார்.

**39. "காய்மணியாகு முன்னர்க் காய்ந்தென காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?**

**உவமை**

★ இளம்நெற்பயிர் வளர்ந்து நெல்மணியாய் முதிர்வதற்குமுன் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்தது.

**கருத்து**

★ கருணையன் வளர்ந்து பெரியவனாகி உலகியல் அறிவதற்கு முன்னரே தாயை இழந்து வாடுகிறான்.

**40. இடைக்காடனார் கூற்றில் சொல்லின் வடிவாக நிற்பவர் யார்? சொல்லின் பொருளாக நிற்பவர் யார்?**

★ சொல்லின் வடிவாக நிற்பவர் - பார்வதி தேவி

★ சொல்லின் பொருளாக நிற்பவர் - சிவன்

**41. செங்கீரைப் பருவம் என்றால் என்ன?**

★ பிறந்து ஆறு மாதமான குழந்தை தன் இரு கை ஊன்றி ஒரு காலினை மடக்கி ஆடும் பருவமே செங்கீரைப் பருவம் ஆகும்.

**42. சரயு நதி எங்கெல்லாம் பரவிப் பாய்கிறது?**

★ சரயு நதி சோலைகள், காடுகள், பொய்கைகள், தடாகங்கள், கமுகந்தோட்டங்கள், வயல்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் பரவிப் பாய்கிறது.

**43. வீரமாமுனிவர் கருணையன் துயரை விளக்கக் கையாண்ட உவமைகளை எழுதுக.**

**கருணையன் துயரம்**

★ மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்டமலரைப் போலவும்

★ முனையில் தீயும் நஞ்சும் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்ட புண்ணின் வலி போலவும்

★ துணையைப் பிரிந்த பறவையைப் போலவும் துயரம் கொண்டான் .

**44. தேம்பாவணியின் பாட்டுடைத்தலைவர் யார்?**

★ கிறித்துவின் வளர்ப்புத் தந்தை - சூசையப்பர்

**45. கருணையன் பூமித்தாயிடம் வேண்டியது என்ன?**

★ பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக.

**46. என்மனமே நூலாகும் நுண்மையுற்றாலொழிய - பொருளை விளக்குக**

★ பூத் தொடுப்பதற்குப் பயன்படும் நூல் மென்மையாக இருத்தல் வேண்டும்.

★ பூத்தொடுப்பவர் மனம் நூலினும் மென்மையாக இருக்க வேண்டும்.

## விடைக்கேற்ற வினா அமைக்க

**1. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.**

★ எதற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

**2. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.**

★ *1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்ட உயர் எது?*

**3. உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது.** ★ உண்மையான செல்வம் என்பது எது?

**4. பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.**

★ பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று எது?

**5. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.**

★ உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

**6. தலைமைச்செயலகத்துக்குகோப்புகளையும்செய்திகளையும்பரிமாறிக்கொண்டமுதல்நேர்வழிக்கணினிதிருவள்ளுவரே.**

★ தலைமைச் செயலகத்துக்கு கோப்புகளையும் செய்திகளையும் பரிமாறிக் கொண்ட முதல் நேர்வழிக்கணினி எது?

**7. தொல்காப்பியர் உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்.**

★ உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்று கூறியவர் யார்?

**8. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.**

★ எந்தப் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று?

**9. இவ்வுலகை இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது.** ★ இவ்வுலகை இனிமேல் ஆளப்போவது எது?

**10. மொழிப்பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.**

★ மொழிப்பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் எவற்றை நாம் எளிதில் பெறமுடியும்?

**11. ஜெயகாந்தன் தமிழிலக்கிய உலகில் மிகப்பெரிய ஆளுமையாகத் திகழ்கிறார்.**

★ தமிழிலக்கிய உலகில் மிகப்பெரிய ஆளுமையாகத் திகழ்பவர் யார்?

**12. அமெரிக்காவில்மினசோட்டாதமிழ்ச்சங்கம்வாழையிலைவிருந்துவிழாவைஆண்டுதோறும்கொண்டாடிவருகின்றனர்.**

★ வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் அமெரிக்காவில் கொண்டாடி வரும் தமிழ்ச்சங்கம் எது?

**13. கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம் எனப்படும்.** ★ கரகாட்டம் என்றால் என்ன?

**14. கரகாட்டம் நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.**

★ கரகாட்டம் நடனம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

**15.** **ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

ஐ. நா அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு என்பது (Translation) எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும் போது மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ. நா அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பர். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.

**இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக**

**1) மொழி பெயர்ப்பு என்பது யாது?**

**2) விளக்குவது என்றால் என்ன?**

**3) ஐ. நா அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது?**

**4) தமிழாக்கம் தருக -** Headphone

**5) ஐ. நா அவையில் மொழிபெயர்ப்பாளர் எங்கு இருப்பார்?**

## மொழிப்பயிற்சிகள்

### சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

**1. தேன், வான், மழை, செய்** ★ தேன்மழை, செய்வான், வான் மழை, செய்தேன்

**2. பூ மணி, மேகலை, விளக்கு** ★ மணிமேகலை, மணி விளக்கு, பூ மணி, பூ விளக்கு

**3. பொன், விலங்கு, வான், மழை** ★ பொன் மணி, பொன் விலங்கு, பொன் மழை, வான் மழை

**4. தேன், செய், மணி** ★ தேன்பூ, செய்தேன், பூ மணி, பூந்தேன்

### குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச்சுவை, மனிதகுலமேன்மை, விடுமுறைநாள்

**விடைகள்**

★ குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

★ சுவைக்காத இளநீரும் பயன் தருமா ?

★ காப்பியச் சுவை இல்லாத கதை உண்டா?

★ மனிதகுல மேன்மை அறியாத மனிதருமுண்டோ?

★ விடுமுறை நாள் இல்லாத வாரம் தான் உண்டோ?

### எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| ★ நாற்றிசையும் செல்லாத நாடில்லை | ★ நான்கு | |
| ★ எறும்புந்தன் கையல் எண்சாண் | ★ எட்டு | அ |
| ★ ஐந்து சால்பு ஊன்றிய தூண் ஐந்து | ★ ஐந்து | ரு |
| ★ நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | ★ நான்கு இரண்டு | |
| ★ ஆனை ஆயிரம் அமரிடை வென்ற | ★ ஆயிரம் | க000 |

### சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க

(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

★ முதல் இரண்டை நீக்கினாலும் வாசனைதரும், நீக்காவிட்டாலும் வாசனை தரும். விடை - நறுமணம்

★ பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும் விடை - புதுமை

★ இருக்கும் போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை விடை - காற்று

★ நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும் விடை - விண்மீன்

★ ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம் விடை - காடு

### இரு சொற்களை ஒரேதொடரில் அமைத்து எழுதுக

**சிலை - சீலை** ★ சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தார்கள்.

**தொடு - தோடு** ★ தொடுசிகிச்சைக்காகத் தோடு கழற்றினேன்.

**மடு - மாடு** ★ வயலில் மேய்ந்த மாடு மடுவில் விழுந்தது.

**மலை - மாலை** ★ மாலை நேரத்தில் மலை ஏறாதே.

**வளி - வாளி** ★ வாளி நீர் சூறாவளியால் கவிழ்ந்தது.

**விடு - வீடு** ★ வீடுபேறு அடைய தீய ஒழுக்கத்தை விடு.

### தொடரைப் படித்து விடையைக் கண்டறிக

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

★ நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் கற்றல்.

★ விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு**.

★ கல் சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.

★ குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து**.

★ மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது **பூவில்**.

### எதிர்மறையான சொற்களை எழுதுக

★ மீளாத் துயர் - மீண்ட இன்பம்

★ கொடுத்துச் சிவந்த - கொடாமல் சிவக்காத

★ மறைத்துக் காட்டு - வெளிப்படுத்தி மறை

★ அருகில் அமர்க - தொலைவில் நிற்க

★ பெரியவரின் அமைதி - சிறியவரின் ஆரவாரம்

★ புயலுக்குப் பின் - தென்றலுக்கு முன்

### தொடரில் விடுபட்ட இடங்களை வண்ணங்களால் நிரப்புக

★ வானம் **கருக்கத்** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

★ அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது**.

★ **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

★ கண்ணுக்கு குளுமையாக இருக்கும் **பச்சை** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில்.

★ வெயிலில் அலைந்தால் உடல் **கருத்து**விடும்.

### பொருத்தமான சொற்களால் நிரப்புக

(தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, தோற்பவை, விருது, கவிழும், விருந்து)

★ விரட்டாதீர்கள் - பறவைக்கு **மரம் வீடு**

★ வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் **மரவீடு**

★ காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**

★ சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**

★ மலை முகட்டில் மேகம் **தங்கும்**

★ அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**

★ வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும்.

★ இதைத் தத்துவமாய் **தோற்பாவை கூத்து** சொல்லும்.

★ தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே **விருது**

★ வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**

### ஊர்ப்பெயர்களின் மருடவை எழுதுக

★ புதுக்கோட்டை - புதுகை

★ திருச்சிராப்பள்ளி - திருச்சி

★ உதகமண்டலம் - உதகை

★ கோயம்புத்தூர் - கோவை

★ நாகப்பட்டினம் - நாகை

★ புதுச்சேரி - புதுவை

★ கும்பகோணம் - குடந்தை

★ திருநெல்வேலி - நெல்லை

★ மன்னார்குடி - மன்னை

★ மயிலாப்பூர் - மயிலை

★ சைதாப்பேட்டை - சைதை

★ தஞ்சாவூர் - தஞ்சை

★ மாமல்லபுரம் - மல்லை

### எண்ணுப்பெயர்கள் இடம் பெறும் திருக்குறள் எழுதுக

★ தகுதியென ஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

★ ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டும்
நீள் வினையால் நீளும் குடி

★ காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின்
நாமம் கெடக்கெடும் நோய்

★ நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு

★ பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

★ படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

★ எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

★ கோளில் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

★ பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

## சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக

**கானடை**

★ கான் + அடை = காட்டைச் சேர் ★ கான் + அடை = காட்டுக்கு நடத்தல் ★ கால்நடை = காலால் நடத்தல்

**வருந்தாமரை**

★ வரும் + தாமரை = வருகிற தாமரை ★ வருந்தா + மரை = வருந்தாத மரை

★ வரும் + தா + மரை = வரும் தாவுகின்ற மான்

**பிண்ணாக்கு**

★ பிண்ணாக்கு = எண்ணெய் எடுத்த கழிவு ★ பிள் + நாக்கு = பிளவு

**பலகையொலி**

★ பலகை + ஒலி = பலகையின் சத்தம் ★ பல + கையொலி = பலரின் கைக்கட்டல்

★ பல + கை + ஒலி = பலவேறு சிறு ஒலிகள்

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக

(மந்தை, குவியல், குலை, கட்டு)

★ கல் - கற்குவியல் ★ பழம் - பழக்குலை ★ புல் - புற்கட்டு ★ ஆடு - ஆட்டு மந்தை

## தொடர்களில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை எழுதுக

1) உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னல் படுகின்றனர்.

★ புவியில் வாழும் மனிதர்களுள் சிலர் பழம் இருக்கக் காய் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி துன்பப்படுகின்றனர்.

2) வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.

★ வள்ளல் குமணன் ஏழ்மையால் வாடிவந்த கவிஞனுக்குத் தனது தலையை அளித்து மங்காப் பெருமை பெற்றான்.

3) நளனும் அவனுடைய துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை முகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.

★ நளனும் அவனுடைய மனைவியும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை மேகம் கண்ட மயில்போல மகிழ்ச்சி கொண்டனர்.

4) சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.

★ காவில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடித் தேன் உண்டன.

5) பசுப் போலச் சாந்தமும் புலிபோலத் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

★ ஆவினைப்போல அமைதியும் வேங்கை போலச் சீற்றமும் வேழம் போல் உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

### பழமொழிகளை நிறைவு செய்க

★ உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

★ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

★ உப்பிட்டவரை உள்ளளவும் நினை

★ விருந்தும் மருந்தும் மூன்று நாள் மட்டுமே

★ அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு.

### வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

1) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்டுமா?

★ காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா?

2) எல்லா பறவைகளுக்கும் காது உண்டு செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல் புறசெவிமடல் இருக்காது.

★ எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது.

3) பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

★ பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல், உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

### தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க

**5. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.** ★ அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன்.

**6. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.** ★ நிழல் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**7. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.**

★ ஏற்றமும் இறக்கமும் கொண்ட வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**8. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.**

★ மொழிபெயர்ப்புப் பகுதியைக் குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

**9. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.** ★ தொழில்நுட்பக் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

### கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க

| | |
|---|---|
| **இயற்கை - செயற்கை** | ★ கலைஞன் இயற்கைக் காட்சியை செயற்கையாக உருவாக்குகிறான். |
| **கொடு - கோடு** | ★ செல்வி அளவுகோல் கொடு கோடு போட்டு விட்டு தருகிறேன். |
| **கொள் - கோள்** | ★ உயர்ந்த குறிக்கோளை அடைய நம்பிக்கை கொள். |
| **சிறு - சீறு** | ★ சிறு பாம்பும் சீறும் |
| **தான் - தாம்** | ★ தான் என்ற ஆணவம் விடுத்து தாம் என்ற நட்புணர்வுடன் வாழு. |
| **விதி - வீதி** | ★ காமராசர் விதியை உழைப்பால் வென்று வீதியில் சிலையாக உள்ளார். |

### அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி அமைக்க

**10. அழைப்பு மணி ஒலித்தது, கயல்விழி கதவைத் திறந்தாள். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

★ அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

**11. தமிழரசி புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக )**

★ தமிழரசி புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்ககங்களில் அடுக்கிவைத்து, கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

**12. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)**

★ ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

**13. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

★ கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

**14. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றோடர்களாக மாற்றுக)**

★ ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றுவிட்டது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

### பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி எழுதுக

உங்களிடம் ஏழு கோல்டுபிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை ஒரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே சாக்ஸ்பிரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள். ஆல் தி பெஸ்ட்.

★ கோல்டு பிஸ்கட் - தங்கக்கட்டி
★ பஸ் - பயன்படுத்தி வெரிட்
★ பிஸ்கட் - கட்டியை
★ எக்ஸ்பெரிமெண்ட் - சோதனை
★ ரிப்பீட் - மீண்டும் மீண்டும்
★ ஆன்சரை விடையை
★ ஆல் தி பெஸ்ட் - வாழ்த்துகள்

### பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க

**வரப்போகிறேன்** ★ இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன்.

**இல்லாமல் இருக்கிறது** ★ பல தெருக்களில் மின்விளக்குகள் இல்லாமல் இருக்கிறது.

**கொஞ்சம் அதிகம்** ★ மழைக்காலங்களில் காய்கறி விலை கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

**முன்னுக்குப் பின்** ★ தலைவர், முன்னுக்குப் பின் முரணாகப் பேசினார்.

**மறக்க நினைக்கிறேன்** ★ நம்மை இகழ்ந்தவரை மறக்க நினைக்கிறேன்.

### தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக

| தொகைச்சொற்கள் | பிரித்து எழுதுதல் | தமிழ் எண்ணுரு |
|---|---|---|
| மூவேந்தர் | ★ மூன்று + வேந்தர் | |
| நாற்றிசை | ★ நான்கு + திசை | |
| முத்தமிழ் | ★ மூன்று + தமிழ் | |
| முப்பால் | ★ மூன்று + பால் | |
| இருதிணை | ★ இரண்டு + திணை | |
| ஐந்திணை | ★ ஐந்து + திணை | |
| நானிலம் | ★ நான்கு+ நிலம் | |
| அறுசுவை | ★ ஆறு + சுவை | |
| பத்துப்பாட்டு | ★ பத்து + பாட்டு | |
| எட்டுத்தொகை | ★ எட்டு+தொகை | |
| ஏழிசை | ★ ஏழு + இசை | |

### மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக

**மனக்கோட்டை** ★ தலைவர் பதவி கிடைத்துவிடும் என்று மனக்கோட்டை கட்டாதே.

**கண்ணும் கருத்தும்** ★ நான் தேர்விற்காகக் கண்ணும் கருத்துமாகப் படித்தேன்.

**அள்ளி இறைத்தல்** ★ புறாக்களுக்குத் தீனியை அள்ளி இறைத்தல் வேண்டும்.

**ஆறப்போடுதல்** ★ நல்ல செயல்களைச் செய்ய ஆறப்போடுதல் கூடாது.

## பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

**"தம்பி எங்க நிக்கிற?"** ★ "தம்பி எங்கே நின்று கொண்டிருக்கிறாய்?"

**"நீங்க சொன்ன எடத்துல தாண்ணே"** ★ "நீங்கள் சொன்ன இடத்தில்தான் நின்று கொண்டிருக்கிறேன்."

**"எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது"** ★ "என் எதிர்ப்பக்கத்தில் ஒரு தேநீர் விடுதி ஒன்று இருக்கிறது."

**"அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவானக் கூட்டிக்கிட்டு வந்தேன்"**

★ "அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனை அழைத்துக் கொண்டு வருகிறேன்."

## உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக

**தாமரை இலை நீர் போல** ★ அதிகாரிகளிடம் தாமரை இலை நீர் போலப் பழகுக.

**மழைமுகம் காணாப் பயிர் போல** ★ தாயின் முகத்தைக் காணாக் குழந்தை மழை முகம் காணாப் பயிர் போல ஏங்கியது.

**கண்ணினைக் காக்கும் இமைபோல**

★ சாமியார்கள் கண்ணினைக் காக்கும் இமைபோல பணப்பெட்டகத்தைக் காத்து வருகின்றனர்.

**சிலை மேல் எழுத்துபோல**

★ திருக்குறளால் தமிழ் மொழியின் பெருமை சிலைமேல் எழுத்து போல நிலைத்து நிற்கும்.

## பாடலில் இடம் பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக் கொம்பனும் பணியும் அறம்பாடும் ஜவாது ஆகவியை காசிம்புலவரை குணங்குடியாரை சேகனாப் புலவரை செய்குதம்பிப் பாவலரை சீர் தமிழ் மறக்காதன்றோ

★ கம்பன் ★ உமறுப்புலவர் ★ ஜவ்வாது புலவர் ★ காசிம்புலவர்

★ குணங்குடிமஸ்தான் சாகிப் ★ சேகனாப் புலவர் ★ செய்குதம்பிப் பாவலர்

## தனி மொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர் மொழிகளாக்குக

(தேன், நூல், பை, மலர், வா)

★ தேன் - தேன் உன் ★ நூல் - நூல் பல கற்றான் ★ பை - புத்தகப் பை

★ மலர் - மலர் மாலை ★ வா - வா போகலாம்

## வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற் பெயர்களை உருவாக்குக

(காண், சிரி, படி, தடு)

★ காண் - காட்சி, காணுதல் ★ சிரி - சிரிப்பு, சிரித்தல்

★ படி - படிப்பு, படித்தல் ★ தடு - தடுப்பு, தடுத்தல்

## வண்ணமிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக

★ **அன்புச் செல்வன்** திறன் பேசியின் **தொடுதிரை**யில் படித்துக் கொண்டிருந்தார்.

★ அன்புச் செல்வன் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை ★ தொடுதிரை - வினைத் தொகை

★ அனைவருக்கும் **மோர்ப்பானை**யைத் திறந்து **மோர் கொடுக்கவும்**.

★ மோர்ப்பானை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

★ மோர் கொடுக்கவும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

★ **வெண்டைக்காய்**ப் பொரியல் **மோர்க்குழம்பு**க்குப் பொருத்தமாக் இருக்கும்.

★ வெண்டைக்காய், மோர்க்குழம்பு - இரு பெயரொட்டுப் பண்புத் தொகைகள்

★ தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டியில் விளையாடுகின்றன.

★ தங்கமீன்கள் - உவமைத்தொகை ★ தண்ணீர்த் தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொகை

### சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க

★ இன்சொல் - பண்புத் தொகை ★ இன் சொல் கூறுதல் சான்றோர்க்கு ஆக.

★ எழுகதிர் - வினைத்தொகை ★ வைகறையில் எழுகதிர் ஒளியால், சொலையில் பூக்கள் பூத்துக் குலுங்கின.

★ கீரி பாம்பு - உம்மைத் தொகை ★ பணியாளர் இருவரும் எப்போதும் பாம்பும் கீரியும் போல சண்டையிடாதீர் .

★ பூங்குழல் வந்தாள் - அன் மொழித் தொகை ★ பூங்குழல் வந்தாள்

★ மலைவாழ்வார் - வேற்றுமைத் தொகை ★ மலை வாழ்வாரை மலையாளிகள் என்பர்.

★ முத்துப்பல் - உவமைத் தொகை ★ தேவி சிரிப்பில் முத்துப்பல் தெரியும்.

### வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக

★ பழகப் பழகப் பாலும் புளிக்கும் - அடுக்குத் தொடர்

★ வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன் - பெயரெச்சத் தொடர்

★ மேடையில் நன்றாகப் பேசினான் - வினையெச்சத் தொடர்

★ வந்தார் அண்ணன் - வினைமுற்றுத் தொடர்

★ அரிய கவிதைகளின் தொகுப்பு இது - வேற்றுமைத் தொடர்

### கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக

★ அமைச்சர், நாளை விழாவிற்கு வருகிறர். காலவழுவமைதி

★ அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள். இட வழுவமைதி

★ இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால், அதை அனைவரும் ஏற்பர்என்று கூறினான். இட வழுவமைதி

★ சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம். கால வழுவமைதி

★ செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். பால் வழுவமைதி

### அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக

**தந்தை மகனே நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா? என்று சொன்னார். (ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)**

★ தாய் மகளே நாளை உன் தோழி அழகியை அழைத்து வா என்று சொன்னாள்.

**அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும் போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)**

★ அக்கா நேற்று வீட்டுக்கு வந்தார். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்.

**இதோ முடித்துவிட்டேன் என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)**

★ இதோ முடித்துவிட்டேன் என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்.

**அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)**

★ நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

**குழந்தை அழுகிறாள் பார்.** **(வழுவை வழாநிலையாக மாற்றுக)**

★ குழந்தை அழுகிறது பார்.

### வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக

★ காமராசர் நகர் எங்கே இருக்கிறது? இந்த வழியாகச் செல்லுங்கள். - அறியா வினா, சுட்டுவிடை

★ எனக்கு எழுதித் தருவாயா? என்ற வினாவுக்கு உனக்கு எழுதித் தராமல் இருப்பேனா? என்று விடையளிப்பது . . .

★ வினா எதிர் வினாதல் விடை

### அட்டவணையில் விடுபட்டதை எழுதுக

| வேர்ச்சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமை தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | சொன்ன அம்மா | சொல்லிச் சென்றார் | அம்மா சொல்லுக | கதையைச் சொன்னார் |
| தா | அரசர் தந்தர் | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக | பரிசைத் தந்தர் |
| பார் | துளிர் பார்த்தாள் | பார்த்த துளிர் | பார்த்து சிரித்தால் | துளிரே பார்க்காதே | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழ்ந்தை வந்தது | வந்த குழ்ந்தை | வந்து அழுதது | குழந்தையே வா | தாயுடன் வந்தது |

### தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க

★ நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல்; புதைத்தல்)

★ காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்**, திருந்த உதவுகிறது. (சுடுதல் கட்டல்)

★ காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது. (தொடுதல்; தொடுத்தல்)

★ பசுமையான **காட்சி**யைக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது. (காட்சி; காணுதல்)

★ பொது வாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பில்** அவரை மிஞ்ச, ஆள் கிடையாது. (நடித்தல்; நடிப்பில்)

### நிறுத்தக் குறி

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டன இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

★ சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன், 'கொல்லி வெற்பன்' எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள், மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

## இலக்கண குறுவினா

**1. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

★ தொடர்மொழி - வேம் + கை = வேகின்ற கை

★ பொதுமொழி - வேங்கை மரம், வேகின்ற கை

**2. உடுப்பதூடம் உண்பதூடம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ் - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக**

★ இன்னிசை அளபெடை ★ இனிய ஓசைக்காகக் குறில், நெடிலாகி அளபெடுப்பது.

**3. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.**

★ தண்ணீர்குடி தண்ணீரைக்குடி அவள் தண்ணீரைக் குடித்தாள்.

★ தயிர்க்குடம் தயிரை உடையகுடம் அவள் தயிரை உடைய குடத்தை எடுத்து வந்தாள்.

**4. எழுது என்றான் என்பது விரைவு காரணமாக எழுது எழுது என்றாள் என அடுக்குத் தொடரானது சிரித்துப் பேசினாள் என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?**

★ சிரித்துப் பேசினாள் என்பது சிரித்துச் சிரித்துப் பேசினாள்.

**5. பாரதியார் கவிஞர் நூலகம் சென்றார் அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?**

★ பாரதியார் கவிஞர் - பெயர்ப்பயனிலை ★ நூலகம் சென்றார் - வினைப் பயனிலை

★ அவர் யார் ? - வினாப் பயனிலை

**6. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

★ செல்வேன் என எதிர்காலத்தில் என அமைதல் வேண்டும்.

★ செல்கிறேன் என நிகழ்காலத்தில் அமைந்துள்ளது காலவழுவமைதி.

**7. சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான் புதியவர்களைப் பார்த்துக் கத்துவனே தவிரக் கடிக்க மாட்டான் என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயை பற்றிப் பெருமையாகக் கூறினார். இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக**

★ சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும். புதியவர்களைப் பார்த்துக் கத்துமே தவிரக் கடிக்காது என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

**8. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?
இதோ. . . இருக்கிறதே சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

★ மின் விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் உள்ளது? - அறியா வினா ★ மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - ஐயவினா

**9. முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள் கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

★ ஆற்று நீர்ப் பொருள்கோள் ★ ஆற்று நீர் போலத் தொடக்கம் முதல் முடிவு வரை பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது.

**10. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.**

★ முதற்பொருள் நிலம் - காடு பொழுது - மாலை ★ கருப்பொருள் உணவு - வரகு

**11. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

★ உழவர்கள் மலையில் உழுதனர்.

★ திருத்தம்: குறவர்கள் மலையில் உழுதனர்.

★ முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

★ திருத்தம்: தாழை மடலைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**12. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

★ வெட்சி - கரந்தை ★ வஞ்சி - காஞ்சி ★ உழிஞை - நொச்சி

**13. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

★ இரண்டு அடிகளில் வெண்பாவின் பொது இலக்கணத்துடன் அமைவது.

★ (எ.கா) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

**14. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

★ வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும், கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசையும் உரியன.

**15. தீவக அணியின் வகைகள் யாவை?**

★ தீவக அணி மூன்று வகைப்படும். அவை - ★ முதல் நிலை தீவகம் ★ இடைநிலை தீவகம் ★ கடைநிலைத்தீவகம்

**16. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுவாடுகள் யாவை?**

| வ எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1 | ★ தொழிலைக் குறிக்கும் | ★ கருத்தாவைக் குறிக்கும் |
| 2 | ★ காலம் காட்டாது | ★ காலம் காட்டும் |
| 3 | ★ படர்க்கை இடத்திற்கு உரியது | ★ மூவிடத்திற்கும் உரியது |

**17. வெண்பாவின் வகைகள் யாவை?**

★ குறள் வெண்பா ★ சிந்தியல் வெண்பா ★ நேரிசை வெண்பா

★ இன்னிசை வெண்பா ★ பஃறொடை வெண்பா

**18. அளபடை என்றால் என்ன?**

★ ஓசையை நிறைவு செய்ய நீண்டு ஒலிப்பது.

**19. வழுவமைதி என்றால் என்ன?**

★ இலக்கணம் மீறி பேசப்படுவதையும் எழுதப்படுவதையும் மரபுக் கருதி, காரணம் கருதி ஏற்றுக் கொள்வது.

**20. பொருள்கோள் என்றால் என்ன?**

★ தொடருக்கு ஏற்ப இணைத்தும் மாற்றியும் பொருள் கொள்வது.

**21. வினா எத்தனை வகைப்படும்? யாவை?**

★ வினா ஆறு வகைப்படும். அவை: ★ அறிவினா ★ அறியாவினா ★ ஐயவினா

★ கொளல்வினா ★ கொடை வினா ★ ஏவல் வினா

**22. விடை எத்தனை வகைப்படும்? யாவை?**

★ விடை எட்டு வகைப்படும். அவை:

★ சுட்டு விடை ★ நேர்விடை ★ மறைவிடை ★ ஏவல் விடை

★ வினா எதிர் வினாதல் விடை ★ உற்றது உரைத்தல் விடை ★ உறுவது கூறல் விடை ★ இனமொழி விடை

**23. நான்கு வகை பாக்களையும் அவற்றிற்குரிய ஓசைகளையும் எழுதுக.**

★ வெண்பா - செப்பலோசை ★ ஆசிரியப்பா - அகவலோசை ★ கலிப்பா - துள்ளல் ★ வஞ்சிப்பா - தூங்கல்

## உரை நடை சிறுவினா வினா

**1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

★ கத்தரி நாற்று நடவு செய்கிறார்கள்.
★ தென்னம்பிள்ளை வளர்ந்துள்ளது.
★ வாழைக்கன்றுகளை வரிசையாக நட வேண்டும்.
★ நெல் நாற்று பசுமையாக உள்ளது.
★ மாங்கன்று முளைத்துள்ளது.

**2. தாவரங்களின் இலை வகை, கொழுந்து வகை குறித்து எழுதுக.**

**இலை**

★ புளி, வேம்பு - இலை
★ நெல், புல் - தாள்
★ சோளம், கரும்பு - தோகை
★ தென்னை, பனை - ஓலை
★ காய்ந்த இலை - சருகு
★ காய்ந்த தாள், தோகை - சண்டு

**கொழுந்து**

★ நெல், புல் - தளிர்
★ புளி, வேம்பு - முறி
★ சோளம் - குருத்து
★ கரும்பு - கொழுந்தாடை

**3. கெட்டுப்போன காய்கனிகளுக்கு வழங்கப்படும் பெயர்களை எழுதுக.**

★ சூம்பல் - நுனிசுருங்கியகாய்
★ கவியம் - சுருங்கிய பழம்
★ சொத்தை - புழு பூச்சி அரித்த காய் கனி
★ வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
★ அளியல் - குளுகுளுத்த பழம்
★ அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம்

**4. நான்கு திசைகளிலிருந்தும் வீசுகின்ற காற்றின் பெயர்களை எழுதுக.**

★ கிழக்கு - கொண்டல் (குளிர்ச்சியான காற்று)
★ மேற்கு - கோடை (வெப்பக்காற்று)
★ வடக்கு - வாடை (ஊதைக்காற்று)
★ தெற்கு - தென்றல் (இதமான காற்று)

**5. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும், கொன்றை வேந்தனும் பதிவு செய்துள்ள கருத்துகள் யாவை?**

**குறுந்தொகை**

★ இல்லத்தின் வாயிலை மூடுவதற்கு முன் உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? எனக் கேட்கும் வழக்கம் இருந்தது.

**கொன்றை வேந்தன்**

★ "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" - என்று கூறுகிறது.

**6. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?**

★ முல்லை - வரகு, தினை, சாமை, முதிரை
★ மருதம் - செந்நெல், வெண்ணெல்

**7. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர். திருவிழா காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது. இப்படியாக கால மாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக?**

★ இன்று வீடுகளில் திண்ணை வைத்துக் கட்டுவதில்லை. உறவினர்களே விருந்தினர்களாக வருகின்றனர். திருமணத்தில் கூட விருந்தினரை கவனிக்க திருமண ஏற்பாட்டாளர்கள் உள்ளனர்.

**8. ஏழ்மையிலும் விருந்தோம்பல் குறித்து எழுதுக.**

★ புறநானூறு விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் குத்தி விருந்து படைத்தாள் தலைவி, என்று கூறுகிறது.
★ மேலும் சீறியாழை பணையம் வைத்து விருந்தளித்தான் என்றும் கூறுகிறது.
★ பெரியபுராணம் இளையான்குடி மாறநாயனார் விதைத்துவிட்டு வந்த முளை நெல்லை அரித்து சமைத்து உணவிட்டார் என்று கூறுகிறது.

**9. மனிதனின் மூளையைப் போன்றது செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள் மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத் தொழில் நுட்பம் போம்படுத்தப்படுகிறது. இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு எதிர்காலத் தொழில் நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.**

★ அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது. ★ பழைய தவறான புரிதல்களை நீக்குகிறது.

★ எண்ணங்களை மாற்றுகிறது. ★ கண்காணிப்பு கருவி அசைவு நிகழும் பக்கம் திரும்புகிறது.

★ திறன்பேசி கோடிக்கணக்கான சொற்களுள் குறிப்பிட்ட சொல்லை ஒரு நொடிக்குள் தேடித் தருகிறது.

★ விடுதி, வங்கிகளில் ரோபோக்கள் சேவை செய்கிறது. ★ தண்ணீர் கொண்டு வருகிறது.

★ குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுகிறது.

★ ஊர்திகளை செயற்கை நுண்ணறிவு இயக்கும். விபத்து குறையும்.

★ நோய்த் தடுப்பு, முதுமைகால பாதுகாப்பு என அனைத்திற்கும் தீர்வு காணும்.

**10. மெய்நிகர் உதவியாளர் குறித்து எழுதுக.**

★ கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல திறன் பேசியில் இயங்கும் மென்பொருள் இது.

★ நாம் கட்டளையிடும் செயல்களை திறன்பேசியில் தேடித்தரும். பிறருக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கும்.

★ நமது செயல்பாடுகள் பற்றி கருத்து தெரிவிக்கும்.

**11. மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதால் விளையும் பயன்களைப் பட்டியலிடுக.**

★ அனைத்துலக அறிவைப் பெறமுடியும். ★ தொழில்துறையில் தன்னிறைவு பெற முடியும்.

★ மனிதவளம் முழுவதையும் பயன்படுத்த முடியும். ★ வேலைவாய்ப்பு அதிகமாகும்.

★ சாதி, இன, மொழி வேறுபாடு இல்லா நிலை உருவாகும்.

**12. மக்கள் பயன்பாட்டின் பதிவுகள் நிகழ்கலைகள் - விளக்குக**

★ சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகள் இவை. ★ மகிழ்ச்சி தருபவை இவை.

★ சமுதாய ஆவணங்கள். ★ செய்தி தரும் ஊடகங்கள்.

**13. வாய்மையைச் சிறந்த அறமாகப் போற்றும் சங்க இலக்கியச் சான்றுகளை எழுதுக.**

★ பொய்யாச் செந்தா - புறநானூறு ★ பொய்படுவறியா வயங்கு செந்நா - புறநானூறு

★ பிழையா நன்மொழி - நற்றிணை ★ பொய்மொழிக் கொடுஞ்சொல் - நற்றிணை

**14. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

★ அறிவியல் மனிதனின் அறிவை விரிவாக்குகிறது. ★ பழைய தவறான புரிதல்களை நீக்குகின்றது.

★ எண்ணங்களை மாற்றுகிறது. ★ கண்காணிப்புக் கருவி நம் பணியை எளிதாக்குகிறது.

★ அலைபேசி உலகையே நம் கண்முன் கொணர்கிறது. ★ விடுதி, வங்கிகளில் ரோபோக்கள் சேவைசெய்கின்றன.

**15. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார் அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வாறு எடுத்துரைப்பீர்கள்?**

★ கல்வியே சிறந்த செல்வம் என்றும் அழிவில்லாதது.

★ பிச்சை புகினும் கற்கை நன்றே என்பர்.

★ அரசு தரும் விலையில்லா கல்வியை வேண்டாம் என்று சொல்லலாமா?

★ கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

★ இளமையில் கல்.

★ சிறு வயதில் வேலைக்குப் போனால் தண்டனை உண்டு.

**16. கரகாட்டம் , கரகச் செம்பு பற்றி குறிப்பு வரைக.**

**கரகாட்டம்**

★ மக்களால் மிகவும் விரும்பப்படும் கலை.

★ கரகச் செம்பை தலையில் வைத்து ஆடுவர்.

★ கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படும்.

**கரகச் செம்பு**

★ கரகச் செம்பு தலையில் நன்கு படிய அதன் அடிப்பகுதி தட்டையாக இருக்கும்.

★ செம்பினுள் அரிசி அல்லது மணலை நிரப்புவர்.

★ மேல்பகுதியில் மூங்கில் குச்சியுடன் கிளி பொம்மை வைத்து ஆடுவர்.

**17. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.**

★ இடம்: ம.பொ.சி அவர்களின் சிற்றகல் ஒளி பாடத்தில் இடம் பெற்றுள்ளது.

★ பொருள்: உயிரைக் கொடுத்தேனும் சென்னையைக் காக்க வேண்டும்.

★ விளக்கம்: சென்னையை ஆந்திராவிற்கு பிரிக்க நினைத்தனர். அப்போது ம.பொ.சி இவ்வாறு கூறினார்.

**18. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எ.கா. தருக.**

| அறம் | அன்று | இன்று |
|---|---|---|
| **வணிகம்** | ★ வணிக நோக்கம் இல்லை | ★ பயன்கருதியே வணிகம் |
| **போர்** | ★ போர் அறம் பின்பற்றினர் | ★ சாதி மத இன போர் செய்கின்றனர் |
| **அரசியல்** | ★ நீர்வளம், நிலவளம் பெருக்கி | ★ தங்களை வளமாக்கிக் மக்களைக் காத்தனர் |
| **கொடை** | ★ இல்லாதவருக்கு வாரி வழங்கினர் | ★ உடன் பிறந்தவருக்கும் கூட கொடுப்பது இல்லை |
| **உதவி** | ★ துன்புற்றவருக்கு உதவினர் | ★ கானொலியில் பரப்பி மகிழ்கின்றனர் |

**19. ஜெயகாந்தன் தன் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத்தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை பொய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

★ தோல்வி நிச்சயம் என்று எண்ணித் தோற்றால் அதுவும் வெற்றியே என எண்ணுபவர் கதை மாந்தர்.

★ கதை நாயகன் பிச்சைக் காரனுக்குத் தானம் செய்கிறான்.

★ பிச்சைக் காரனும் வாழ்த்துகிறான்.

★ சூழ்நிலையால் மனம் மாறிய நாயகன் இரண்டணா எடுக்கிறான். சாபம் வாங்குகிறான்.

★ பணம் இல்லாததால் ஊருக்கு நடந்தே செல்கிறான்.

★ அவன் செல்ல வேண்டிய ரயில் விபத்துக்குள்ளாகிறது. தர்மம் காப்பாற்றிதா? என்றால் விடை தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது.

## உரைப்பத்தி வினா விடை

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக .**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் மை இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் புறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு. விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

**அ) விருந்தினர் என்போர் யாவர்?**

★ முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

**ஆ) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?**

★ விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

**இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

★ விருந்தோம்பல்

## செய்யுள் சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?**

★ அழகாய் அமைந்த அன்னை மொழி.
★ பழமைக்கும் பழமையானது.
★ புதுமைக்கும் புதுமையானது.
★ குமரிக்கண்டத்தில் அரசாண்டது.
★ பாண்டியன் மகளாகப் பிறந்தது.
★ சங்க இலக்கியமாய் விளங்குவது.
★ திருக்குறளின் பெருமையாய் இருப்பது.

**2. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.**

| வ எண் | தமிழ் | கடல் |
|---|---|---|
| 1 | ★ இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழால் வளர்ந்தது. | ★ முத்தினைத் தருகிறது. |
| 2 | ★ முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | ★ மூன்றுவகைச் சங்குகளைத் தருகிறது. |
| 3 | ★ ஐம்பெருங்காப்பியங்களை உடையது. | ★ வணிகக் கப்பல்களை உடையது. |
| 4 | ★ சங்கப் பலகையில் அமர்ந்து புலவர்கள் காத்தனர். | ★ கடலலைகள் சங்குகளை காக்கின்றன. |

**3. சோலைக் (பூங்கா) காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.**

★ சோலைக்காற்று: நான் வாழும் இடம் சோலைகளும் வனங்களும். நீ?
★ மின்விசிறிக் காற்று: நான் வாழும் இடம் வீடும் அலுவலகங்களும்.
★ சோலைக்காற்று: மாலை நேரங்களில் என்னைத் தேடி மக்கள் வருவர்.
★ மின்விசிறிக் காற்று: வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்கு குளிர்ந்த காற்றை நான் தருவேன்.
★ சோலைக்காற்று: மின்சாரம் இல்லை எனில் நீ இல்லை . நான் இயற்கையானவன்.
★ மின்விசிறிக் காற்று: ஆம், எனக்கு விலை உண்டு நீ விலை மதிப்பற்றவன். நீயே சிறந்தவன்.

**4. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக. குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

★ மழை நின்றது.
★ சில்லெனக் காற்று வீசுகிறது.
★ குளித்த மரங்கள் தலையாட்டியதால் இலைகள் நீர் தெளிக்கின்றன.
★ என் மேனியில் பட்டதால் மெய் சிலிர்க்கிறது.
★ பள்ளத்தில் தேங்கிய நீரில் சிறுவர்கள் குதித்து விளையாடுகிறார்கள்.
★ பயந்த சிறுவர்கள் காகிதக் கப்பல் விட்டு மகிழ்கின்றனர்.
★ ஈர நிலம், சில்லென்ற அனுபவம் எல்லையில்லா மகிழ்ச்சி எல்லா உயிர்களுக்கும்.

**5. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?**

★ ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள் தெய்வத்தை தொழுது நிற்பர்.
★ அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கவனிப்பர் அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையாய் முடியும்.
★ தீய சொல்லாயின் தீயதாய் முடியும் என்று எடுத்துக் கொள்வர்.

**6. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?**

★ பரிசில் பெற்ற கூத்தன் பரிசில் பெறப் போகும் கூத்தனை அழைத்தான்.
★ அசோக மரங்கள் வழியாகச் செல்லுங்கள்.
★ சிற்றூரை அடையுங்கள்.
★ நன்னனின் கூத்தன் என்று சொல்லுங்கள்.
★ உரிமையுடன் வரவேற்பர்.
★ உறவினர் போல் பழகுவர்.
★ நெய்யில் பொறித்த மாமிசத்துடன் தினைச் சோற்றை வழங்குவார்கள்.

**7. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

★ நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணை மருத்துவர் கத்தியால் அறுத்தாலும் அவரை நோயாளி நேசிப்பார்.

★ எவ்வளவு துன்பத்தைத் தந்தாலும் வித்துவக் கோட்டு அன்னையை மாளாத காதல் நோயாளன் போல் நேசிப்பேன்.

**8. காசிக்காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் முறையை எழுதுக.**

★ முகமலர்ச்சியோடு வரவேற்றல்.
★ அருகில் அமர வைத்தல்.
★ மனம் மகிழப் பேசுதல்.
★ இன்முகத்தோடு பசி ஆற்றுவித்தல்.
★ விடைபெறும் போது வாயில் வரை செல்லல்.
★ புகழுதல், ஆகியன விருந்தோம்பும் முறையாகும்.

**9. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்?**

★ இடைக்காடனார் குசேல பாண்டியன் முன்பு பாடினார்.

★ மன்னன் புலவரை அவமதித்தான். புலவர் இறைவனிடம் முறையிட்டார்.

★ இறைவன் கோவிலை விட்டு நீங்கினார்.

★ இறைவனின் அருளைப் பெற புலவருக்கு சிறப்புச்செய்தான்.

**10. வைத்தியநாதபுரி முருகன்குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

| வைத்தியநாதபுரி முருகனின் உடலில் ஆடிய அணிகலன்கள் | |
|---|---|
| **உறுப்பு** | **ஆடிய அணிகலன்கள்** |
| ★ கால்கள் | ★ கிண்கிணிச் சிலம்பு ஆடியது |
| ★ இடையில் | ★ அரைஞாண் அரைவடம் ஆடியது |
| ★ நெற்றியில் | ★ பொட்டும் , வட்டச்சுட்டியும் ஆடியது |
| ★ காதுகளில் | ★ குழையும் , குண்டலமும் ஆடியது |
| ★ உச்சிக் கொண்டையில் | ★ முத்துக்கள் ஆடியது |

**11. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.**

★ அமைச்சருக்கும் நமக்கும் தொழில் செய்வதற்குத் தேவையான கருவி வேண்டும். இருவரும் செய்முறை அறிதல் வேண்டும்.

★ மனவலிமை வேண்டும், விடாமுயற்சியும் வேண்டும்.

★ நூலறிவு பெற்றிருத்தல் நலம் பயக்கும்.

★ உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**12. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துக்கள் யாவை?**

★ சுற்றத்தாரிடம் அன்பு இல்லாதவர் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள இயலாது.

★ எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

★ தொழுத கையுள்ளும் கொலைக் கருவி மறைந்து இருக்கும்.

**13. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக குபரா கவிபாடுகிறார்?**

★ மேல்மண் பதமாகிறது.
★ உழவர்கள் இறைவழிபாடு செய்தனர்.
★ வெள்ளி முளைக்கும் முன் பொன் ஏர் பூட்டினார்.
★ நல்ல நாள் நட்சத்திரம் பார்த்தனர்.
★ கொழுவை அழுத்தி உழுதனர்.
★ நிலம் சிலிர்த்தது.
★ உழவர்கள் மகிழ்ந்தனர்.

**14. வாளித்தண்ணீர் சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒருபத்தி அமைக்க.**

★ வாளியில் தண்ணீர் எடுத்து வந்து, சாயக்குவளையில் ஊற்றி கந்தைத் துணியால் துடைத்து கட்டைத் தூரிகையால் வர்ணம் பூகவர்.

**15. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.**

★ இடம்: நாகூர் ரூமி இயற்றிய 'சித்தாளு' கவிதையின் வரிகள்

★ பொருள்: சித்தாளின் மனச்சுமைகளை செங்கற்கள் அறிவதில்லை.

★ விளக்கம்: கற்களைச் சுமந்தால் தான் அடுத்த வேளை உணவு என்ற சித்தாளின் மனச்சுமைகளை செங்கற்களும் அறிவதில்லை. மனிதர்களும் அறிவதில்லை.

**16. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

★ நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.

★ உணவைத் தேடும் வழி அறியேன்.

★ காட்டில் செல்லும் வழி அறியேன்.

**17. ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா என்று பாரதி சொல்வதை கம்பனின் கவிமூலம் விளக்குக.**

★ பொருள் புரியாவிட்டாலும் சந்தம் இன்பம் தரும்.

★ ஆழநெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ!

★ வேழ நெடும்படை கண்டு விளங்கிடும் வில் ஆளோ!

★ சந்தமே கம்பனின் சொந்தம்.

**18. "விழிபெற்ற பயனெனவும் மெய்பெற்ற அருளெனவும்" - இடம் சுட்டி பொருள் விளக்குக.**

★ இடம்: இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி

★ பொருள்: குடிமக்களுக்குக் கண்ணாகவும், உயிராகவும் விளங்குகிறான்.

★ விளக்கம்: இராசராசன் குடிமக்களுக்கு கண்ணாகவும் அனைத்துக்கும் உயிராகவும் விளங்குகிறான்.

## இலக்கண சிறுவினா

**1. தனிமொழி, தொடர்பொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

★ அண்ணன்: எங்கே செல்கிறாய்? (தொடர் மொழி)

★ தம்பி: பள்ளிக்கு

★ அண்ணன்: ஆங்கிலத் தேர்வா? (தொடர் மொழி)

★ தம்பி: தமிழ்த் தேர்வு

★ அண்ணன்: ஆங்கிலம்?

★ தம்பி: நாளை மறுநாள் (தொடர் மொழி)

**2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து இறங்கினார் முகம்மது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு, அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

| | |
|---|---|
| ★ வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் | ★ மாடியிலிருந்து இறங்கினார்.<br>★ பாடல்களைப் பாடுவதும்.<br>★ அவருக்குப் பொழுதுபோக்கு.<br>★ அவரது அறையில் குறுந்தகடுகளை வைத்திருப்பார். |
| ★ வினைமுற்றுத் தொடர் - | ★ இறங்கினார் முகம் |
| ★ எழுவாய்த் தொடர் | ★ அவர் பாடகர் |
| ★ இடைச்சொல் தொடர் | ★ பாடுவதும் கேட்பதும் |
| ★ பெயரெச்சத் தொடர் | ★ கேட்ட பாடல் |
| ★ எதிர் மறைப் பெயரெச்சத் தொடர் | ★ கேட்காத பாடல் |
| ★ அடுக்குத் தொடர் | ★ அடுக்கு அடுக்காக வைத்திருப்பார் |

**3. கண்ணே கண்ணுறங்கு!**
**காலையில் நீயெழும்பு!**
**மாமழை பெய்கையிலே!**
**மாம் பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு!**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!** **- இத்தாலட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

| | |
|---|---|
| ★ கண்ணே கண்ணுறங்கு! | ★ விளித்தொடர் |
| ★ காலையில் நியெழும்பு! | ★ வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| ★ மாமழை பெய்கையிலே! | ★ உரிச்சொல் தொடர் |
| ★ மாம் பூவே கண்ணுறங்கு! | ★ விளித்தொடர் |
| ★ பாடினேன் தாலாட்டு! | ★ வினைமுற்றுத் தொடர் |
| ★ ஆடி ஆடி | ★ அடுக்குத்தொடர் |
| ★ ஓய்ந்துறங்கு! | ★ வினையெச்சத் தொடர் |

**4. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம், "இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப்பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்கு சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.**

**- இப்பத்தியிலுள் வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக .**

| சொற்கள் | வழுவமைதி | சொற்கள் | வழுவமைதி |
|---|---|---|---|
| ★ இலட்சுமி கூப்பிடுகிறாள் | **திணை வழுவமைதி** | ★ நீரைக் குடித்தாள் | **திணை வழுவமைதி** |
| ★ என்னடா விளையாட வேண்டுமா | **திணை வழுவமைதி** | ★ குட்டியுடன் நின்றிருந்த மாடு | **மரபு வழுவமைதி** |
| ★ அவனை அவிழ்த்து விட்டேன் | **திணை வழுவமைதி** | ★ துள்ளிய குட்டியை | **மரபு வழுவமைதி** |
| ★ நீயும் இவனும் | **திணை வழுவமைதி** | ★ இதோ சென்று விட்டேன் | **கால வழுவமைதி** |

**5. உரையாடலில் இடம் பெற்றுள்ள வினா , விடை வகைகளைக் கண்டு எழுதுக.**

★ பாமகள்: வணக்கம் ஆதிரை. ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)

★ ஆதிரை: ஆமாம். கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். (நேர்விடை)

★ பாமகள்: அப்படியா! என்ன தலைப்பு? (அறியா வினா)

★ ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர். (நேர்விடை) நீங்கள் கவியரங்கத்துக்கு வருவீர்களா? மாட்டீர்களா? (ஐய வினா)

★ பாமகள்: என் வராமல்? (வினா எதிர் வினாதல் விடை)

**6. வெண்பா, ஆசிரியப்பா பொது இலக்கணம் கூறுக.**

| பொது இலக்கணம் | வெண்பா | ஆசிரியப்பா அகவற்பா |
|---|---|---|
| **ஓசை** | ★ செப்பல் ஓசை | ★ அகவல் ஓசை |
| **சீர்** | ★ முச்சீர், நாற்சீர் | ★ ஈரசைச்சீர் மிகுதி |
| **தளை** | ★ இயற்சர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை | ★ ஆசிரிய தளை மிகுதி |
| **அடி** | ★ 2 முதல் 12 அடி | ★ 3 அடி முதல் எழுதுவோர் மனநிலைக்கேற்ப அமையும் |
| **ஈற்றுச்சீர் , முடிப்பு** | ★ நாள் , மலர் , காசு பிறப்பு | ★ ஏகாரம் |

**7. அவந்தி நாட்டு மன்னன் மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின்வழி விளக்குக.**

★ அவந்தி நாட்டு மன்னன் மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து, அந்த நாட்டைக் கைப்பற்றக் கருதுவதும், அதற்காக அவந்தி நாட்டுப் படை வீரர்கள், வஞ்சிப்பூவைச் சூடி, மருத நாட்டின் மீது போர் தொடுக்கப் படையெடுப்பதும் வஞ்சித் திணையாகும்.

## செய்யுள் நெடுவினா

**1. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

| மனோன்மணியம் சுந்தரனாரின் வாழ்த்து | பெருஞ்சித்திரனாரின் வாழ்த்து |
|---|---|
| ★ நீராருங் கடலுடுத்த பாடல் | ★ அன்னை மொழியே பாடல் |
| ★ மனோன்மணியம் நூலில் இருந்து எடுக்கப்பட்டுத | ★ கனிச்சாறு தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது |
| ★ எத்திசையும் புகழ்பெற்றது தமிழ் | ★ கன்னியாகுமரி கடல் கொண்ட நாட்டில் அரசாண்டது தமிழ் |
| ★ உன் சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துகிறோம் | ★ முன்னும் நினைவால் முடி தாழ வாழ்த்துகிறோம் |

★ என இருவருமே தமிழ்த்தாயை வாழ்த்துகின்றன.

**2. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது . அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

★ ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது.

★ அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருக்கிறது. இன்றைய காலத்தில் மாணவர்களுக்கு அரசு தரும் நலத்திட்டங்களை ஆசிரியர்கள் பெற்றுத்தருகின்றனர்.

★ (எ.கா) பாடநூல், பேருந்து பயணச்சீட்டு, மிதிவண்டி, கணினி போன்றவை ஏழை எளிய மக்களுக்கு அரசின் நலத்திட்டங்களைப் பெற அரசு அலுவலர் உதவுதல். (எ.கா) 1. மருத்துவக் காப்பீடு, 2. புயல் வெள்ள நிவாரண நிதி

**3. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக?**

★ இடைக்காடனார் குசேல பாண்டியனிடம் சென்று கவிதை பாடினார்.

★ மன்னன் தலை அசைக்காமல் அவமதித்தான்.

★ புலவர் இறைவனிடம் முறையிட்டார்.

★ இறைவன் மதுரையை விட்டு நீங்கினார்.

★ மன்னன் இறைவனிடம் காரணம் கேட்டான்.

★ புலவரை அவமதித்த தவறுக்கு வருந்தினான்.

★ இறைவன் மீண்டும் மதுரைக்கு வந்தார்.

**4. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.**

| | |
|---|---|
| ★ இராசராச சோழன் மக்களுக்கு உயிராக இருக்கிறான். அவன் நாட்டில், | |
| ★ சிலம்புகள் புலம்பும் | ★ மக்கள் புலம்புவது இல்லை |
| ★ ஓடைகள் கலங்கும் | ★ மக்கள் கலங்குவது இல்லை |
| ★ மாங்காய் வடுப்படும் | ★ மக்கள் வடுப்படுவது இல்லை |
| ★ மலர்கள் பறிக்கப்படும் | ★ மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவது இல்லை |
| ★ காடுகள் கொடியது | ★ மக்கள் கொடியவர் இல்லை |
| ★ மான்களின் கண்கள் மருளும் | ★ மக்களின் கண்கள் மருளாது |
| ★ மீன்கள் பிறழும் | ★ மக்கள் பிறழ்வது இல்லை |

**5. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

| மருவூர் பாக்க வீதிகள் | வணிக வளாகங்கள் அங்காடிகள் |
|---|---|
| ★ அனைத்து பொருள்களும் கிடைத்தன | ★ இங்கேயும் அனைத்து பொருள்களும் கிடைக்கின்றன |
| ★ கடைத்தெருக்கள் இயற்கையான சூழலில் அமைந்தது | ★ அங்காடிகள் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது |
| ★ தெருக்களில் முத்து, மணி, பொன்னைக் குவித்து வைத்து விற்றனர். | ★ பாதுகாப்பாக குளிரூட்டப்பட்ட கடைகளில் விற்கின்றனர் |
| ★ உற்பத்தியாளரே விற்பனையாளர் | ★ உற்பத்தியாளர் வேறு விற்பனையாளர் வேறு |
| ★ இயற்கை நறுமணப் பொருள்களை விற்றனர் | ★ செயற்கை நறுமணப் பொருள்களை விற்கின்றனர். |

**6. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவகமலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

- ★ மழை இல்லாப் பயிரைப் போல வாடுகிறேன்.
- ★ மரத்திலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறேன்.
- ★ அம்பினால் உண்டான புண்ணைப் போலவும், துணையைப் பிரிந்த பறவையைப் போலவும் வாடுகிறேன்.
- ★ உய்முறை அறியேன், மெய்முறை அறியேன், உணவு செய்முறை அறியேன் என கவிதை மூலம் விவரிக்கின்றார்.

**7. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

**கவிஞன் யானோர் காலக் கணிதம்**
**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்**
**புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**
**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்**
**இவை சரி யென்றால் இயம்புவதென் தொழில்**
**இவை தவ றாயின் எதிர்ப்பதென் வேலை!**
**ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்**
**அவனும் யானுமே அறிந்தவை; அறிக.**

- ★ **மோனை நயம்:** அடி தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை ★ கவிஞன் கருப்படு
- ★ **எதுகை நயம்:** அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை. ★ இவை சரி இவை தவறு
- ★ **இயைபு நயம்:** அடிதோறும் கடைசி எழுத்து ஒன்றி வருவது ★ தெய்வம், செல்வம்
- ★ **முரண் நயம்:** முரண்பட்ட சொற்கள் வருவது
- ★ சரி x தவறு ★ ஆக்கல் x அழித்தல் ★ இயம்புவது x எதிர்ப்பது
- ★ **சந்த நயம்:** இப்பாடல் சந்த நயத்தோடு பாடுவதற்கு ஏற்றவாறு உள்ளது.
- ★ **அணிநயம்:** உருவக அணி அமைந்து உள்ளது. ★ கவிஞன் யானோர் காலக் கணிதம்
- ★ **ஓசை நயம்:** அகவல் ஓசை இப்பாடலில் உள்ளது.

**கடிதம் எழுதுக.**

**உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்:**

ஆ. நெடுமாறன்,
10, மாரியம்மன் கோவில் தெரு,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம் - 605 757.

**பெறுநர்:**

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
விழுப்புரம் மாவட்டம்- 605757.

**பெருமதிப்பிற்குரிய ஐயா/அம்மா**

**பொருள்:** காஞ்சிபுரம் சாந்தி உணவு விடுதியில் தரமற்ற உணவு அளித்தது - கூடுதல் விலை பெற்றது தொடர்பான புகார் கடிதம்.

நானும் என் குடும்பத்தாரும் மதிய உணவுக்காக காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள சாந்தி உணவு விடுதிக்குச் சென்றோம். அவ்விடுதியில் சுகாதார வசதிகள் மிகக்குறைவாகவே இருந்தது. உணவு அருந்துமிடத்திலும். கைகழுவும் இடங்களிலும் எலிகள் குடும்பத்தோடு விளையாடிக் கொண்டிருந்தன. உணவில் சாம்பார், கூட்டு போன்றவைக் கெட்டுப்போன நாற்றம் வந்துவிட்டது. நான் விடுதி கண்காணிப்பாளரிடம் கூறினேன். அவர் எங்கள் புகாரைப் புறக்கணித்துவிட்டார்.

இதுபோன்ற காலாவதியான தரமில்லாத உணவுகளால் நாங்கள் மருத்துவரிடம் சென்று உணவு ஒவ்வாமைக்கு மருத்துவம் பார்த்துள்ளோம். அவ்வுணவு விடுதியில் தயாராகும் உணவினை தரப்பரிசோதனை செய்ய வேண்டும். இது என்னுடைய வேண்டுகோள் மட்டுமல்ல, என்னைப்போல் பிறருடைய எதிர்பார்ப்பும் இதுதான். கூடுதல் விலை வசூலிப்பதற்கான காரணத்தையும் அறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இடம்: காஞ்சிபுரம் — இப்படிக்கு
தேதி: 13.07.2020 — தங்கள் உண்மையுள்ள,
ஆ. நெடுமாறன்

**உறைமேல் முகவரி**

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
விழுப்புரம் மாவட்டம்.

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்:**

மு. இளங்கோ,
45, கோபுர வீதி வடக்குத் தெரு,
கும்பகோணம்.

**பெறுநர்:**

ஆசிரியர் அவர்கள்,
தினமணி நாளிதழ்,
தமிழ்ச்சாலை தெரு, கும்பகோணம் - 28.

**பொருள்**: தினமணி நாளிதழில் கட்டுரை வெளியிட வேண்டுதல் தொடர்பாக.

**மதிப்பிற்குரியீர் வணக்கம்,**

தங்கள் நாளிதழின் சார்பாக பொங்கல் திருநாளை முன்னிட்டு வெளியிடும் பொங்கல் மலருக்கு 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளேன். நம் முன்னோர்கள் உழவுத்தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். உழவுத் தொழிலுக்கு வந்தனை என்ற நிலை தடுமாறி, உழவுத் தொழிலுக்கு நிந்தனையாக மாறிவிட்டது. இந்நிலையை மாற்ற எனது கட்டுரை ஒரு சிறு துரும்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில் கட்டுரையை எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்தக் கட்டுரையைத் தங்கள் நாளிதழ் சார்பாக வெளியிடும் பொங்கல் சிறப்பு மலரில் என்னுடைய கட்டுரையையும் வெளியிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : கும்பகோணம் இப்படிக்கு

நாள் :23-05-2019 தங்கள் உண்மையுள்ள,

**மு. இளங்கோ**

**உறைமேல் முகவரி**

**பெறுநர்:**

ஆசிரியர் அவர்கள்,
தினமணி நாளிதழ்,
தமிழ்ச்சாலை தெரு,
கும்பகோணம் -28

**உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவனம் செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்:**

க. கீர்த்தனா,
9, பிள்ளையார் கோவில் தெரு,
சித்தேரி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**பெறுநர்:**

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**பொருள்**: மின்விளக்கு வசதி அமைக்க வேண்டுதல் தொடர்பாக.

**மதிப்பிற்குரியீர் வணக்கம்,**

நான் திருக்கோவிலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள சித்தேரி கிராமத்தில் வசிக்கிறேன். என் சார்பாகவும் எங்கள் ஊர் சார்பாகவும் மின்விளக்குகளைச் சீரமைத்துத் தருமாறு வேண்டுகோளை வைக்கிறேன். இதனைப் பரிவுடன் ஏற்று நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

எங்கள் ஊரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவருகின்றனர். ஆனால், எங்களுக்கு மின்விளக்கு வசதி செய்து கொடுக்காதது பெருங்குறையாக உள்ளது. மின்கம்பங்கள் இருந்தும் அவற்றில் மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை. இரவில் சாலையில் நடக்கும்போது பள்ளம்மேடுகளில் தவறி விழும் நிலை ஏற்படுகிறது. மழைக்காலங்களில் பெருந்துன்பம் ஏற்படுகிறது. மேலும் திருட்டு போன்ற சமூகக் குற்றங்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பாக அமைகிறது. இந்நிலையை மாற்றி மின்விளக்குகளால் எங்கள் கிராமத்திற்கு ஒளியேற்றித்தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம்: சித்தேரி, இப்படிக்கு,

நாள்: 28 - 09 - 2020 ஊர்மக்கள் சார்பாக,

**க. கீர்த்தனா**

**உறைமேல் முகவரி**

**பெறுநர்:**

மின்வாரிய அலுவலர் அவர்கள்,

மின்வாரிய அலுவலகம்,

கள்ளக்குறிச்சி மாவட்டம்

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1) மாணவரின் பெயர் :
2) பாலினம் :
3) பிறந்த தேதி :
4) தேசிய இனம் :
5) இரத்த வகை :
6) உயரம் மற்றும் எடை :
7) பெற்றோர்/பாதுகாலர் பெயர் :
8) வீட்டு முகவரி :
9) தொலைபேசி/அலைபேசி எண் :
10) இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11) பள்ளியின் முகவரி :
12) சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண்:

தேதி: மாணவரின் கையெழுப்பம்

இடம்:

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

## பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புதல்

1) பெயர் :
2) பாலினம் :
3) பிறந்த நாள் மற்றும் வயது :
4) தேசிய இனம் :
5) பெற்றோர் பாதுகாவலர் பெயர் :
6) வீட்டு முகவரி :
7) தொலைபேசி அலைபேசி எண் :
8) பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9) தாய்மொழி :
10) பயின்ற மொழிகள் :
11) தட்டச்சு :
12) கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் -------------- பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள

## உரைநடை நெடுவினா

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம்**

★ தாவரத்தின் பகுதிகளை குறிப்பதற்கே தமிழில் கீழ்க்கண்ட சொல்வளங்கள் உள்ளன.

★ **அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள்:** ★ தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி

★ **கிளைப்பிரிவுகள்:** ★ கவை, கொம்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு

★ **காய்ந்த அடியும் கிளையும்:** ★ சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை

★ **இலைவகை:** ★ இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு

★ **கொழுந்து வகை:** ★ துளிர், முறி, கொழுந்து, குருத்து, கொழுந்தாடை

★ **பூவின் நிலை:** ★ அரும்பு, போது, மலர், வீ, செம்மல்

★ **பிஞ்சுவகை:** ★ பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, கச்சல்

★ **கெட்டுப்போன காய்கனி வகை:** ★ சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு

★ **இளம்பயிர் வகை:** ★ நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி, வடலி, பைங்கூழ்

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை:**

★ மொழியின் வளர்ச்சிக்கு ★ புதிய கருத்துகளை உணர்த்த ★ பிறமொழிச்சொற்களை மொழி பெயர்க்க

**2. நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர் வகைச் சொற்களை எழுதி விளக்கு.**

**பயிர் வகைகள்**

★ நெல் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மாவுச் சத்து உடையது.

★ கம்பு புல்வகைப் பயிர் இது. குறைந்த அளவே பயிரிடப்படுகிறது.

★ சோளம் குறைந்த அளவே பயிரிடப்படுகிறது. சிறுதானியப்பயிர் இது.

★ கேழ்வரகு எளிதில் சீரணமாகும் உணவு இது. புல் வகையைச் சார்ந்தது.

★ வரகு வறட்சியைத் தாங்கும் பயிர். இது குறைவான மழை பெய்யும் இடங்களில் பயிரிடப்படுகிறது.

**3. "மலர்ந்தும் மலராத பாதி மலர் போல வளரும் விழி வண்ணமே - வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக விளைந்த கலை அன்னமே நதியில் விளையாடி கொடியில் தலை சீவி நடந்த இளந் தென்றலே - வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே."**

**- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க**

★ விடை: தென்றல்

★ இப்பாடலில் தவழும் காற்று தென்றல் தெற்கிலிருந்து வீசுவதால் இது தென்றல் காற்று என்று அழைக்கப்படுகிறது .

★ முரண் சொற்கள் ★ மலர்ந்தும் x மலராத ★ விடிந்தும் x விடியாத

★ கவிதை நயம், ஆறு, மலை, காடு கடந்து வருகிறது. இதை கவிஞர் நதியில் விளையாடி கொடியில் தலை சீவி நடந்த இளந்தென்றலே என்கிறார்.

★ தமிழ் மன்றம் தமிழ்மொழி பொதிகை மலையில் தோன்றியது என்பர். இதை கவிஞர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே என்கிறார்.

★ இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் சிறந்த கவிதை நயத்தோடு தன்பாடல்களை எழுதியுள்ளார்

**4. தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை எழுதுக.**

★ மரங்களை நடவேண்டும். ★ குப்பைகளை எரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

★ வாகனங்களில் வெளியேறும் புகையினை கட்டுப்படுத்த வேண்டும்.

★ பள்ளி கல்லூரிகளில் மாணவர்களுக்கு காற்றுமாக குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

★ சமையலின் போது சுத்தமான எளிப்பான்களைப் பயன்படுத்த வேண்டும்.

**5. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

★ தமிழரின் சிறந்த பண்பு விருந்தோம்பல்.
★ நானும் அதைக் கடைபிடித்தேன்.
★ என் மாமா ஒருநாள் வீட்டிற்கு வந்தார்.
★ அவரை எனக்கு மிகவும் பிடிக்கும், முதலில் குடிக்க நீர் கொடுத்தேன்.
★ நலம் விசாரித்தேன்.
★ வாழை இலையில் விருந்து அளித்தேன்.
★ அதிகநேரம் பேசி மகிழ்ந்தேன்.
★ அவர் விடைபெற்றார்.
★ நான் வாசல்வரை சென்று வழி அனுப்பிவைத்தேன்.
★ அந்த இனிய நிகழ்வு என் மனதை விட்டு அகலவில்லை.

**6. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**

★ ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென் பொருள் நிச்சயம் அக்கறை கொள்ளும்.

★ இந்த தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது.

★ பெரிய தொழில் நிறுவனங்கள் பயன்படுத்துகிறது.
★ மனித உயிரைக் காக்கும்.
★ பாதுகாப்பைத் தருகிறது.
★ உயரமான கட்டிடம் கட்டப் பயன்படுகிறது.
★ வணிகம் வசப்படுகிறது.
★ கடினமான வேலையைச் செய்கிறது.

**7. "தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளின் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை" மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம்சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை' என்ற தலைப்பில் வாரஇதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.**

**இனிமைத் தமிழ்:**

★ தமிழ் மொழி இனிமையானது. இது ஏறக்குறைய 3000 வருடம் பழமையானது.

**தமிழின் இலக்கிய வளம்:**

★ பத்துப்பாட்டு
★ எட்டுத்தொகை
★ பதினெண் கீழ்க்கணக்கு காப்பியங்கள்
★ சிற்றிலக்கியம்
★ புதுக்கவிதை எனப் பல இலக்கிய வளங்களை உடையது.

**கல்வி மொழி:**

★ மொழிபெயர்ப்பை கல்வியாக ஆக்குவதன் மூலம் உலக அறிவைப் பெறமுடியும்.

**பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்:**

★ வான்மீகி வடமொழியில் இராமாயணம் எழுதினார். கம்பர் தமிழில் எழுதினார். தமிழுக்கு வளம் சேர்த்தார்.

**அறிவியல் கருத்துகள்:**

★ மொழிபெயர்ப்பு, அறிவியல் சார்ந்த துறையில் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது.

★ அறிவியல் கருத்துகள் பலவும் தமிழ் இலக்கியத்தில் உள்ளன.

**பிறதுறைக் கருத்துகள்:**

★ திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, விளம்பரம் போன்ற துறைகளில் மொழிபெயர்ப்புப் பணி சிறந்து விளங்குகின்றன.

**தமிழுக்குச் செழுமை:**

★ திருக்குறள் உலகப்பொதுமறை என்று அழைக்கப்படுவதற்கு மொழிபெயர்ப்பு முக்கிய காரணம்.

★ கருத்துகளை எல்லா மக்களும் அறிய மொழிபெயர்ப்பு அவசியம் தேவை.

**8. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள் சிலவற்றையும், ரோபோக்கள் உருவாக்கும் நிறுவனங்கள் சிலவற்றையும் கூறுக.**

**வணிக நிறுவனங்கள்**

★ அமேசான் நிறுவனம் ★ பிளிப்கார்ட் நிறுவனம் ★ கூகுள் நிறுவனம் ★ பல்துறை அங்காடிகள்

**ரோபோக்கள் உருவாக்கும் நிறுவனங்கள்**

★ கேட்டர் பில்லர் ★ மைக்ரோ சாப்ட் ★ மிட்சுபிஷி குழுமம் - ஜப்பான்

★ எகோடியா நிறுவனம் - சென்னை ★ எஸ். பி. ரோபாடிக்ஸ் - சென்னை

**9. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகை மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவைகுறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.**

**நிகழ்கலை**

★ மக்கள் பண்பாட்டின் சிறந்த கூறுகளில் ஒன்று நிகழ்கலைகள் இவை சிற்றூர் மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளன.

**நிகழ்கலை வடிவங்கள்**

★ கரகாட்டம் ★ தேவராட்டம் ★ மயிலாட்டம் ★ காவடியாட்டம் ★ தப்பாட்டம் ★ ஒயிலாட்டம் ★ புலியாட்டம்

**நிகழ்கலை நிகழும் இடங்கள் :**

★ தமிழ்நாடு - அனைத்து கலைகளும் ★ மலேசியா, இலங்கை - காவடியாட்டம்

**ஒப்பனைகள் :**

★ கரகச் செம்பை அலங்கரித்தல் ★ காலில் சலங்கை அணிதல் ★ தலையில் முண்டாசு கட்டல்

★ புலி வேடமிடல் - குதிரை வடிவுள்ள கூடு ★ கையில் சிறுதுணி வைத்திருத்தல்

**சிறப்பும் பழமையும்**

★ கரகாட்டம் சங்க காலத்தில் இருந்தே உள்ளது.

★ தோற்பாவைக் கூத்து பட்டினத்தார் பாடலில் உள்ளது மரப்பாவைக் கூத்து திருவாசகத்தில் உள்ளது.

**நிகழ்கலைகள் அருகிவரக் காரணங்கள்**

★ மக்கள் ஆதரவு இல்லை. ★ போதிய வருமானம் இல்லை. ★ போதிய கலைஞர்கள் இல்லை.

**நாம் செய்யவேண்டுவன**

★ நிகழ்கலைகளைக் காப்பதற்கு அரசு முன் வர வேண்டும் கலைஞர்களை மதிக்க வேண்டும்.

★ சமூகத்தில் உரிய மதிப்பு தரவேண்டும்.

**10. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு . நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடைஉரை எழுதுக.**

★ அவையோர் அனைவருக்கும் என் வணக்கம்! நான், மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்னும் தலைப்பில் பேச வந்துள்ளேன் மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் நமக்கு இரு கண்கள்.

★ விடுதலை நாள், குடியரசு நாள், காந்தி பிறந்த நாள் போன்ற பல விழாக்களை நாம் கொண்டாடுகிறோம்.

★ விழாக்கள் இனிப்பு கொடுப்பதற்கு மட்டும் இல்லை, நாட்டுப்பற்றோடு கொண்டாட வேண்டும் ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தினர்.

★ காந்தியடிகள் நேரு வ.உ.சி திருப்பூர் குமரன் போன்றவர்கள் போராடி விடுதலை வாங்கித் தந்தார்கள்.

★ உழவுத் தொழிலைக் காக்க வேண்டும். கையூட்டை ஒழிக்க வேண்டும்.

★ நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும். ★ சுறுசுறுப்பு வேண்டும்.

## துணைப்பாடம் நெடுவினா

**1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.**

**முன்னுரை:**

★ ஆசிரியரின் நேரடி அனுபவம் மற்றும் கற்பனை கலந்த கதை.

★ இக்கதையில் தோணி படும்பாட்டைப் பற்றி பார்ப்போம்.

**வருணனைகள்:**

★ கொளுத்தும் வெயில் இமைநேரத்தில் மறைந்து விட்டது.

★ மேகப் பொதிகள் திரண்டன. கும்மிருட்டு.

★ மின்னல் கீற்றுகள் வானைப்பிளந்தன.

★ கடல் வெறிக் கூத்தாடுகிறது.

**அடுக்குத்தொடர்கள்:**

★ வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது.

★ தோணி தாவித்தாவிக் குதித்தது.

★ மீன்கள் கூட்டம் கூட்டமாய்த் திரிந்தன.

★ கரை! கரை! கரை!

**ஒலிக்குறிப்புச்சொற்கள் :**

★ இக்கதையில் தோணி படும்பாட்டை ஒலிக்குறிப்புச் சொற்களே அதிகமாய்க் காட்டுகின்றன.

★ நொறு நொறு நொறுங்கல் ஒலி நடுநடுங்கி குருட்டிருட்டு சிலுசிலுப்பு மரமரப்பு நொய்ங் , புய்ங்

**முடிவுரை :**

★ இக்கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்பு சொற்களும் புயலில் தோணிபடும் பாட்டை அழகாய்க் காட்டுகின்றன .

**2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

**முன்னுரை:**

★ கிராமத்து மக்கள் பகிர்ந்து உண்பவர்கள்

★ நேசம் மிகுந்தவர்கள்.

★ கிராமத்து விருந்தோம்பலைப் பற்றி நாம் இக்கதை மூலம் பார்க்கலாம்.

**புளியமரத்தடியில் வாலிபன்:**

★ ரோட்டோரம் இருந்த சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்தனர்.

★ கஞ்சி குடிக்க உட்காரும் பொழுது.

★ புளியமரத்தடியில் பசியால் வாடிய வாலிபன் இருந்தான்.

**அன்னமய்யாவின் விசாரிப்பு :**

★ அன்னமய்யாவைப் பார்த்து அவ்வாலிபன் மென்மையாக சிரித்தான்.

★ குடிக்க தண்ணீர் கேட்டான்.

★ அன்னமய்யா நீச்சத் தண்ணியைக் கொடுத்தான்.

**அன்னமிட்ட அன்னமய்யா**

★ வேப்ப மரத்தின் அடியில் இருந்த கஞ்சி கலயத்தையும், மோர் மிளகாயும் கொடுத்தான்.

★ அடுத்த புஞ்சைக்கு அழைத்துச் சென்றான்.

★ வட்டமாக உட்கார்ந்து கம்மஞ்சோறு உண்டனர்.

**பெயர்ப்பொருத்தம்:**

★ வாலிபனுக்கு அன்னமளித்தவன் பெயர் அன்னமய்யா.

★ பெயர் சரியாகப் பொருந்துகிறது.

**முடிவுரை:**

★ ஒரு மனிதனின் பெயரே அவன் குணத்தை மிகுதியாக வெளிப்படுத்துகிறது என்பதை இக்கதை நமக்கு வெளிப்படுத்துகிறது

**3. "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.**

**முன்னுரை :**

★ மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அவளின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றியது. அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பருத்திக்காட்டில் மேரி:**

★ மேரி கருப்பர் இனத்தைச் சார்ந்தவர். ★ மிகவும் வித்தியாசமான பெண்.

★ பருத்திச் செடிகளை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்வாள். அதில் பூக்கும் பூவை பார்க்கிற முதல் ஆளாக இருப்பாள்.

**வெள்ளைக்காரச் சிறுமியின் செயல்:**

★ வெள்ளைக்காரச் சிறுமி விளையாடும் இடத்திற்குச் சென்றாள்.

★ வீட்டிற்குள் சென்ற சிறுமி அங்கிருந்த புத்தகத்தை எடுத்தாள்.

★ வெள்ளைச்சிறுமி, "என்னிடம் கொடு, உன்னால் படிக்க முடியாது" என்று புத்தகத்தைப் பிடுங்கினாள்.

**மேரியின் வருத்தம்:**

★ வெள்ளைச்சிறுமி கூறியதைக் கேட்டமேரி தனக்குப் படிக்கத் தெரியவில்லையே என்று வருத்தம் அடைந்தாள்.

**தணியாத தாகம்:**

★ படிக்க வேண்டும் என்ற தாகம் அவளின் உள்ளத்தில் எழுகிறது. தன் தந்தையிடம் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று கூறுகிறாள்.

**வாய்ப்பு வந்தது:**

★ மிஸ் வில்ஸன் மேரியைப் பார்த்து வேலையை விரைவாக முடித்துவிட்டு படிக்க வா என்றார். மேரி படிக்கத் தொடங்கினாள்.

**புதிய நம்பிக்கை**

★ மேரி புதிது புதிதாக கற்றாள். ★ தன் வாழ்க்கை உயர்வதை உணர்ந்தாள். ★ டிப்ளமோ பட்டம் பெற்றாள்.

**முடிவுரை:**

★ கறுப்பினத்தின் முதல் பட்டதாரிப் பெண்.

★ "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற வசைமொழியால் சாதித்தாள் வெற்றிப் பெற்றாள். சாதனைப் பெண்ணாக!

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

மகளிர் நாள்விழா

இடம் பள்ளிக்கலையரங்கம்

நாள்: 08. 03. 2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள் , மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியாரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை

★ மகளிர் நாள் விழா 08. 03. 2019 அன்று எங்கள் பள்ளிக் கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு இருபால் ஆசிரியர்களும், மாணவர்களும் வந்தனர்.

★ விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் தலைமையாசிரியர் வரவேற்றார்.

★ இதழாளர் கலையரசி சிறப்புரை ஆற்றினார். ★ ஆண்பால் ஆசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

★ பள்ளி மாணவத் தலைவன் நன்றியுரை கூறினான். ★ இறுதியில் நாட்டுப்பண் பாடப்பட்டது.

★ மகளிர் நாள் விழா இனிதே நடந்தது.

**5. அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**

★ அழகிரி சாமியின் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பன்.

★ வீடு கட்டுகிற கூலி வேலை செய்பவன் வீரப்பன்.

★ அவன் நண்பன் நோய் காரணமாக வேலையை இழந்தான்.

★ நண்பனைக் கவனிப்பார் யாருமில்லை.

★ வீரப்பன் அடிக்கடி அவனுக்கு உதவுவான்.

★ வீரப்பனுக்கே சிலசமயம் வேலை இல்லை.

★ ஆனால் கடன் வாங்கியும் உதவுவான்.

★ நண்பனுக்கு கடிதம் எழுதினான்.

★ அது படிப்பவர் மனத்தை உருக்கியது.

★ நண்பன் நலம்பெற நாள்தோறும் கோவிலுக்குச் செல்வான்.

★ அன்பால் பிணைக்கப்பட்டவர்களே மனிதர்கள் என்பதை இக்கதை காட்டுகிறது.

**6. சூழல் வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேசமட்டுமே தெரியும். அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

★ மாலா: என்ன கலா தமிழ்ச் செய்தித்தாள் படிக்கின்றாயா?

★ கலா: ஆங்கில செய்தித்தாள்.

★ மாலா: ஏன் தமிழ் படிக்கத் தெடியாதா?

★ கலா: தமிழ் பேசுவேன். படிக்கத் தெரியாது.

★ மாலா: தமிழ் படிப்பது எளிது இனிமையானது நயம் மிகுந்தது.

★ கலா: நயமா?

★ மாலா: ஆம் பேசுவதில் சிலேடை நயம் இருக்கும்.

★ கலா: சிலேடையா?

★ மாலா: ஆம். இருபொருள்பட பேசுவர் காலையிலே மாலை வந்துவிட்டது. மாலை - பூமாலை - சாயுங்காலம்

★ கலா: ஆகா நன்றாக இருக்கிறதே வேறு என்ன நயம் இருக்கிறது.

★ மாலா: அடுக்குமொழி, உவமைகள், ஓசைநயம் இவை இடம்பெற பேசுவர்.

★ கலா: அப்படியா?

★ மாலா: அதோ பார் குகை! அங்கு முடிப்பேன் பகை! இங்கே குகை! பகை! என ஓசைநயம் உள்ளது.

★ கலா: வேறென்ன இருக்கும்?

★ மாலா: முரண் இருக்கும். குடிசைகள் ஒருபக்கம். கோபுரங்கள் மறுபக்கம்.

**7. மேடைக் கலைஞர்களும் பகல்வேடக்கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து எழுதுக.**

**மேடைக் கலைஞரின் இடர்ப்பாடுகள்:**

★ மேடையில் நடிப்பர். கீழே அமர்ந்து வேடிக்கை பார்ப்பவர்.

★ அவர்கள் தங்களிடம் கிடைக்கும் கற்களைக் கொண்டு எறிவர்.

★ கூச்சல் இடுவர். பகல் வேடக் கலைஞர்களின் இடர்ப்பாடுகள், இவர்கள் தெருவில் நடிப்பர்.

★ பார்வையாளர் அவர்களை ஏளனமாகப் பார்த்துச் சிரிப்பர். கையைப் பிடித்து இழுப்பர்.

★ அவர்கள் காதுபட கேலி பேசுவர்.

## பொதுக்கட்டுரை

**1. குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்கு புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில் சேர்கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதிகூறி கோவையாத்து அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். - இக் கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

### சான்றோர் வளர்த்த தமிழ்

**முன்னுரை:**

★ சான்றோர் வளர்த்த தமிழ் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழக எல்லை:**

★ குமரிக்கடல் முனையும், வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்டது தமிழகம்.

**தமிழன்னை**

★ தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச்சாரும் எழில் சேர் கன்னியாய் என்றும் திகழ்கிறாள் அவ்வன்னை.

**இலக்கியங்கள்:**

★ செந்நாப்புலவர்கள் பிள்ளைத்தமிழ் பேசி ★ சதகம் சமைத்து ★ பரணிபாடி

★ கலம்பகம் கண்டு ★ உலாவந்து ★ அந்தாதி கூறி ★ கோவையாத்து

★ அணியாகப்பூட்டி அழகினைக் கூட்டி அகம் மிக மகிழ்ந்தனர். ★ மேல்கணக்கும், கீழ்க்கணக்கும் படைத்தளித்தனர்.

**சான்றோர்கள்:**

★ கபிலர், கம்பர், ஔவையார், பாரதியார், வள்ளுவர், சுந்தரர், கண்ணதாசன், பாரதிதாசன், மீரா, மேத்தா போன்ற சான்றோர்களால் தமிழ் சிறந்தது.

**முடிவுரை:**

★ தமிழ் முச்சங்கம் கண்டது. ★ முத்தமிழாக வளர்ந்தது! ★ வாழ்க தமிழ்!

**2. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்.**

**முன்னுரை :**

★ ஹரியானா மாநிலம் கர்னலில் 01. 07. 1916-இல் பிறந்தவர் கல்பனா சாவ்லா. இவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கல்வி:**

★ ஆரம்பக் கல்வியைக் கர்னலில் படித்தார். ★ விமான ஊர்தி இயல் துறையை சண்டிகரில் படித்தார்.

★ விண்வெளித்துறை படிப்பை அமெரிக்காவில் படித்தார். ★ விண்வெளித்துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

**முதல் விண்வெளிப் பயணம்**

★ விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றார். ★ மற்றவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

★ நாசா குழுவில் சேர்ந்தார். ★ 1997 -இல் விண்வெளியில் பயணம் செய்தார்.

★ 372 மணிநேரம் விண்வெளியில் சாதனை புரிந்தார்.

**இறுதிப்பயணம்:**

★ 2003 ஜனவரி 16 -இல் கொலம்பியா விண்கலத்தில் சென்றார்.

★ 16 நாள் ஆய்வை முடித்துத் திரும்பும் போது வான் வெளியில் விண்கலம் வெடித்துச் சிதறியது.

**முடிவுரை:**

★ தன் கனவை நனவாக்கிய சாதனைப் பெண் கல்பனா சாவ்லா. ★ பாரத நாட்டின் புகழை பாருக்கே சொன்னவர்.

**3. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**

**முன்னுரை**

★ நான் கோடைவிடுமுறையில் பொருட்காட்சிக்குச் சென்றேன். ★ அதை இக்கட்டுரையில் காண்போம்.

**அரங்குகள்:**

★ காவல்துறை ★ சுற்றுலாத் துறை ★ பொதுப்பணித் துறை ★ வனத் துறை ★ மின் துறை

★ அறிவியல் துறை என அரசின் பல துறை சார்ந்த அரங்குகள் இருந்தன.

**கேளிக்கை அரங்குகள்:**

★ ஊஞ்சல் இராட்டினம் ★ இராட்சத இராட்டினம் . விளையாட்டு விளையாடினேன்

**அங்காடிகள்:**

★ விளையாட்டு சாதனப் பொருள்கள் ★ அழகு சாதனப் பொருள்கள்

★ வீட்டு உபயோகப் பொருள்கள் . . . . எனப் பல அங்காடிகள் இருந்தன.

★ இங்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

**உணவு அரங்குகள்:**

★ ஐஸ்கிரீம் கடை ★ உணவகம் ★ இனிப்பகம் ★ அப்பளக் கடை முதலியவை இருந்தன.

**முடிவுரை:**

★ பொருட்காட்சிக்குச் சென்றது மிகவும் இனிமையாக இருந்தது.

# கலைச் சொற்கள்

## இயல் 1

| | |
|---|---|
| Vowel | ★ உயிரெழுத்து |
| Monolingual | ★ ஒரு மொழி |
| Consonant | ★ மெய்யெழுத்து |
| Conversation | ★ உரையாடல் |
| Homograph | ★ ஒப்பெழுத்து |
| Discussion | ★ கலந்துரையாடல் |

## இயல் 2

| | |
|---|---|
| Storm | ★ புயல் |
| Land Breeze | ★ நிலக்காற்று |
| Tornado | ★ சூறாவளி |
| Sea Breeze | ★ கடற்காற்று |
| Tempest | ★ பெருங்காற்று |
| Whirlwind | ★ சுழல்காற்று |

## இயல் 3

| | |
|---|---|
| Classical Literature | ★ செவ்விலக்கியம் |
| Epic Literature | ★ காப்பிய இலக்கியம் |
| Devotional Literature | ★ பக்தி இலக்கியம் |
| Ancient Literature | ★ பண்டைய இலக்கியம் |
| Regional Literature | ★ வட்டார இலக்கியம் |
| Folk Literature | ★ நாட்டுப்புற இலக்கியம் |
| Modern Literature | ★ நவீன இலக்கியம் |

## இயல் 4

| | |
|---|---|
| Nanotechnology | ★ மீநுண்தொழில்நுட்பம் |
| Space Technology | ★ விண்வெளித் தொழில்நுட்பம் |
| Biotechnology | ★ உயிரித் தொழில்நுட்பம் |
| Cosmic rays | ★ விண்வெளிக் கதிர்கள் |
| Ultraviolet rays | ★ புற ஊதாக் கதிர்கள் |
| Infrared rays | ★ அகச்சிவப்புக் கதிர்கள் |

## இயல் 5

| | |
|---|---|
| Emblem | ★ சின்னம் |
| Intellectual | ★ அறிவாளர் |
| Thesis | ★ ஆய்வேடு |
| Symbolism | ★ குறியீட்டியல் |

## இயல் 6

| | |
|---|---|
| Aesthetics | ★ அழகியல், முருகியல் |
| Terminology | ★ கலைச்சொல் |
| Artifacts | ★ கலைப் படைப்புகள் |
| Myth | ★ தொன்மம் |

## இயல் 7

| | |
|---|---|
| Consulate | ★ துணைத்தூதரகம் |
| Guild | ★ வணிகக்குழு |
| Patent | ★ காப்புரிமை |
| Irrigation | ★ பாசனம் |
| Document | ★ ஆவணம் |
| Territory | ★ நிலப்பகுதி |

## இயல் 8

| | |
|---|---|
| Belief | ★ நம்பிக்கை |
| Philosopher | ★ மெய்யியலாளர் |
| Renaissance | ★ மறுமலர்ச்சி |
| Revivalism | ★ மீட்டுருவாக்கம் |

## இயல் 9

| | |
|---|---|
| Humanism | ★ மனிதநேயம் |
| Cultural Boundaries | ★ பண்பாட்டு எல்லை |
| Cabinet | ★ அமைச்சரவை |
| Cultural Values | ★ பண்பாட்டு விழுமியங்கள் |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **பண்புத்தொகை** | ★ மூதூர் ★ நன்மொழி ★ செந்தீ |
| **வினைத்தொகை** | ★ உறுதுயர் ★ வளர்வானம் ★ பயில்தொழில் ★ காய்மணி ★ உய்முறை |
| **உரிச்சொல் தொடர்** | ★ தடக்கை |
| **தொழிற்பெயர்கள்** | ★ வியத்தல் ★ நோக்கல் ★ எழுதுதல் ★ உரைத்தல் ★ செப்பல் ★ இருத்தல் |
| **சொல்லிசை அளபெடைகள்** | ★ அசைஇ ★ கெழீஇ |
| **செய்யுளிசை அளபெடைகள்** | ★ பருஉக் ★ குரூஉக்கண் |
| **அடுக்குத் தொடர்** | ★ ஊழ்ஊழ் |
| **ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்** | ★ வாரா (ஒன்றன்) |
| **வினையாலணையும் பெயர்** | ★ கேள்வியினான் |
| **எண்ணும்மை** | ★ காடனுக்கும் கபிலனுக்கும் ★ குண்டலமும் குழைகாதும் ★ வண்ணமும் சுண்ணமும் |
| **வேற்றுமைத்தொகை** | ★ மெய்முறை |
| **மூன்றாம் வேற்றுமைத் தொகை** | ★ கைதொழுது |
| **மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை** | ★ ஒகைமுறை |
| **வியங்கோள் வினைமுற்று** | ★ ஆடுக |
| **விகாரம்** | ★ காக்கென்று காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| **இடைகுறை** | ★ கணீர் (கண்ணீர்) |

## பகுபத உறுப்பிலக்கணம்

| சொல் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| பொறித்த | **பொறி** | **த்** | - | **த்** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |
| உரைத்த | **உரை** | **த்** | - | **த்** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |
| பொழிந்த | **பொழி** | **த்** | **த், ந்** ஆனது விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |
| கிளர்ந்த | **கிளர்** | **த்** | **த், ந்** ஆனது விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |
| மயங்கிய | **மயங்கு** | **ய்** உடம்படு மெய்சந்தி | - | **இ(ன்)** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |
| பதிந்து | **பதி** | **த்** | **த், ந்** ஆனது விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | - | **உ** வினையெச்ச விகுதி |
| ஒலித்து | **ஒலி** | **த்** | - | **த்** இறந்தகால இடைநிலை | - | **உ** வினையெச்ச விகுதி |
| மலைந்து | **மலை** | **த்** | **த், ந்** ஆனது விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | - | **உ** வினையெச்ச விகுதி |
| வருக | **வா** | **வரு** | **வா, வரு** எனக் குறுகியது | - | - | **க** வியங்கோள் வினைமுற்று விகுதி |
| தணிந்தது | **தணி** | **த்** | **த், ந்** ஆனது விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | **அ** | **து** படர்க்கை வினைமுற்று விகுதி |
| அறியேன் | **அறி** | **ய்** உடம்படு மெய்சந்தி | - | **ஆ** எதிர்மறை இடைநிலை | - | **ஏன்** தன்மை ஒருமை வினைமுற்று |

## தமிழ் எண்கள்

**எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ௪ |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய துண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ௪, உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாக தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகிறது.

| தொகைச் சொற்கள் | தமிழ் எண்ணுரு | தொகைச் சொற்கள் | தமிழ் எண்ணுரு |
|---|---|---|---|
| மூவேந்தர்கள் | ங | ஐந்திணை | ரு |
| நாற்றிசை | ௪ | நானிலம் | ௪ |
| முத்தமிழ் | ங | அறுசுவை | சு |
| இருதிணை | உ | பத்துப்பாட்டு | க0 |
| முப்பால் | ங | எட்டுத்தொகை | அ |

**தமிழ் எண்கள்**

| |
|---|
| க - 1 உ - 2 ங - 3 ௪ - 4 ரு - 5 சு - 6 எ - 7 அ - 8 கூ - 9 க0 - 10 |

**கீழ்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ங | ௪ |
| ரு | சு | எ | அ | கூ | க 0 | க க |
| க உ | க ங | க ௪ | க ரு | க சு | க எ | க அ |
| க கூ | உ0 | உ க | உ உ | உ ங | உ ௪ | உ ரு |
| உ சு | உ எ | உ அ | உ கூ | ங 0 | ங க | |

## மரூஉ

**ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. | புதுக்கோட்டை | புதுகை |
| 2. | திருச்சிராப்பள்ளி | திருச்சி |
| 3. | உதகமண்டலம் | உதகை |
| 4. | கோயம்புத்தூர் | கோவை |
| 5. | நாகப்பட்டினம் | நாகை |
| 6. | புதுச்சேரி | புதுவை |
| 7. | கும்பகோணம் | குடந்தை |
| 8. | திருநெல்வேலி | நெல்லை |
| 9. | மன்னார்குடி | மன்னை |
| 10. | மயிலாப்பூர் | மயிலை |
| 11. | சைதாப்பேட்டை | சைதை |

## எழுத்து வழக்காக மாற்றுக

**பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

➔ "தம்பீ? எங்க நிக்கிறே?"

★ தம்பி! எங்கே நிற்கிறீர்கள்?

➔ "நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."

★ நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர்க்கடை உள்ளது.

➔ "அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு.... நா வெரசா வந்துருவேன்"

★ அதற்குள்ளேயே தேநீர் அருந்திக்கொண்டும், செய்தித்தாளைப் படித்துக்கொண்டும் இரு... நான் சீக்கிரமாக வந்துவிடுவேன்.

➔ "அண்ணே! சம்முவத்தையும் கூட்டிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

★ அண்ணா! சண்முகத்தையும் அழைத்துக்கொண்டு வாங்கண்ணா! அவனைப்பார்த்து நீண்ட நாள் ஆகுது.

➔ "அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

★ அவன்தன் பாட்டியுடன் வெளியூர் போய் இருக்கின்றான். உங்கள் ஊருக்கே அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்.

➔ "ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"

★ மிகவும் சிறிய வயதில் பாத்ததுண்ணா! அப்பொழுது அவனுக்கு மூன்று வயது இருக்கும்!

➔ "இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போன வையி. நாங் கௌம்பிட்டேன்"

★ இப்பொழுது உயரமாக வளர்ந்து விட்டான்! உனக்கு அடையாளமே தெரியாது. ஊருக்கு என்னுடன் வருவான் பாரு! சரி தொலைபேசியை துண்டி! நான் கிளம்பிவிட்டேன்.

# அணி இலக்கணம்

## இரட்டுற மொழிதல் அணி

**அணி விளக்கம்**

★ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி ஆகும்.

★ இது சிலேடை அணி என்றும் வழங்கப்படும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ **"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**

**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**

**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**

**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"** - தனிப்பாடல் திரட்டு

**எடுத்துக்காட்டு விளக்கம்**

| தமிழ் | கடல் |
|---|---|
| இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளை உடையது. | முத்தும் அமிழ்தமும் தருகின்றது. |
| முதல், இடை, கடை ஆகிய மூன்று சங்கங்களில் வளர்ந்தது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் பாதுகாக்கபட்டது. | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கின்றது. |

**அணிப் பொருத்தம்**

★ இப்பாடலில் உள்ள அடிகள், தமிழ், கடல் ஆகிய இரண்டிற்கும் பொருள் தரும்படி அமைந்திருப்பதால், இ∴து இரட்டுற மொழிதல் அணி ஆகும்.

## உவமை அணி

**அணி விளக்கம்:-**

★ உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 1:-**

★ **"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**

**கோலொடு நின்றான் இரவு."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**அணிப் பொருத்தம்:-**

★ உவமை - ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வது.

★ உவமேயம் - அரசன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது.

★ உவம உருபு - போலும்

★ இக்குறட்பாவில், உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதாகல், இ∴து உவமையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 2:-**

★ **"நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தன்று."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

**அணிப் பொருத்தம்:-**

★ உவமை - ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது. ★ உவமேயம் - பிறருக்கு உதவி செய்யாதவர் பெற்ற செல்வம்.

★ உவம உருபு - தன்று ★ இக்குறட்பாவில், உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால், இஃது உவமையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 3:-**

★ **"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது போன்றது.

**அணிப் பொருத்தம்:-**

★ உவமை - மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது.

★ உவமேயம் - தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது. ★ உவம உருபு - அற்றால்

★ இக்குறட்பாவில், உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதாகல், இஃது உவமையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 4:-**

★ **"மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில்."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ கயவர் மக்களைப் போலவே இருப்பர்.

★ கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

**அணிப் பொருத்தம்:-**

★ உவமை - மக்களே போல்வர் கயவர் ★ உவமேயம் - அவர் ஒப்பார் ★ உவம உருபு - அன்ன

★ இக்குறட்பாவில், உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதாகல், இஃது உவமையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 5:-**

★ **"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவிசெய்வர் சான்றோர்.

★ கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

**அணிப் பொருத்தம்:-**

★ உவமை - கரும்பைப் பிழிவது ★ உவமேயம் - கயவர்கள் பயன்படுவது ★ உவம உருபு - போல்

★ இக்குறட்பாவில், உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதாகல், இஃது உவமையணி ஆகும்.

## எடுத்துக்காட்டுஉவமை அணி

**அணி விளக்கம்**

★ ஒரு பொருளின் தொழிலுக்கு மற்றொரு பொருளின் தொழிலைக் காரணம் காட்டி உவமைக் கூறுவது தொழில் உவமை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ **“பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.”**

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்?

★ அதுபோலவே, இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

**அணிப் பொருத்தம்**

★ இக்குறட்பாவில், கண்ணின் தொழிலான இரக்கத்திற்கு, பாடலோடு பொருந்தும் இசையை ஒப்புமையாகக் கூறியதால், இஃது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

## சொற்பொருள் பின்வருநிலையணி

**அணி விளக்கம்:-**

★ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 1:-**

★ **“பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.”**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம்.

★ அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் ஒன்று இல்லை.

**அணிப் பொருத்தம்:-**

★ இப்பாடலில், பொருள் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால், இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் 2:-**

★ **“இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.”**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

**அணிப் பொருத்தம்:-**

★ இக்குறட்பாவில், இன்மை என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து வறுமை என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

## வஞ்சப் புகழ்ச்சி அணி

**அணி விளக்கம்:-**

★ புகழ்வது போல் பழித்தும், பழிப்பது போல் புகழ்ந்தும் கூறுவது வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும்.

★ வஞ்சப் புகழ்ச்சி அணி, இலேச அணி என்றும் வழங்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ **"தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ தேவரும் கயவம் ஒரு தன்மையர்.

★ எவ்வாறு எனில், தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

**அணிப் பொருத்தம்:-**

★ இக்குறட்பாவில், தேவர்களுக்கு இணையாக கயவர்களைப் புகழ்ந்துக் கூறுவதைப் போலக் கூறி, கயவர்கள் தாங்கள் விரும்பியவற்றைச் செய்து கெடுவார்கள் என்று கூறியுள்ளார்.

★ இவ்வாறு, புகழ்வதுபோன்று புகழ்ந்து பழித்துக் கூறுவதால், இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

## தற்குறிப்பேற்ற அணி

**அணி விளக்கம்:-**

★ இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ **"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வர வேண்டாம் என்று தடுப்பதுபோல, கை காட்டியது.

**அணிப் பொருத்தம்:-**

★ கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் நுழைந்தபோது மதிலின் மேலிருந்தக் கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.

★ மதுரைக்குள் வந்தால் அவர்களுக்கு தீங்கு நேரும் எனவே, வர வேண்டாம் என கொடிகள் கை அசைப்பதுபோல இருப்பதாக இளங்கோவடிகள் தன் குறிப்பை ஏற்றிக் கூறுகிறார்.

★ எனவே, இது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

## தீவக அணி

**அணி விளக்கம்:-**

★ தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கபட்ட விளக்கு அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தரும்.

★ அதுபோல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல், அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இது தீவக அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ **"சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்**
**ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து**
**திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்**
**மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன.

★ அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன.

★ குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன.

★ வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகள் சிவந்தன.

★ குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

**அணிப் பொருத்தம்:-**

★ இப்பாடலில், முதலில் வரும் 'சேந்தன' (சிவந்தன) என்னும் சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

★ எனவே, இது தீவக அணி ஆகும்.

## நிரல்நிறை அணி

**அணி விளக்கம்:-**

★ நிரல் - வரிசை; நிறை - நிறுத்தல். சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ இல்வாழ்க்கையின் பண்பு - அன்பு

★ இல்வாழ்க்கையின் பயன் - அறம்

**அணிப் பொருத்தம்:-**

★ இக்குறட்பாவில், அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால், இது நிரல்நிறை அணி ஆகும்.

## தன்மையணி

**அணி விளக்கம்:-**

★ ஒரு பொருளுக்குரிய இயற்கையாக அமைந்த, இயல்பான தன்மையைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு கூறுவது தன்மையணி ஆகும்.

★ இது, தன்மை நவிற்சி அணி எனவும் வழங்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ **"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்**
**கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்."**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான்.

★ அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிர் நீத்தான்.

**அணிப் பொருத்தம்:-**

★ கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால், இது தன்மை அணி ஆகும்.

# பா நயம் பாராட்டுக

## இலக்கிய நயம் பாராட்டுதல்

### இயல் 1

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே** - **கா. நமச்சிவாயர்**

**ஆசிரியர் குறிப்பு**

★ இயற்பெயர் - கா. நமச்சிவாயர்
★ சிறப்புப்பெயர் - பைந்தமிழ் ஆசான்
★ பெற்றோர் - இராமசாமி, அகிலாண்ட வல்லி
★ ஊர் - இராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம்
★ எழுதிய நூல்கள் - தேசிங்கு ராஜன், ஜனகன்

**மையக் கருத்து**

★ தமிழ்மொழியை தேன், உயிர்,ஒளி,வளம், இனிமை எனப் பலவகைகளில் போற்றுகின்றார்.

**திரண்ட கருத்து**

★ தேனைவிட இனிமையான செந்தமிழ் மொழியே! தென்னாடு பெருமை பெற
★ விளங்கும் தென் மொழியே! உடம்பில் ஒளிவிட்டு விளங்குகிற உயர்ந்த
★ மொழியே! உணர்வுக்கு உணர்வு தந்து ஒளிரும் தமிழ் மொழியே!
★ சிறப்பினால் வானத்தைவிட உயர்ந்த வண்டமிழ் மொழியே! மனிதர்களுக்கு
★ இரண்டு விழிகளாக விளங்கும் நல்ல மொழியே! தானாகவே சிறப்புற்று
★ விளங்கும் தனித்தமிழ் மொழியே! இனியும் தழைத்து இனிது உயர்வாயாக.

**மோனை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர்மோனை | | | |
|---|---|---|---|
| ★ தேனினும் | ★ தென்னாடு | ★ ஊனினும் | ★ உணர்வினுக் |
| ★ வானினும் | ★ மாந்தருக் | ★ தானனி | ★ தழைத்தினி |

**எதுகை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

| அடிதோறும் அழகாக அமைந்துவரும் அடிஎதுகை | | | |
|---|---|---|---|
| ★ தேனினும் | ★ ஊனினும் | ★ வானினும் | ★ தானனி |

**இயைபு**

★ அடிதோறும் இறுதி அசையோ எழுத்தோ சீரோ சொல்லோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.

| |
|---|
| ★ மொழியே மொழியே மொழியே |

**சொல் நயம்**

★ பாடலில் பயின்றுவந்துள்ள நயமுடைய சொற்களைப் போற்றுவது சொல்நயம்.

| தமிழைப் போற்றும் சொல்நயம் |
|---|
| ★ செந்தமிழே தென்மொழியே ஒண்டமிழே ஒளிர்தமிழே வண்டமிழே நன்மொழியே தனித்தமிழே தண்டமிழே |

**பொருள் நயம்**

★ பாடலில் வந்துள்ள பொருளின் சிறப்பை எடுத்துக் கூறுவது பொருள்நயம்.

| தமிழின் சிறப்புகளைக் கூறும் பொருள் நயம் |
|---|
| ★ தேனினும் இனிமை, தென்னாட்டின் பெருமை ஒளிவிடும் உயர்வு! உயிருக்கு உணர்வு! வானினும் உயர்வு! மனிதனுக்கு நன்மை! மொழிகளில் தனிமை! |

**சந்தம்**

★ பாடலின் பாவகையைச் சுட்டுவது சந்தநயம்.

★ பாவகை - எண்சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

**அணி**

★ பாடலுக்கு அழகு செய்வது அணி ஆகும்.

★ இப்பாடலில் தமிழ்மொழியே தமிழ்மொழியே என்னும் சொற்கள் மீண்டும்மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

## இயல் 3

**கத்துக்கடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி**
**உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்**
**இலையிலிட வெள்ளி எழும்** **- காளமேகப்புலவர்**

**ஆசிரியர் குறிப்பு**

★ இயற்பெயர் - வரதன்

★ சிறப்புப்பெயர் - காளமேகப்புலவர், வசைகவி, ஆசுகவி

★ எழுதிய நூல்கள் - புலவர் புராணம், சித்திரமடல், கடல் விலாசம்

**மையக் கருத்து**

★ உணவு காலம் தாழ்த்தி வழங்கப்பட்டதால், காலையில் நடக்கும் திருமணத்திற்கு மாலையில் அரிசி வந்து, அரிசி குத்தி உளையிலிட நிலவு வந்திடும், உணவு பரிமாற காலை விடிந்துவிடும் என்பதே இப்பாடலின் கருத்து.

**திரண்ட கருத்து**

★ திருமணத்தில் உணவு தாமதமாக பரிமாறப்பட்டபோது நகைச்சுவையாக காளமேகப்புலவர் பாடிய பாடல்.

| வசையாகப் பாடியது | வாழ்த்திப்பாடியது (வசை மீட்சி) |
|---|---|
| ★ கடலால் சூழப்பட்ட நாகைப் பட்டினத்தில் உள்ள காத்தானின் சத்திரத்தில் சூரியன் மறையும் (மாலை நேரத்தில்) பொழுது அரிசி வரும்.<br>★ ஊரில் உள்ள அனைவரும் தூங்கிய பின்னரே அதை உலையிலிட்டு உணவாக்குவர்.<br>★ அதை உண்பவர்க்கு பரிமாறும் பொழுது நடுஇரவு ஆகி வெள்ளி முளைத்து விடும்.<br>★ என்று வசையாகப் பாடியுள்ளார். | ★ கடலால் சூழப்பட்ட நாகைப் பட்டினத்தில் உள்ள காத்தானின் சத்திரத்தில் நாட்டில் பஞ்சம் பட்டினி உள்ள பொழுது அரிசி மூட்டைகள் கணக்கிலடங்காது வந்து இறங்கும்.<br>★ அதை சமைத்து (உலையில் இட்டு) ஊர்மக்களுக்குக் கொடுக்க அனைவரின் பசியும் அடங்கும்.<br>★ அவ்வாறு சமைக்கப்பட்ட அன்னத்தை(சோறு) இலையில் போடும் பொழுது அது நட்சத்திரத்தைப் போல் பிரகாசிக்கும்.<br>★ என்று வசைமீட்சியாக வாழ்த்திப் பாடியுள்ளார். |

**மோனை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர்மோனை | | |
|---|---|---|
| ★ கத்துக்கடல் காத்தான்தன் | ★ அத்தமிக்கும் அரிசிவரும் | ★ உலையிலிட ஊரடங்கும் |

**எதுகை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர்எதுகை |
|---|
| ★ கத்துக்கடல் காத்தான்தன் சத்திரத்தில் |

| அடிதோறும் அழகாக அமைந்துவரும் அடிஎதுகை | | | |
|---|---|---|---|
| ★ கத்துக்கடல் | ★ அத்தமிக்கும் | ★ உலையிலிட | ★ இலையிலிட |

**இயைபுத்தொடை**

★ அடிதோறும் இறுதி அசையோ எழுத்தோ சீரோ சொல்லோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.

**முரண் தொடை**

★ பாடலில் பயின்றுவரும் எதிர்ச் சொற்கள், எதிரெதிர் கருத்துகள் முரண் எனப்படும்.

| |
|---|
| ★ அத்தமிக்கும் ஓ வெள்ளி எழும் |

**சந்தம்**

★ பாடலின் பாவகையைச் சுட்டுவது சந்த நயம் ★ பா வகை -

**அணி**

★ பாடலுக்கு அழகு செவது அணி ஆகும் ★ அணி வகை - சிலேடை அணி (இரட்டுற மொழிதல் அணி)

## இயல் 4

**நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்ப்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு**
**கோல வெறிப்படைத்தோம்;**
**உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்**
**ஓட்டி மகிழ்ந்திடுவோம்;**
**பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு**
**பாடுவதும் வியப்போ? - பாரதியார்**

**ஆசிரியர் குறிப்பு**

★ இயற்பெயர் - சுப்பிரமணியன்

★ ஊர் - எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

★ பெற்றோர் - சின்னசாமி, இலக்குமி அம்மாள்

★ சிறப்புப் பெயர்கள் - முண்டாசுக்கவி, மகாகவி

★ இயற்றிய நூல்கள் - பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்

**மையக்கருத்து**

★ இரவு நேர வானத்து இயற்கையைப் போற்றுகின்றார் கவிஞர். பாரதியார்.

**திரண்ட கருத்து**

★ நிலவையும் வானத்தில் இருக்கும் சிறு சிறு விண்மீனையும் தென்றல் காற்றையும் ஒருசேர நான் இரசிக்கும்போது, மனதிற்குள் ஓர் பேரின்பத்தூண்டல் ஏற்படுகின்றது.

★ மனம் என்னும் கற்பனைப் புள்ளிமானை எல்லா இடத்திலும் ஓட்டி மகிழ்ந்திருப்போம். மாபெரும் பலாச்சுளை போன்ற சுவையை ஒரு சிறு வண்டு எப்படிச் சொல்லும்?

★ அதுபோல், இயற்கையின் சிறப்பை ஒரு கவிஞன் என்னால் மட்டும் எப்படிச் சொல்ல இயலும்.

**மோனை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர் மோனை | | |
|---|---|---|
| ★ நிலாவையும் நேர்ப்பட | ★ குலாவும் குழம்பைக் குடித்தொரு கோல | ★ பலாவின் பாடுவதும் |

**எதுகைத்தொடை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

| அடிதோறும் அழகாக அமைந்துவரும் அடி எதுகை | | | |
|---|---|---|---|
| ★ நிலாவையும் | ★ குலாவும் | ★ உலாவும் | ★ பலாவின் |

**இயைபுத்தொடை**

★ அடிதோறும் இறுதி அசையோ எழுத்தோ சீரோ சொல்லோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.

| | |
|---|---|
| ★ படைத்தோம் | ★ மகிழ்ந்திடுவோம் |

**சந்தம்**

★ பாடலின் பாவகையைச் சுட்டுவது சந்த நயம்

★ பாவகை - அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**அணி**

★ பாடலுக்கு அழகு செய்வது அணி ஆகும்.

★ அணி வகை - உயர்வு நவிற்சி அணி

## இயல் 7

**ஏர்பிடிக்கும் கைகளுக்கே**
**வாழ்த்துக் கூறுவோம் - வறுமை**
**ஏகும்வரை செய்வபவர்கே**
**வாழ்த்துக் கூறுவோம் - என்றும்**
**ஊர்செழிக்கத் தொழில்செய்யும்**
**உழைப்பாளிகள் - வாழ்வு**
**உயரும்வகை செய்பவர்க்கே**
**வாழ்த்துக் கூறுவோம்!**

**- கவி கா.மு ஷெரீப்**

**ஆசிரியர் குறிப்பு**

★ பெயர் - கவி கா.மு. ஷெரீப்

★ சிறப்பு - கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பக உரிமையாளர், அரசியல்வாதி, ஆன்மிகவாதி எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.

★ பிறந்த நாள் - 11.08.1914 தஞ்சை மாவட்டம் அபிவிருத்தீஸ்வரம்

★ பெற்றோர் - இராவுத்தர், பாத்துமா

★ எழுதிய நூல்கள் - நல்ல மனைவி, விதியை வெல்வோம், தஞ்சை இளவரசி

★ நடத்திய இதழ் - ஒளி

**மையக்கருத்து**

★ உழைக்கும் மக்களுக்கு வாழ்த்து கூறும் பாடல் இது.

**திரண்ட கருத்து**

★ ஏர்பிடித்து உழைத்து உலக மக்களுக்கு உணவளிக்கும் விவசாயிகளுக்கு வாழ்த்து கூறுவோம்.

★ வறுமை நீங்க உழைக்கும் உலகத் தொழிலாளார்களுக்கு வாழ்த்து கூறுவோம்.

★ ஊர்செழிக்க உதவும் உழைப்பாளிகளின் வாழ்வு உயர வாழ்த்து கூறுவோம்

★ என உழைக்கும் வர்க மக்கள் அனைவருக்கும் மே தின நன்னாளில் வாழ்த்து கூறுகின்றார் கவிஞர் கா. மு. ஷெரிப் அவர்கள்.

**மோனை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும்.

| அடிதோறும் அழகாய் அமைந்துவரும் அடிமோனை | | | |
|---|---|---|---|
| ★ ஏர்பிடிக்கும் | ★ ஏகும்வரை | ★ ஊர்செழிக்கத் | ★ உழைப்பாளிகள் |

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர் மோனை |
|---|
| ★ ஊர்செழிக்கத் உழைப்பாளிகள் |

**எதுகைத்தொடை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர் எதுகை | | |
|---|---|---|
| ★ ஏர்பிடிக்கும் | ★ ஊர்செழிக்க | ★ உயரும் செய்பவருக்கே |

**இயைபுத் தொடை**

★ அடிதோறும் இறுதி அசையோ எழுத்தோ சீரோ சொல்லோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.

| |
|---|
| ★ கூறுவோம் கூறுவோம் கூறுவோம் |

**முரண் தொடை**

★ பாடலில் பயின்றுவரும் எதிர்ச் சொற்கள், எதிரெதிர் கருத்துகள் முரண் எனப்படும்.

| |
|---|
| ★ வறுமை செழிப்பு |

**சந்தம்**

★ பாடலின் பாவகையைச் சுட்டுவது சந்த நயம் ஆகும்.

★ பாவகை -

**அணி**

★ பாடலுக்கு அழகு செய்வது அணி ஆகும்.

★ அணி வகை - சொற்பொருள் பின்வரு நிலையணி

## இயல் 8

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஓடுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியப் பூங்காற்றே**
**மென்காற்றின் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. - வள்ளலார்**

**மையக்கருத்து**

★ இறைவனின் சிறப்புகளை இப்பாடல் கூறுகின்றது.

**திரண்ட கருத்து**

★ இந்த வாழ்க்கை என்னும் வெயிலில் நாம் வருந்தும்போது நமக்கு கிடைத்த குளிர் தரும் நிழலாகவும், கனி தரும் மரமாய் இருக்கிறான் இறைவன்.

★ உடலாற நிழல் கொடுத்து, பசியாற கனிகொடுத்து ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரைப் போல தாகம் தீர்த்தவனே!

★ அந்த ஓடையில் மணம் வீசும் மலராகவும் இருப்பவனே!

★ மணம்வீசும் அந்த மலர்களின் வழியே வரும் பூங்காற்றாகவும் இருப்பவன் இறைவன்.

★ பூங்காற்றை உணருவதால் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் பயனாகவும் இருப்பவனே! அந்த மலர் போல் மனதுக்கு மகிழ்ச்சி தருபவனே!

★ இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவா! சிறு வயதில் என்னை ஆட்கொண்ட இறைவா! நான் அணிவிக்கும் இந்த பாமாலையை ஏற்று அருளேன் என்று கொஞ்சுகிறார் வள்ளலார்.

**சொல்நயமும் பொருள் நயமும்**

★ வள்ளலார் இறைவனைச் சிறந்த சொற்களாலும் பொருளாலும் வாழ்த்துகின்றார்.

★ நிழலில் கனிந்த கனி ★ ஊற்றின் தீஞ்சுவைத் தண்ணீர் ★ ஓடையில் மலர்ந்த சுகந்த மலர்

★ மெல்லிய பூங்காற்று ★ காற்றின் பயன் ★ எனை மணந்த மணவாளன்

**மோனைத்தொடை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர் மோனை | |
|---|---|
| ★ கோடையிலே கொள்ளும்வகை கிடைத்த குளிர்தருவே கனியே | ★ ஓடையிலே ஓடுகின்ற |
| ★ மேடையிலே மெல்லிய மென்காற்றின் | ★ ஆடையிலே ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. |

**எதுகை**

★ பாடலின் அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

| சீர்தோறும் சிறப்பாகச் சீறிவரும் சீர் எதுகை | | |
|---|---|---|
| ★ கோடையிலே கிடைத்த | ★ ஓடையிலே இடைமலர்ந்த | ★ ஆடையிலே ஆடுகின்ற |

| அடிதோறும் அழகாக அமைந்துவரும் அடிஎதுகை | | | |
|---|---|---|---|
| ★ கோடையிலே | ★ ஓடையிலே | ★ மேடையிலே | ★ ஆடையிலே |

**இயைபு**

★ அடிதோறும் இறுதி அசையோ எழுத்தோ சீரோ சொல்லோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ★ கனியே | ★ மலரே | ★ பயனே | ★ தருளே. |

**முரண் தொடை**

★ பாடலில் பயின்றுவரும் எதிர்ச் சொற்கள், எதிரெதிர் கருத்துகள் முரண் எனப்படும்.

| |
|---|
| ★ கோடை ஓ குளிர் |

**சந்தம்**

★ பாடலின் பாவகையைச் சுட்டுவது சந்த நயம் ஆகும். ★ பாவகை -

**அணி**

★ பாடலுக்கு அழகு செய்வது அணி ஆகும். ★ அணி வகை - உருவக அணி

# மொழிபெயர்ப்பு

## இயல் 1

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela.

★ ஒருவனுக்கு புரியும் மொழியில் பேசினால் அது அவன் மூளைக்கு போய் சேரும். அதுவே, அவன் தாய் மொழியில் பேசினால் அது அவன் இதயத்திற்கு செல்லும் - நெல்சன் மண்டேலா

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown.

★ ஒருவரது மொழியே பண்பாட்டை நிர்ணயிக்கிறது. அதுவே அவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எதை நோக்கி பயணிக்கிறார்கள் என்பதையும் அறிவுறுத்திகிறது. - ரிடா மே ப்ரௌன்

## இயல் 2

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**இயற்கையின் வருணனை**

விடியற்காலையில் செங்கதிரோன், தன் கதிர்களைக் கொண்டு இருளைப் போக்குவதற்காகத் தோன்றிவிடுகிறான். வெண்மேகங்கள் தன்னை பரப்பிக் கொள்ள வானில் அலைந்து திரிய ஆரம்பித்துவிட்டன. வண்ணத்துப்பூச்சிகள் பூக்களைச் சுற்றி வலம் வருகின்றன. இளங்காற்றில் பூக்களின் நறுமணம் கலந்து வருகின்றது. தென்றல் பரவி எங்கெங்கும் அமைதியைப் பரப்புகிறது.

## இயல் 3

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Sri lanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

மதிப்பிற்குறிய சான்றோர்களே! தாய்மார்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். நான் நம் தாய் மொழியான தமிழ் பண்பாட்டைப் பற்றிக் கருத்துகள் சிலவற்றைப் பேச வந்துள்ளேன். நம் தமிழ்ப் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாகரீகமும் எவ்வாறு இருந்தது? என்பதை நம் பழமையான சங்க இலக்கியம் மூலம் அறியலாம். தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர்களே வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்திருக்க வேண்டும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, போன்ற நாடுகளில் இந்தியக் பண்பாடு வேரூன்றி நிற்கிறது. நம் பண்பாடு பழமையென்பதால் அது இன்றளவும் தொடர்ந்து மேம்பட்டு கொண்டுதான் இருக்கிறது. நம் பண்பாட்டை எண்ணிப் பெருமையடைவோம். நன்றி.

## இயல் 4

Malar : Devi, switch off the lights when you leave the room.

Devi : Yeah. We have to save electricity.

Malar : Our nation spend a lot of electricity for lighting up our streets in the night.

Devi : who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

மலர்: தேவி, அறையை விட்டு வெளியேறும் போது மின்விளக்குகளை அணைத்துவிட்டு வா.

தேவி: ஆம், மலர். நாம் மின்சாரத்தை சேமிக்க வேண்டும்.

மலர்: நம் நாடு, இரவு முழுவதும் எரியும் தெருவிளக்குகளிலேயே அதிக மின்சாரத்தை வீணாக்குகிறது.

தேவி: யாருக்குத் தெரியும். நம் நாடு கூடிய விரைவில் செயற்கை நிலவுகளை விண்ணில் ஏவி நமக்கு வெளிச்சத்தைத் தரக்கூடைய நிலைக்குக்கூட வரலாம்.

மலர்: சில நாடுகள் இந்த வகையான ஒளியூட்டச் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவப்போவதாக நான் புத்தகத்தில் படித்தேன்.

தேவி: அருமையான செய்தி! அவ்வாறு செய்தால் வரும்காலத்தில் வெளிச்சத்தை இழந்த இடங்களுக்கு வெளிச்சம் தர உதவும்.

## இயல் 5

**ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.**

| யாழிசை | ahopirIt's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்;<br>பேத்தி,<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>- பாரதிதாசன். | Wondering at the lute music Coming from the chamber Entered I to look up to in still My grand-daughter Learning by rote the verses Of a didactic compilation. Translated by Kavignar Desini |

★ Lute music - யாழிசை ★ Chamber - அறை ★ To look up - மேலே பார்க்க

★ Grand-daughter - பேத்தி (பெயர்த்தி) ★ Rote - வசனம் ★ Didactic compilation - செயற்கையானத் தொகுப்பு

## இயல் 6

Koothu

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the arists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright make up. Koothu is very popular among rural areas.

**கூத்து**

தெருகூத்து என்பது, அதன் பெயர் குறிப்பிடுவது போல, தெருக்களில் நிகழ்த்தப்படும் ஒரு பிரபலமான நாடக வடிவமாகும். இது கிராமப்புறக் கலைஞர்களால் நிகழ்த்தப்படுகிறது. தெருக்கூத்துக் கதைகள் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பிற பழங்காலப் புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. தெருக்கூத்துக் கலையில் அதிகப் பாடல்கள் உரையாடல்களுடன் இடம்பெறுகின்றன. இந்தப் பாடல்களெல்லாம் அந்த நாடகக் காட்சியின் இடத்திற்குத் தகுந்தாற்போல அக் கலைஞர்களால் தாமாகவே உருவாக்கிக் கொள்ளப்பட்டவை. தெருக்கூத்து நாடகத்தில் ஒரு சிறிய இசைக்குழுவுடன் பதினைந்து முதல் இருபது நடிகர்கள் கூத்து குழுவை உருவாக்குகிறார்கள். இசைக்குழுவில் ஒரு பாடகர் இருந்தாலும், கலைஞர்கள் தங்கள் சொந்தக் குரலிலேயே பாடுகிறார்கள். கலைஞர்கள் பலவகை ஆடை அணிந்துகொண்டு தங்களைத்தாங்களே ஒப்பனை செய்துகொள்கிறார்கள். தெருக்கூத்து கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமான கலையாகும்.

## இயல் 7

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

சங்க இலக்கியத்தில் தமிழ் நாட்டின் ஐந்து வகை நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த புவியியல் பிரிவுகளில், மருத நிலம் வேளாண்மைக்கு ஏற்றதாக இருந்தது, ஏனெனில் அது மிகவும் வளமான நிலங்களைக் கொண்டிருந்தது. ஒரு விவசாயின் நில வளம் என்பது சூரிய ஒளி, பருவகால மழை, மண்ணின் வளம் இம் மூன்றையும் பொறுத்தது. இயற்கையின் இந்த மூன்று கூறுகளில், சூரிய ஒளி இன்றியமையாததாக பண்டைய தமிழர்களால் கருதப்பட்டது.

## இயல் 8

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the Beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar|s behavior, the Emperor summoned him t his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately? The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said. "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

முன்பு ஒரு காலத்தில் ரோமில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் "ஆண்டவன் யாருக்கு உதவுகின்றாரோ அவன்தான் உதவியைப் பெறுவான்" என நாள்தோறும் நகரத்தின் தெருக்களில் கூவிக் கொண்டே இருப்பான் இரண்டாவது பிச்சைக்காரன், "அரசன் யாருக்கு உதவுகிறாரோஅவன்தான் உதவியைப் பெறுவான்" என நாள்தோறும் நகரத்தின் தெருக்களில் கூவிக்கொண்டே இருப்பான் . இதை அவர்கள் தினமும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். தெருக்களில் செல்லும்போதெல்லாம் ரோம் பேரரசர் காதுகளில் இது விழுந்தது, தன்னைக் கடவுளுக்கு நிகராக பாவித்து, ரோம் வீதிகளில் பிரபலப்படுத்திய பிச்சைக்காரருக்கு உதவ முடிவு செய்தார்.

பேரரசர் ஒரு பெரிய ரொட்டியைச் சுட்டு, அதில் தங்கக் கட்டிகளால் நிரப்பவும் கட்டளையிட்டார். தன்னைப்புகழந்த இரண்டாம் பிச்சைக்காரனிடம் ரொட்டி போய் சேர்ந்தது. ரொட்டியின் அதிக எடையை உணர்ந்த அந்தப் பிச்சைக்காரன், தனது நண்பரான முதல் பிச்சைக்காரனைச் சந்தித்தவுடன் அதை அவரிடம் விற்றுவிட்டான். அவர் அதை வீட்டிற்கு எடுத்துச் சென்றார். அவர் ரொட்டியை வெட்டும்போது தங்கக் கட்டிகள் பொன்னொளி வீசியதைக் கண்டார். கடவுளுக்கு நன்றி கூறி, அன்றிலிருந்து பிச்சை எடுப்பதை நிறுத்தினார். ஆனால், இரண்டாம் பிச்சைக்காரர் முன்புபோலவே நகரத்தின் தெருக்களில் தொடர்ந்து தொடர்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். இதைக்கேட்டுக் குழப்பமடைந்த பேரரசர் அவனை வரவழைத்து அவரிடம், "நான் சமீபத்தில் உங்களுக்கு அனுப்பிய ரொட்டியை நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த நபர், "நான் அதை என் நண்பருக்கு விற்றுவிட்டேன் ஏனென்றால் அது கனமாக இருந்தது, மேலும் அது நன்றாக சுடப்பட்டதாகத் தெரியவில்லை" என்று சொன்னார். அதற்குப் பேரரசர் "உண்மையிலேயே ஆண்டவன் யாருக்கு உதவுகின்றாரோ அவரே உதவியைப் பெறுகிறார்கள்" என்று உணர்ந்து கூறி, இரண்டாம் பிச்சைக்காரனை தனது அரண்மனையிலிருந்து வெளியேற்றினார்.

## இயல் 9

1. Education is what remains after one has forgotten what one has learned in School.- Albert Einstein
   - ★ கல்வி என்பது ஒருவன்தன் பள்ளியில் கற்றவை மறந்துபோக எஞ்சியுள்ளவைதான். - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
2. Tomorrow is often the busiest day of the week.- Spanish Proverb
   - ★ வாரத்தின் நாள்களுள் மிகவும் பரபரப்பான நாள் நாளை. - ஸ்பானிஷ் பழமொழி
3. It is during our darkest moments that we must focus to see the light. - Aristotle
   - ★ வாழ்வின் மிக இருண்ட நிலையில்தான் நாம் வெளிச்சத்தைக் காண கவனம் செலுத்த வேண்டும். - அரிஸ்டாட்டில்
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. - Winston Churchill.
   - ★ வெற்றி என்பது முடிவல்ல. தோல்வி என்பது அபாயகரமானதல்ல. தொடர்ந்து முயலும் துணிவே சிறப்பானது. - வின்ஸ்டன் சர்ச்சில்

# நிற்க அதற்குத் தக

## இயல் 1

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

★ பிறர் மனம் மகிழும்படி, அறம் வளரும் படி, புகழ் பெருகும் படி, நல்ல நண்பர்கள் சேரும் படி, அன்பு நிறையும் படியான வழிகளையே நான் பின்பற்றுவேன். என் நண்பர்களுக்கும் இவ்வழிகளையே பரிந்துரைப்பேன்.

## இயல் 2

**புயலின்போது அரசு வெளியிட்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

★ மின்சாரம் துண்டிக்கப்போவதை அறிந்த நான் மின் விளக்குகளுடன் என் குடும்பத்தை ஒன்றுபடுத்துவேன்.

★ என் நண்பர்களை தொடர்பு கொண்டு அவர்களையும் பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்துவேன்.

★ புயல் தாக்கத்திலிருந்து நம்மையும் நம் சுற்றத்தாரையும் எப்படி பாதுகாக்க, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

## இயல் 3

**மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?**

★ இன்று நாம், நம் நாட்டின் பாரம்பரிய உணவு பழக்கவழக்க முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டுவிட்டோம்.

★ கம்பு, கேழ்வரகு, சாமை, தினை போன்ற உடலுக்கு நன்மை தரக் கூடிய உணவு வகைகளை நாம் மறந்துவிட்டோம்.

★ பீட்சா போன்ற வெளிநாட்டு உணவுகளை உட்கொள்ளும்போது நமக்கு நோய்கள் ஏற்படுகின்றன.

★ காய்கறி, பழம், கீரைவகை, தானியம் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ அவ்வாறு சேர்த்துக் கொள்வதால், நாம் நோயற்ற உடல் நலத்தோடு கூடிய வாழ்க்கை வாழ முடியும்.

## இயல் 4

**இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்படவைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.**

| | |
|---|---|
| 1 | **புத்தகங்களை வாசிக்கச் செய்வேன்.** |
| 2 | **வீட்டுத் தோட்டம் அமைத்து, பராமரிக்கச் செய்வேன்.** |
| 3 | **குடும்பமாக இணைந்து விளையாடும் விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்.** |
| 4 | **வீட்டில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசி மகிழ்வோம்.** |

## இயல் 5

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | தினமும் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்வேன். |
| ஆசிரியர்களிடம் மரியாதையுடன் நடந்துக்கொள்வேன். | உடன்பிறந்தாரோடு பேசி, உரையாடுவேன். மரியாதை கலந்த நகைச்சுவை செய்வேன். |
| பள்ளியைத் தூய்மையாக வைத்திருப்பேன். | வீட்டுத் தோட்டம் அமைத்துப் பராமரிப்பேன் |
| பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு என் திறமையை வெளிப்படுத்துவேன். | நாள்தோறும் சிறந்த புத்தகங்களை வாசிப்பேன். வீட்டின் நிதி நிலை அறிந்து செயல்படுவேன். |

## இயல் 6

கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| 2 | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 3 | எங்கள் பள்ளி ஆண்டு விழாவில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்வேன். |
| 4 | எங்கள் ஊர்த் திருவிழாவில் கரகாட்டம், தப்பாட்டம் போன்றவை நடத்தச் செய்வேன். |
| 5 | நாட்டுப்புறக் கலைகள் வழியாக நெகிழி ஒழிப்பு, இயற்கை விவசாயம், தமிழ்மருத்துவம் போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவேன். |
| 6 | எங்கள் ஊரில் உள்ள அனைத்து இளைஞர்களையும் மாணவர்களையும் கட்டாயம் ஏதேனும் ஒரு கலையைப் பயிலச் செய்வேன். |

## இயல் 7

கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.....

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்கு கூறுவேன். அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். | கல்வெட்டுகள் வெட்டுவதற்கான காரணங்களை எடுத்துக் கூறுவேன். கல்வெட்டுகளைப் பாதுகாக்கும் முறைகளைச் சொல்வேன். |
| கல்வெட்டுக்கள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | கல்வெட்டுகளில் உள்ள செய்திகளை விளக்கிக் கூறுவேன். |
| பழங்கால கல்வெட்டுகளில் உள்ள எழுத்துமுறைகள் பற்றி அறியச் செய்வேன். | கல்வெட்டுகளுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன். |

## இயல் 8

| நாம் செய்யவேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம் எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | யாரிடமும் பகைமை உணர்வு ஏற்படாது. |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | அனைவரிடமும் நட்புடன் பழகலாம். |
| புன்னகை முகத்துடன் எல்லோரிடமும் பேசலாம் | நகைச்சுவையால் நட்பும் அன்பும் வளரும் |

## இயல் 9

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை......

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மனமகிழ்ச்சி |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு |
| பேருந்தில் முதியவரின் பையைச் சுமந்து அவரை இருக்கையில் அமரவைத்தேன். | பெரியவரின் கனிவான பார்வையால் நன்றியுணர்வை உணர்ந்த நெகிழ்ச்சி. |

# காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

## இயல் 1



★ கண்டதைப் படிப்பவன் பண்டிதன் ஆவான் என்பது பழமொழி.

★ முதலாமவன் செயலுக்குமுன் சிந்திக்கின்றான் விடை கிடைக்கவில்லை.

★ இரண்டாமவன் செயலை உற்று நோக்குகின்றான் அப்போதும் விடை கிடைக்கவில்லை.

★ மூன்றாமவன் அனுபவங்களை ஏட்டில் படிக்கின்றான் விடை திறந்தது.

★ கண்டு, அதைப் படிப்பவன் பண்டிதன் ஆவான் என்பதே உண்மை மொழி.

## இயல் 2

★ ஒரு வளர்ந்த ஆள் ஒரு நிமிடத்துக்கு 7-8 லிட்டர் காற்றைச் சுவாசிக்கிறார்.

★ ஒரு நாளைக்கு 11,000 லிட்டர் காற்றை. இதில் 20 சதவீதம் ஆக்சிஜன்.

★ ஒரு மனிதர் ஒரு நாளைக்கு 550 லிட்டர் ஆக்சிஜனை கிரகித்துக்கொள்கிறார்.

★ 75 லிட்டர் ஆக்சிஜன் சிலிண்டர் ஒன்றின் விலை ரூ.6,500. இதைக்கொண்டு கணக்கிட்டால் ஒரு மனிதன் ஒரு நாளைக்குச் சுவாசிக்கும் ஆக்சிஜனின் மதிப்பு ரூ.13 லட்சம்.

★ ஒரு வளர்ந்த மரம் உற்பத்தி செய்யும் ஆக்சிஜனின் அளவு ஆண்டுக்கு ரூ.23 கோடி.

★ மண்ணில் வளர்ந்து மானுடம் காத்த மரம் இன்று மனிதன் முதுகில் முளைத்து மூச்சுத் தருகின்றது.



## இயல் 3

★ உண்ணும் அளவும் உணவில்லை
உடுக்கும் உடையும் அழகில்லை! - நான்
உறங்கிவாழ பெருவீடும் இல்லை!
உள்ளம் மட்டும் பணக்கூடு - எனக்குச்
சொல்லும் அளவில் வாழ்வில்லை
சொல்லி அழவும் ஆளில்லை - என்றும்
இல்லை என்றே சொன்னதில்லை
இந்தா ஒருவாய் வாங்கடா!



## இயல் 4

★ விஞ்ஞானத்தின் வீரியத்தால்
விளைந்தது விபரீதம் - இன்று
தொழில் நுட்பத்தின் சாதனையால்
தொலைந்தது மானுடம் - என்றும்
வாயால்பேசிய மனிதயினம்
வாட்ஸப்பில் முடங்கிப்போனதடா - கண்
மூழ்கிப்போனதால் கைபேசிதான்
முதுகில் சவாரி செய்கின்றது




## இயல் 5

**மரத்தைப் பற்றி பாடல் சொல்லும் ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் வெட்டிய மரங்களின்மீது அமர்த்தியுள்ளார்.**



★ கண்ணைவிற்று ஓவியம் பெற்றோரே நாட்டின்
மண்ணைவிற்று வீடு சமைத்தோரே!
மரங்களைவெட்டி மனைகளாக்கினோரே - பூமித்தாயின்
கரங்களைவெட்டி கழனி யென்றோரே!
பட்டங்கள்பெற்ற பதருகளே!பதருகளே - இனிஎந்தச்
சட்டங்களும் காற்றைத்தராது! தராது!
பாருக்குக்கிடைத்த பரிசுகள் மரங்கள்! - இனி
யாருக்கும்கிடைக்காப் புனித வரங்கள்!

## இயல் 6



- ★ இந்தப் படம் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான தேவராட்டத்தைக் குறிப்பதாக உள்ளது.
- ★ ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம் தேவராட்டம் ஆகும்.
- ★ உறுமி எனப்படும் தேவதந்துபி இவ்வாட்டத்தின் இசைக்கருவியாகும்.
- ★ வேட்டிகட்டியும், ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் தலையிலும், இடையில் சிறுதுணி கட்டியும் ஆடுவர்.
- ★ இவ்வாட்டத்தில் பெரும்பாலும் எட்டுமுதல் பதிமூன்று கலைஞர்கள் கலந்துகொள்வர்.

## இயல் 7




★ இந்தப் படம் ஓர் அற்புதமான சுவரோவியக் காட்சி. இக்காட்சி வரையப்பட்ட இடம் திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர். இந்த ஓவியம் 17 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட இந்தப் படத்தில் போருக்குச் செல்லும் வீரர்களின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. யானைப்படை குதிரைப்படை காலாட்படை என்னும் முப்படை வீரர்களும் வீறுகொண்டு செல்வதை மிகவும் சிறப்பாக வரைந்துள்ளனர். இப்படத்தின்மூலம் தமிழர்களின் வீரத்தையும் கலைஞர்களின் கைவண்ணத்தையும் அறிந்துகொண்டேன்.



★ ஏர்பிடித்த கைகள் - அவன்
ஏக்கத்துடன் கண்கள்
கார்கால மழையே - இன்று
கடுகளவேனும் பெய்யே!
ஊர்வாழ உழைப்பவன் - இவன்
ஓய்வறியச் சூரியன்
பார்போறும் விவசாயி - நாளும்
பார்க்கிறான் உன்னையே
மண்சேற்றில் கால்வைத்தால் - நாங்கள்
வெண்சோற்றில் கைவைப்போம்!

**விருந்தோம்பல்**



★ இந்தப் படம் 17 ஆம் நூற்றாண்டின் சுவரோவியம்.

★ சிதம்பரம் மாவட்டத்தில் கிடைத்த சுவரோவியம்.

★ இப்படத்தில் உணவை ஆக்கலும் பிறருக்கு அதைப் பண்புடன் அளித்தலும் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

★ அக்காலத்தில் ஒரே குடும்பத்துப் பெண்கள் கூட்டாக உணவு சமைக்கின்றனர் ஆண்கள் அமர்ந்துண்கின்றனர்.

★ ஒற்றுமையும் விருந்தோம்பலும் தமிழரின் பண்பாடு என்பதை உணர்த்துகின்றது.



**கொடை**


★ இந்தப்படம் சிதம்பரம் மாவட்டத்தில் கிடைத்த 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம்.

★ மன்னன் மக்களுக்கு வரிசையாகப் பொருள் தருகின்றான்.

★ மக்கள் பண்புடன் அதனைப் பெற்றுக்கொள்கின்றனர்.

★ காவலர்கள் உடனிருக்க மன்னனின் துணையிருப்பும் கொடைச்சிறப்பும் விளங்குகின்றது.

★ கொடையளிப்பது மன்னனின் கடமை என்பது இதன்மூலம் விளங்குகின்றது.



| மனித மூளை | செயற்கை நுண்ணறிவின் தொழில் நுட்பம் |
|---|---|
| ★ கோடி தகவல்களை தனித்தனியாக தனக்குள் தக்க வைத்துக் கொள்கிறது மனித மூளை! | ★ எண்ணிலடங்கா நினைவாற்றலைக் கொண்டது. Kilo Byte முதல் Yotta Byte வரை நினைவாற்றல் அமையும். |
| ★ ஒவ்வொரு நொடியும் நமது மூளைக்குள் 1 லட்சம் அமில மாற்றங்கள் நமக்குத் தெரியாமலே நடக்கின்றன. | ★ ஒரு நொடிக்குள் கோடிக்கணக்கான தகவல்களையும் கணக்குகளையும் கொண்டுவந்து தரும். |
| ★ ஆயிரமாயிரம் நூல்களின் சொற்கள் நினைவில் தங்கும். | ★ பல்லாயிரக்கணக்கான நூல்களே நினைவில் தங்கும். |
| ★ தரமானவற்றை வேகமாகச் சிந்திக்கக்கூடியது. | ★ விரைவு, ல்துல்லியம், நேர்த்தி, எல்லையற்ற நீட்சி என்னும் எலாவகையிலும் சிந்திக்கின்றது |
| ★ ரோஸ் ஹிப் நரம்பு அலாதியான பணியைச் செய்கின்றது. | ★ நினைவுச் சில்லுகள் மிக அலாதியான தரவுகளைத் துல்லியமாக்குகின்றன. |



**அட்டைப்படம் முன்பக்கம்**

★ நாடக அரங்கில் விளக்கொளி ஏந்தும் பாவையர்.

★ 18 ஆம் நூற்றாண்டு சுவரோவியம். இராமலிங்கவிலாச அரண்மனை, இராமநாதபுரம்

★ இப்படம் சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டம் அரங்கேற்றுக்காதையில் இடம்பெறும் மாதவியின் நடன நிகழ்ச்சி நடைபெறும் மேடையைக் காட்டுகின்றது.

★ நால்வகை வருணபூதங்களின் உருவங்களை எழுதி வைத்தனர்.

★ தூண்களின் நிழல் அரங்கத்தில் விழாதவாறு ஒளிவிடும் நிலை விளக்குகளை வைத்தனர்.

★ ஓவிய வேலைப்பாடுகளுடன் மேல்விதானத்தைக் கட்டினர்.

★ புகழ்பெற்ற முத்துமாலை வகைகளான மாலை, தாமம், வளை மாலைகளை அரங்கம் முழுதும் தொங்கவிட்டனர்.

★ இவ்வாறு, புதுமையான அரிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றது மாதவியின் ஆடல் அரங்கம்!

## விரைவுக் குறியீட்டு வினா - விடை

**1. "இன்னறும் பாப்பத்தே என் தொகையே" - இவ்வடிகளில் பத்தும் எட்டும் குறிப்பவை**

அ) சங்க இலக்கியங்கள் ஆ) அற இலக்கியங்கள் இ) காப்பியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்

விடை - **அ) சங்க இலக்கியங்கள்**

**2. பொருத்துக.**

1. பாவலரேறு - அ) தமிழழகனார் 2. பன்மொழிப் புலவர் - ஆ) தேவநேயப் பாவாணர்

3. மொழிஞாயிறு - இ) க. அப்பாத்துரையார் 4. சந்தக்கவிமணி - ஈ) பெருஞ்சித்திரனார்

விடை - **1 ஈ) - 2 இ) 3 - ஆ) 4 - அ)**

**3. பொருத்துக.**

1. மா - அ) நாற்று 2. தென்னை - ஆ) கன்று

3. பனை - இ) பிள்ளை 4. கத்தரி - ஈ) வடலி விடை - **1 ஆ) - 2 இ) 3 - ஈ) 4 - அ)**

**4. "நித்தம் அணைகிடந்தே**
**சங்கத்தவர் காக்க" - இவ்வடிகளை ஒத்திருக்கும் கடலின் செயல்**

அ) கடலில் தோன்றும் சங்குகளைக் கரைகாணாதவாறு அணைத்தல் ஆ) நீரலையைத் தடுத்து நிறுத்திச் சங்கினைக் காத்தல்

இ) மூவகைச் சங்கினைத்தரும் கடலைக் காத்தல் ஈ) கடல் தன் அலைகளால் சங்கினை வெளியே தள்ளுதல்

விடை - **ஆ) நீரலையைத் தடுத்து நிறுத்திச் சங்கினைக் காத்தல்**

**5. சார்பெழுத்துகள் என்பவை**

அ) ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகளைச் சார்ந்து வருபவை. ஆ) மூவகை அளபெடைகளை மட்டும் சார்ந்து வருபவை

இ) முதலெழுத்துகளைச் சார்ந்து வருபவை ஈ) ஒரு மொழியைச் சார்ந்து வருபவை

விடை - **இ) முதலெழுத்துகளைச் சார்ந்து வருபவை**

**6. பொருத்துக.**

1. சொல்லிசை அளபெடை - அ) இயற்றியவர் 2. பொதுமொழி - ஆ) ஓஒதல் வேண்டும்

3. வினையாலணையும் பெயர் - இ) உரனசைஇ 4. செய்யுளிசை அளபெடை - ஈ) வேங்கை

விடை - **1 இ) - 2 ஈ) 3 அ) 4 ஆ)**

**7. பொருத்துக.**

1. வினைமுற்று - அ) பேறு 2. தொழிற்பெயர் - ஆ) கட்டு

3. முதனிலை தொழிற்பெயர் - இ) எய்தல் 4. வினையடி - ஈ) எய்தும்

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ) 4 அ)**

**8. சொல் என்பது**

அ) ஓர் எழுத்து தனித்து உச்சரிக்கப்படுவது ஆ) பல எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது

இ) இரண்டு எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது

ஈ) ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகளோடு சேர்ந்தோ பொருளைத் தருவது

விடை - **ஈ) ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகளோடு சேர்ந்தோ பொருளைத் தருவது**

**9. பொதுமொழி என்பது**

அ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளில் வருவது ஆ) குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கான பொதுவான மொழி

இ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து பொதுவாய் அமைவது

ஈ) மக்களால் பொதுவாகப் பேசப்படும் மொழி

விடை - **இ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து பொதுவாய் அமைவது**

**10. வெ∴∴குவார்க்கில்லை. எடுப்பதூஉம் - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

விடை - **ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை**

**11. இலையுதிர்காலம் ---------------------- சருகாயின! மழைக்காலம் ---------------------- தழைத்தன! சருகுகளோ செழுமையான உரங்களாயின் - புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.**

அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன

இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம் ஈ) மலையெல்லாம், முளைத்தன

விடை - **இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்**

**12. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.**

அ) ஆலமரம், வேப்பமரம் ஆ) ஆலமரம், வேலமரம் இ) அரசமரம், வேங்கைமரம் ஈ) வேப்பமரம், ஆலமரம்

விடை - **அ) ஆலமரம், வேப்பமரம்**

**13. பொருத்துக.**

1. ஐயூர் முடவனார் - அ) செந்தமிழின் பின்னுதித்த தென்றலே
2. ஔவையார் - ஆ) வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
3. இளங்கோவடிகள் - இ) வாயுவழக்கம் ஆயுள் அறிந்து செறித்தடங்கில்
4. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் - ஈ) வளி மிகின் வலி இல்லை

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ ) 4 அ)**

**14. ‘குணக்கு’ என்னும் சொல்குறிக்கும் பொருள்**

அ) கிழக்கு ஆ) குடக்கு இ) குளிர்ச்சி ஈ) தென்றல் விடை - **அ) கிழக்கு**

**15. ‘நறுவீ’ என்னும் சொல்லின் பொருள்**

அ) நல்ல மலர்கள் ஆ) நன்கு விரிந்த மலர்கள் இ) மகரந்தம் தூவும் மலர்கள் ஈ) நறுமணமுடைய மலர்கள்

விடை - **ஈ) நறுமணமுடைய மலர்கள்**

**16. காற்றை பாரதியார் ‘மயலுறுத்து’ அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்**

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

விடை - **ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**

**17. பாரதியார் பணியாற்றிய இதழ்கள்**

அ) இந்தியா, குயில் ஆ) புதுவை முரசு, இந்தியா இ) சுதேசமித்ரன், இந்தியா ஈ) குடியரசு, புதுவை முரசு

விடை - **இ) சுதேசமித்ரன், இந்தியா**

**18. தடக்கை - இலக்கணக் குறிப்பு**

அ) வினையாலணையும் பெயர் ஆ) பண்புத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) உம்மைத்தொகை

விடை - **இ) உரிச்சொற்றொடர்**

**19. தைத்திங்கள் என்பது**

அ) அன்மொழித்தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

இ) உம்மைத் தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை விடை - **ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**20. அண்ணன் தம்பி வந்தனர் - இத்தொடரில் உள்ள தொகைச் சொல்லின் விரி**

அ) அண்ணனுக்குத் தம்பி ஆ) அண்ணனும் தம்பியும் இ) அண்ணனால் தம்பி ஈ) அண்ணனுடன் தம்பி

விடை - **ஆ) அண்ணனும் தம்பியும்**

**21. இயற்கை நிகழ்வுகளோடு ஒப்பிடத் தகுந்தனவற்றைப் பொருத்துக.**

அ) துளிர்க்கும் நாற்றுகள் - அ) அச்சம் ஆ) இளந்தென்றல் - ஆ) குழந்தைகள் முகம்

இ) சுழன்றடிக்கும் புயல் - இ) நம்பிக்கை ஈ) மலர்ந்த மலர்கள் - ஈ) இன்ப உணர்வு

விடை - **1 இ) - 2 ஈ) 3 அ ) 4 ஆ)**

**22. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" - இப்பழமொழி உணர்த்தும் பொருள்**

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்

ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்

இ) உரிய காலத்தில் செயலுக்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும்

ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்

விடை - **ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்**

**23. "காலின் ஏழடிப் பின் சென்று" - என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுவது**

அ) விருந்தினர் கால்தொட்டு வணங்கி வரவேற்றல்

ஆ) விருந்தினரைப் பேணுதல் பொருட்டு ஏழு அடி நடந்து சென்று வரவேற்றல்

இ) விருந்தினரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்புதல் ஈ) அடியார்களை வணங்கி வரவேற்றல்

விடை - **இ) விருந்தினரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்புதல்**

**24. தமிழரின் விருந்தோம்பலில் அடிப்படைப் பண்பு**

அ) ஈதற்கடன் ஆ) பகிர்ந்துண்ணல் இ) விருந்து படைத்தல் ஈ) மகிழ்ந்துண்ணல் விடை - **ஆ) பகிர்ந்துண்ணல்**

**25. பொருத்துக.**

1. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" - அ) திருக்குறள்
2. "மோப்பக்குழையும் அனிச்சம்...." - ஆ) புறநானூறு
3. "அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே" - இ) நற்றிணை
4. "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" - ஈ) கொன்றைவேந்தன்

விடை - **1 ஈ) - 2 அ) 3 ஆ ) 4 இ)**

**26. பின்வருவனவற்றுள் சங்க இலக்கியம் அல்லாதது**

அ) இனிதெனத் தமியர் உண்டலும் இலரே ஆ) குதல் உணங்கு விதைத் தினை உரல் வாய்ப்பெய்து

இ) கருங்கோட்டுச் சீறியாழ் பணையமிது கொண்டு ஈவதிலாளன் ஈ) பசி வரப் பத்தும் பறந்து போகும்

விடை - **ஈ) பசி வரப் பத்தும் பறந்து போகும்**

**27. பொருத்துக**

1. பெருங்கௌசிகனார் - அ) நைடதம் 2. கி. ராஜநாராயணன் - ஆ) காசிக்காண்டம்

3. விருந்தோம்பும் நெறி - இ) கூத்தராற்றுப்படை 4. காசியின் சிறப்பு - ஈ) கரிசல் இலக்கியம்

விடை - **1 இ) - 2 ஈ) 3 அ ) 4 ஆ)**

**28. கூற்று - மலைப்படுகடாம் என்பது ஆற்றுப்படை நூல்களில் ஒன்று**
**காரணம் - புகழ்ந்துப் பாடிப் பரிசில் பெற்ற கூத்தல், பரிசில் பெறப்போகும் கூத்தரை வழிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.**

அ) கூற்று மட்டும் சரி ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) காரணம் மட்டும் சரி ஈ) கூற்று காரணம் இரண்டிற்கும் தொடர்பில்லை விடை - **ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி**

**29. பொருத்துக.**

1. தேடித்தேடி - அ) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் 2. தெரிந்த பெயர் - ஆ) வினைமுற்றுத் தொடர்

3. வளர்ந்தது தமிழ் - இ) பெயரெச்சத் தொடர் 4. ஊரின்கண் நீங்கினர் - ஈ) அடுக்குத் தொடர்

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ ) 4 அ)**

**30. பொருத்துக.**

1. குறள் - அ) போற்றி 2. ஊழ் - ஆ) செல்வம்

3. திரு - இ) இரண்டடி வெண்பா 4. பேணி - ஈ) முன்வினை

விடை - **1 இ) - 2 ஈ) 3 ஆ ) 4 அ)**

**31. கண்ணோட்டம் என்னும் சொல்லின் பொருள்**

அ) கவனித்தல் ஆ) உற்றுநோக்கல் இ) இரக்கம் ஈ) விடாமுயற்சி விடை - **இ) இரக்கம்**

**32. "நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தன்று" - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி**

அ) எடுத்துக்காட்டு உவமையணி ஆ) சொல்பின்வருநிலையணி இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) உவமையணி

விடை - **ஈ) உவமையணி**

**33. பழமொழிகளைப் பொருத்துக.**

1. ஆறில்லா ஊருக்கு - அ) அடி சறுக்கும் 2. காலிப்பை - ஆ) நூறு வயது

3. நொறுங்கத் தின்றால் - இ) நிமிர்ந்து நிற்பதில்லை 4. யானைக்கும் - ஈ) அழகு பாழ்

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ ) 4 அ)**

**34. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.**
**பச்சரிசியைக் கொண்டு ---------- செய்து பாசிப்பருப்பினை வறுத்த------------- பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு --------------- செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி ----------------- செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.**

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, பொங்கல், அல்வா

இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

விடை - **இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்**

**35. பெப்பர் என்பது**

அ) மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் ஆ) உரையாடு மென்பொருள்

இ) செயற்கை நுண்ணறிவுக் கணினி ஈ) ஜப்பானிய வங்கியின் இயந்திர மனிதன்

விடை - **ஈ) ஜப்பானிய வங்கியின் இயந்திர மனிதன்**

**36. திராவிட வேதம்**

அ) பெரிய புராணம் ஆ) பெரிய திருமொழி இ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஈ) முகுந்த மலை

விடை - **இ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**

**37. மீளாத் துயர்**

அ) வினையாலணையும் பெயர் ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சத் தொடர்

விடை - **ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**38. தண்பெயல் என்பது**

அ) நிறை வெள்ளம் ஆ) வெள்ளக்காடு இ) குளிர்ந்த மழை ஈ) பெருமழை விடை - **இ) குளிர்ந்த மழை**

**39. ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் நாளை இந்தியா வருகிறார் என்பது**

அ) பால் வழுவமைதி ஆ) இட வழுவமைதி இ) கால வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி

விடை - **இ) கால வழுவமைதி**

**40. திணைவழுவமைதி**

அ) 'இந்த பாப்பா தூங்கமாட்டாள்' என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது

ஆ) இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது இ) வாடா செல்லம் என்று தாய் மகளை அழைப்பது

ஈ) 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது விடை - **ஈ) 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது**

**41. பொருத்துக.**

1. பறவைகள், குன்றுகள் - அ) முன்னிலைப் பெயர்கள் 2. பெண்கள், குழந்தைகள் - ஆ) அஃறிணைப் பலவின்பால்

3. படித்தனர், பறந்தன - இ) படர்க்கை வினைகள் 4. நீங்கள், நீவிர் - ஈ) உயர்திணைப் பலர்பால்

விடை - **1 ஆ) - 2 ஈ) 3 இ ) 4 அ)**

**42. கொடுக்கப்பட்ட சொற்கள் அமைந்த பொருத்தமான தொடரைத் தெரிக (ஏரி, ஆறு, மலை, மழை, மேகம், குளம்)**

அ) மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது

ஆ) கருத்து மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன

ஈ) மலைமீது மழைபெய்ய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

விடை - **ஆ) கருத்து மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின**

**43. வெட்டிய மரங்களுக்கு ஈடாக ----------------------- நட்டனர்.**

அ) கொடிகளை ஆ) நாற்றுகளை இ) மரங்களை ஈ) மரக்கன்றுகளை விடை - **ஈ) மரக்கன்றுகளை**

**44. செயற்கை நுண்ணறிவு ஒரு**

அ) மென்பொருள் ஆ) இயந்திரம் இ) கணக்கிடும் கருவி ஈ) மின்னணுக் கருவி விடை - **ஆ) இயந்திரம்**

**45. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்னும் நூலின் ஆசிரியர்**

அ) கணமுத்தையா ஆ) வைரமுத்து இ) ராகுல் சாங்கிருத்யாயன் ஈ) யூமா வாசுகி

விடை - **இ) ராகுல் சாங்கிருத்யாயன்**

**46. திருத்தக்கத்தேவரும் வில்லிபுத்தூராரும் வடமொழி மூலங்களைத் தழுவி எழுதிய நூல்கள்**

அ) மகாபாரதமும் இராமாயணமும் ஆ) திருவிளையாடற் புராணமும் சீவக சிந்தாமணியும்

இ) சீவக சிந்தாமணியும் மகாபாரதமும் இ) சீவக சிந்தாமணியும் இராமாயணமும்

விடை - **இ) சீவக சிந்தாமணியும் மகாபாரதமும்**

**47. பொருத்துக.**

1. அருள் - அ) மயக்கம் 2. மருள் - ஆ) தெளிவு

3. தெருள் - இ) நூறு 4. சதம் - ஈ) கருணை விடை - **1 ஈ) - 2 அ) 3 ஆ ) 4 இ)**

**48. நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டியவர்**

அ) பரஞ்சோதி முனிவர் ஆ) இரவீந்திரநாத் தாகூர் இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) பாரதியார்

விடை - **இ) செய்குதம்பிப் பாவலர்**

**49. பரஞ்சோதி முனிவரால் இயற்றப்படாத நூல்**

அ) கந்தர் கலிவெண்பா ஆ) வேதாரண்யப்புராணம் இ) போற்றிக் கலிவெண்பா ஈ) திருவிளையாடற் புராணம்

விடை - **அ) கந்தர் கலிவெண்பா**

**50. பெருக்கி, திருத்தி, அகற்றி - என்பன**

அ) பெயரெச்சங்கள் ஆ) வினையெச்சங்கள் இ) உம்மைத்தொகைகள் ஈ) வினையெச்சங்கள்

விடை - **ஆ) வினையெச்சங்கள்**

**51. 'கண் உலர்ந்து எரிச்சல் அடையும்' என்ற உறுவது கூறல் விடைக்கேற்ற வினா**

அ) உனக்குக் கதை எழுதத் தெரியுமா? ஆ) உறக்கம் வரவில்லையா?

இ) பாடலைப் பாடிக் காட்டுகிறாயா? ஈ) இக்கட்டுரையை ஐந்து வகுப்புகளுக்குப் படித்துக் காட்டுகிறாயா?

விடை - **ஈ) இக்கட்டுரையை ஐந்து வகுப்புகளுக்குப் படித்துக் காட்டுகிறாயா?**

**52. 'ஒரு கவிதை எழுதித் தருகிறாயா?' என்ற கேள்விக்கான மறைவிடை**

அ) எழுதித் தரமாட்டேன் ஆ) நாளை எழுதுகிறேன் இ) எழுதும் மனநிலை இல்லை ஈ) நீயே எழுதிக்கொள்

விடை - **அ) எழுதித் தரமாட்டேன்**

**53. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.**

**தவழும்போதுஒருபெயர்;விழும்போதுஒருபெயர்;உருளும்போதுஒருபெயர்;திரண்டோடும்போதுஒருபெயர்-அவைஎன்ன?**

அ) நீர், மழை, ஆறு, ஓடை ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம் இ) மாரி, கார், நீர், புனல் ஈ) மழை, புனல், மேகம், நீர்

விடை - **ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்**

**54.** Mosquito - bite ……………………; Disturbing the mother; tiny anklet - இந்த ஆங்கிலக் கவிதைக்கான பொருத்தமான தமிழாக்கம்

அ) கொசுக்கடிக்கு தாயே காவல் காப்பார் குழந்தையின் கொலுசொலியோடு

ஆ) கொசுக்கடியில் உறங்கா தாய், எழுப்பும் குழந்தையின் கொலுசொலியும்

இ) கடிக்கும் கொசு, தாயை எழுப்பும் சின்னக் கொலுசு

ஈ) கொசுக்களின் தொல்லை, உறங்கா அன்னையும் குழந்தையும் உறங்கா இரவும்

விடை - **ஆ) கொசுக்கடியில் உறங்கா தாய், எழுப்பும் குழந்தையின் கொலுசொலியும்**

**55. பொருத்துக.**

1. உதவும் பொருட்டு வினாவுவது - அ) மறை விடை 2. பொருளை வாங்குதல் - ஆ) நேர் விடை

3. வெளிப்படை - இ) கொளல் வினா 4. மறுத்துக் கூறுதல் - ஈ) கொடை வினா

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ ) 4 அ)**

**56. இனமொழி விடை**

அ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு பாடுவேன் என்று கூறுவது ஆ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என்று கூறுவது

இ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு மாட்டேன் என்று கூறுவது ஈ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு நீயே ஆடு என்று கூறுவது

விடை - **இ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு மாட்டேன் என்று கூறுவது**

**57. பொருத்துக.**

1. பொய்க்கால் குதிரையாட்டம் - அ) கரகாட்டம் 2. தப்பாட்டம் - ஆ) உறுமி

3. கும்பாட்டம் - இ) புரவியாட்டம் 4. தேவராட்டம் - ஈ) தோற்கருவி

விடை - **1 இ) - 2 ஈ) 3 அ ) 4 ஆ)**

**58. கரகாட்டத்திலும், தெருக்கூத்திலும் நிகழ்த்தப்படும் கதைகள்**

அ) சிலப்பதிகாரமும் மகாபாரதமும் ஆ) இராமாயணமும் சிலப்பதிகாரமும்

இ) மகாபாரதமும் மணிமேகலையும் ஈ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

விடை - **அ) சிலப்பதிகாரமும் மகாபாரதமும்**

**59. பொருத்துக.**

1. சுட்டி - அ) காதில் அணிவது 2. குழை - ஆ) காலில் அணிவது

3. பண்டி - இ) நெற்றியில் அணிவது 4. கிண்கிணி - ஈ) வயிறு விடை - **1 இ) - 2 அ) 3 ஈ ) 4 ஆ)**

**60. பொருத்துக.**

1. வில் பிடித்த - அ) நான்காம் வேற்றுமைத் தொகை 2. நெடும்படை - ஆ) வினைத்தொகை

3. காலதூதன் - இ) பண்புத்தொகை 4. விரிசோதி - ஈ) இரண்டாம் வேற்றுமைத்தொகை

விடை - **1 ஈ) - 2 இ) 3 அ ) 4 ஆ)**

**61. ஞாயிறு மறையும் நேரம் என்பது**

அ) யாமம் ஆ) வைகறை இ) மாலை ஈ) எற்பாடு விடை - **ஈ) எற்பாடு**

**62. பொருத்துக**

1) குறிஞ்சி - அ) உப்பு விளைத்தல் 2) முல்லை - ஆ) நெல்லரிதல்

3) மருதம் - இ) நிரை மேய்த்தல் 4) நெய்தல் - ஈ) தேனெடுத்தல்

விடை - **1 ஈ) - 2 இ) 3 ஆ ) 4 அ)**

**63. வரகு, சாமை இவற்றை உணவாகக் கொண்ட நிலம்**

அ) மருதம் ஆ) பாலை இ) குறிஞ்சி ஈ) முல்லை விடை - **ஈ) முல்லை**

**64. பொருத்துக.**

1. வன்கண் - அ) உறவினர் 2. இன்மை - ஆ) பகைவர்

3. செறுநர் - இ) மனவலிமை 4. சுற்றம் - ஈ) வறுமை விடை - **1 இ) - 2 ஈ) 3 ஆ ) 4 அ)**

**65. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது**

அ) பொருளீட்டும் நெறியறிவே தொழில் புரிதல் ஆ) தொழிலைச் செய்வதற்குரிய காலமறிந்து செய்தல்

இ) மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்யும் பொருளை ஈட்டுதல் ஈ) சிறந்த நூல்களைக் கற்றறிந்து புகழ் ஈட்டுதல்

விடை - **இ) மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்யும் பொருளை ஈட்டுதல்**

**66. எர்லி மார்னிங் எழுந்து வாக்கிங் சென்று வந்து டீ குடித்த அம்மா நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொல் வரிசையை அறிக.**

அ) வைகறை, நடைபயிற்சி, பத்திரிக்கை, தேநீர் ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிக்கை

இ) காலை, நடை, தேநீர், செய்தி ஈ) வைகறை, நடைபயிற்சி, தேநீர், செய்தித்தாள்

விடை - **ஈ) வைகறை, நடைபயிற்சி, தேநீர், செய்தித்தாள்**

**67. தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழகத்தின் வடக்கெல்லை, தெற்கெல்லை**

அ) வேங்கடமலை, செங்கோட்டை ஆ) வேங்கடமலை, குமரிமுனை

இ) சென்னை, கன்னியாகுமரி ஈ) திருப்பதி, திருவிதாங்கூர் விடை - **ஆ) வேங்கடமலை, குமரிமுனை**

**68. கூற்று - ம.பொ.சி எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டார்.**
**காரணம் - குடும்ப வறுமையின் காரணமாகப் பள்ளியிலிருந்து நின்றுவிட்டார்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ)கூற்றுதவறு,காரணம்தவறு

விடை - **இ) கூற்று தவறு, காரணம் சரி**

**69. பொருத்துக.**

1. கொழு - அ) அகலிகை 2. பதம் - ஆ) விரைந்து

3. கு.ப.ரா. - இ) பக்குவம் 4. கடுகி- ஈ) கம்பு விடை - **1 ஈ) - 2 இ) 3 அ) 4 ஆ)**

**70. மெய்க்கீர்த்தி என்பது**

அ) கல்வெட்டில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் ஆ) அழியாப்புகழ் பெற்ற நூல்கள்

இ) புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கட்டவை

ஈ) மெய்யான புகழ், கொடை, வீரம் முதலியன குறித்த நூல்கள்

விடை - **இ) புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கட்டவை**

**71. "மருளுடையன இளமான்களே" - இத்தொடர் உணர்த்தும் உட்கருத்து**

அ) மான்கள் மருள்கின்றன ஆ) பெண்கள் மருள்கின்றனர் இ) மக்கள் மருளவில்லை ஈ) இளமான்கள் மருளவில்லை

விடை - **இ) மக்கள் மருளவில்லை**

**72. பொருத்துக.**

1. ஓசுநர் - அ) நறுமணப்பொடி 2. இசை - ஆ) எண்ணெய் விற்போர்

3. கண்ணம் - இ) செல்வம் 4. வெறுக்கை - ஈ) பாணர் விடை - **1 ஆ) - 2 ஈ) 3 அ) 4 இ)**

**73. "மாட்டைப் பூட்டிக் காட்டைக் கீறுவோம்" - காடும் கீறலும் குறிப்பது**

அ) வனத்தையும் விலங்கையும் ஆ) வயலையும் வளத்தையும் இ) வயலையும் உழவையும் ஈ) வனத்தையும் உழவையும்

விடை - **இ) வயலையும் உழவையும்**

**74. பொழுதேறப் பொன்பரவும் - 'பொன்பரவும்' என்னும் சொல்லின் பொருள்**

அ) கதிரவனின் ஒளி பரவும் ஆ) நிலவின் ஒளி பரவும் இ) நிலத்தில் பசுமை பரவும் ஈ) நிலத்தில் விதை பரவும்

விடை - **அ) கதிரவனின் ஒளி பரவும்**

**75. பொருத்துக.**

1. கோட்டையைக் காத்தல் - அ) வஞ்சித் திணை 2. வலிமையே பெரிது - ஆ) நொச்சித் திணை

3. மண்ணாசை - இ) வெட்சித் திணை 4. ஆநிரை கவர்தல் - ஈ) தும்பைத் திணை

விடை - **1 ஆ) - 2 ஈ) 3 அ) 4 இ)**

**76. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை, நல்வினை, தீவினை

ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, உயர்திணை, அஃறிணை

இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம், அறம், பொருள், இன்பம்

ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல், பனை, திணை

விடை - **ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, உயர்திணை, அஃறிணை**

**77. பொருத்துக.**

1. திருமுடிக்காரி - அ) பெருஞ்சித்திரனார் 2. ஈகைப்புலவர் - ஆ) கபிலர்

3. உதவியாண்மை - இ) ஆவூர் மூலங்கிழார் 4. போர் அறம் - ஈ) பூதன் தேவனார்

விடை - **1 ஆ) - 2 அ) 3 ஈ) 4 இ)**

**78. நற்றிணை குறிப்பிடும் வாய்மை குறித்த தொடர்**

அ) வாய்மையே நல்லறம் ஆ) பிழையா நன்மொழி இ) வாய்மையே வெல்க ஈ) உயிரினும் மேலானது மெய்

விடை - **ஆ) பிழையா நன்மொழி**

**79. பொருத்துக.**

1. கந்தை - அ) சன்னல் 2. தூரிகை - ஆ) பழைய

3. சாளரம் - இ) மண்துகள் 4. புழுதி - ஈ) தீட்டும் கருவி விடை - **1 ஆ) - 2 ஈ) 3 அ) 4 இ)**

**80. கவியரசு கண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்பு**

அ) தைப்பாவை ஆ) இயேசு காவியம் இ) காலக்கணிதம் ஈ) சேரமான் காதலி

விடை - **ஈ) சேரமான் காதலி**

**81. மாறாதிருப்பவை என கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவன**

அ) மானிடர், காடுமேடு, உலகம் ஆ) கல், மண், சாலை இ) கல், மரம், காடுமேடு ஈ) சாலை, தலைவர், உலகம்

விடை - **இ) கல், மரம், காடுமேடு**

**82. பொருத்துக.**

1. யாப்பின் உறுப்புகள் - அ) நான்கு 2. அசை - ஆ) ஏழு

3. பாவின் வகைகள் - இ) இரண்டு 4. தளை - ஈ) ஆறு விடை - **1 ஈ) - 2 இ) 3 அ) 4 ஆ)**

**83. இரண்டு அடிகளைப் பெற்று வருவது**

அ) கலிவெண்பா ஆ) ஆசிரியப்பா இ) குறள் வெண்பா ஈ) நேரிசை வெண்பா

விடை - **இ) குறள் வெண்பா**

**84. பொருள் என்னும் ஈற்றுச் சீரின் வாய்பாடு**

அ) மலர் ஆ) பிறப்பு இ) நாள் ஈ) காசு விடை - **அ) மலர்**

**85. மரபுத்தொடருக்கான பொருளைப் பொருத்துக.**

1. கயிறு திரித்தல் - அ) அதிகமாப் பேசுதல் 2. கொட்டி அளத்தல் - ஆ) சொல்லாமல் செல்லுதல்

3. முதலைக் கண்ணீர் - இ) பொய் கூறுதல் 4. கம்பி நீட்டுதல் - ஈ) பொய்யழுகை

விடை - **1 இ) - 2 அ) 3 ஈ) 4 ஆ)**

**86. 'ஆறு' என்னும் சொல் தரும் வெவ்வேறு பொருளைக் கொண்டு உருவாக்கிய பொருத்தமான தொடரை அறிக.**

அ) கடற்கரையோரம் நடப்பட்ட ஆறு மரக்கன்றுகளும் வளர்ந்து மிகப்பெரிய மரங்களானதைக் கண்ட முதியவர் மகிழ்ந்தார்.

ஆ) ஆறு கரைபுரண்டு ஓடியதில் பல மரங்கள் அடித்து செல்லப்பட்டது.

இ) தந்தைக்கு நண்பகல் உணவை ஆற்றைக் கடந்து கொண்டு செல் என்று அன்னை கூறினார்.

ஈ) நதிவழியே சென்று அறுவரைக் கண்டு அவர்களது துன்பத்தைத் தணித்து வருவாயாக என்று குரு கூறினார்.

விடை - **ஈ) நதிவழியே சென்று அறுவரைக் கண்டு அவர்களது துன்பத்தைத் தணித்து வருவாயாக என்று குரு கூறினார்.**

**87. கலையும் அதன் பொருளும் பற்றி ஜெயகாந்தன் கூறுவது**

அ) அழகியலோடும் பொருள் நிறைந்த படைப்பாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ) கலை, கலைத்தன்மையோடும் அதன் பொருள் சமூகப் பார்வையோடும் இருக்க வேண்டும்.

இ) இலக்கண வளத்தோடு கலைப்படைப்பு அமைதல் வேண்டும்.

ஈ) கலைத்தன்மையோடும் கட்டமைப்புகளோடும் அமைதல் வேண்டும்.

விடை - **ஆ) கலை, கலைத்தன்மையோடும் அதன் பொருள் சமூகப் பார்வையோடும் இருக்க வேண்டும்.**

**88. பொருத்துக.**

1. சில நேரங்களில் சில மனிதர்கள் - அ) திரைப்படமான புதினம்
2. எதற்காக எழுதுகிறேன்? - ஆ) சிறுகதை
3. தர்க்கத்திற்கு அப்பால் - இ) சாகித்திய அகாதெமி விருது
4. யாருக்காக அழுதான்? - ஈ) கட்டுரைத் தொகுப்பு

விடை - **1 இ) - 2 ஈ) 3 ஆ ) 4 அ)**

**89. நாகூர் ரூமி எழுதத் தொடங்கிய இதழ்**

அ) ஆனந்த விகடன் ஆ) இந்தியா இ) குடியரசு ஈ) கணையாழி விடை - **ஈ) கணையாழி**

**90. கருணையன் மார்பில் அணிந்த அணிகலனாக உவமிக்கப்படுவது**

அ) நெல்மணிகளைக் கோவையாக கொண்ட மாலை ஆ) அறங்களைக் கோவையாக இணைத்த தவமணிமாலை

இ) அன்னையின் அன்பான வழிகாட்டலில் இணைத்த தவமாலை ஈ) மலர்களையும் கண்ணீரையும் கொண்ட அன்பு மாலை

விடை - **ஆ) அறங்களைக் கோவையாக இணைத்த தவமணிமாலை**

**91. "விரிந்தன கொம்பில் கொய்த வீ யென உள்ளம் வாட" - அடிக்கோடிட்ட தொடரின் பொருள்**

அ) பறித்த மலர் ஆ) வீழ்ந்த மலர் இ) உதிர்ந்த மலர் ஈ) மணம்வீசும் மலர்

விடை - **அ) பறித்த மலர்**

**92. வீரமாமுனிவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் ஒன்று**

அ) தொன்னூல் விளக்கம் ஆ) சதுரகராதி இ) கித்தேரி அம்மாள் அம்மானை ஈ) பரமார்த்த குரு கதைகள்

விடை - **இ) கித்தேரி அம்மாள் அம்மானை**

**93. 'தீவகம்' என்னும் சொல்லின் பொருள்**

அ) நெருப்பு ஆ) தீவுத்திடல் இ) விளக்கு ஈ) தீவுப்பகுதி விடை - **இ) விளக்கு**

**94. "எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்**
**சொன்முறை தொடுப்பது தன்மையாகும்" என்று கூறும் நூல்**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) மாறனலங்காரம் விடை - **ஆ) தண்டியலங்காரம்**

**95. பொருத்துக**

1. தீவக அணி - அ) உள்ளதை உள்ளவாறு கூறுவது
2. தற்குறிப்பேற்ற அணி - ஆ) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள்கொள்வது
3. நிரல் நிறையணி - இ) பாடலின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அப்பாடலின் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருந்துவது
4. தன்மையணி - ஈ) இயல்பாக நிகழ்வதில் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது

விடை - **1 இ) - 2 ஈ) 3 ஆ ) 4 அ)**

**96. தற்குறிப்பேற்றம் - பிரித்து எழுதுக.**

அ) தன் + குறிப்பு + ஏற்றம் ஆ) தன் + குறிப்பு + யேற்றம் இ) தங் + குறிப்பு + ஏற்றம் ஈ) தன் + குறிப் + ஏற்றம்

விடை - **அ) தன் + குறிப்பு + ஏற்றம்**

**97. நீண்ட நாள் கழித்து வீட்டிற்கு வந்த மாமாவைக் கண்ட வளவன், . . . . . . . . . . . . . வந்திருக்கிறாரே என்று வியந்தான்.**

அ) நீர்மேல் எழுத்து போல ஆ) வாழையடி வாழையாய் இ) அத்திப்பூத்தாற் போல ஈ) தாமரை இலை நீர் போல

விடை - **இ) அத்திப்பூத்தாற் போல**

**98. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!

ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!

ஈ) 'திருவள்ளுவர்', "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

விடை - **இ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!**

## அரசு வெளியிட்ட மாதிரி வினாத்தாள் 2019 - 2020

## பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம் : தமிழ்

**நேரம் : 15 நிமிடம் + 2.30 மணி** **மதிப்பெண்கள் : 100**

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா? என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு: i) இவ் வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - 1 (மதிப்பெண்கள் : 15)

I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். *15 x 1 = 15*

**1. "பரிபாடல் அடியில் விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?**

அ. வானத்தையும் பாட்டையும் ஆ. வானத்தையும் புகழையும்

இ. வானத்தையும் பூமியையும் ஈ. வானத்தையும் பேரொலியையும்

**2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் தொடர் இடம்பெற்ற நூல்**

அ. கொன்றை வேந்தன் ஆ. குறுந்தொகை இ. திருக்குறள் ஈ. நற்றிணை

**3. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது, "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது**

அ. ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ. அறிவினா, மறைவிடை

இ. அறியாவினா, சுட்டுவிடை ஈ. கொளல் வினா, இனமொழி விடை

**4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி**

அ. ஜால்ரா ஆ. பறை இ. உறுமி ஈ. நாகசுரம்

**5. "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" - இவ்வடி குறிப்பிடுவது .......**

அ. காலம் மாறுவதை ஆ. துடைப்பதை இ. இடையறாது அறப்பணி செய்தலை ஈ வண்ணம் பூசுவதை

**6. காற்றின் மெல்லிய ............... பூக்களைத் தலையாட்டவைக்கிறது. கைகளின் நேர்த்தியான ...... பூக்களை மாலையாக்குகிறது. தொழிற்பெயர்களைப் பொருத்தித் தொடர்களை முழுமை செய்க.**

அ. தொடுத்தல், எடுத்தல் ஆ. தொடுதல், தொடுத்தல் இ. எடுத்தல், தொடுதல் ஈ. தொடுத்தல், தொடுதல்

**7. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

அ. உவமை ஆ. தற்குறிப்பேற்றம் இ. உருவகம் ஈ. தீவகம்

**8. "சங்க இலக்கியங்கள் , ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**

அ. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை நல்வினை, தீவினை

ஆ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை உயர்திணை, அஃறிணை

இ. குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்

ஈ. குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல் பனை, திணை

**9. "கேள்வியினான் " என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு -**

அ. வினையாலணையும் பெயர் ஆ. தொழிற்பெயர் இ. வினைத்தொகை ஈ. பண்புத்தொகை

**10. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்**

அ. வினாத்தொடர் ஆ, தனித்தொடர் இ. செய்தித்தொடர் ஈ. கலவைத்தொடர்

**11. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது,**

அ. இலையும் சருகும் ஆ. தோகையும் ஓலையும் இ. தாளும் ஓலையும் ஈ. சருகும் சண்டும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு ( 12 , 13 , 14,15 ) விடைதருக .**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல , நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி , வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

**12. இப்பாடலின் ஆசிரியர் -**

அ. ஔவையார் ஆ. நப்பூதனார் இ. நல்வேட்டனார் ஈ. பெருங்கௌசிகனார்

**13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் -**

அ. மலைபடுகடாம் ஆ. பரிபாடல் இ. முல்லைப்பாட்டு ஈ. நற்றிணை

**14. "நனந்தலை உலகம்" - இத்தொடரின் பொருள்?**

அ. சிறிய உலகம் ஆ. நனைந்த உலகம் இ. சுற்றும் உலகம் ஈ. அகன்ற உலகம்

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**

அ. பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ. கோடுகொண்டு, பெரும்பெயல் இ. நனந்தலை , வலம்புரிய

## பகுதி -II ( மதிப்பெண்கள் : 18 )

### பிரிவு -1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க .** **4 x 2 = 8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க,**

அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

**17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது ?**

**18. "நமக்கு உயிர் காற்று , காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்" - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக .**

**19. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

**20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?**

**21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக .**

## பிரிவு -2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** 5 x 2 = 10

**22. அண்ணன்நேற்றுவீட்டிற்குவந்தது.அண்ணன்புறப்படும்போதுஅம்மாவழியனுப்பியது.**(வழுவைவழாநிலையாகமாற்றுக)

**23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.** தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து

அ. வாழ்க்கையில் மீண்டும் வெல்லும்- இதைத் தத்துவமாய்த் .......... க் கூத்து சொல்லும்.

ஆ. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே. அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் ......

**24. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.** சிறு - சீறு

**25. கலைச்சொற்கள் தருக.** (1) Modern Literature (2) Epic Literature

**26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.**

**27. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவர்கள் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

**28. அறியேன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

## பிரிவு -1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**29. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.**

**30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார் . இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.**

**31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல், விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர், அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ. விருந்தினர் என்போர் யாவர்? ஆ. விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு -2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**34. ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும் .**

**32. " உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது " - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**33. வைத்தியநாதபுரிமுருகன்,அணிந்திருக்கும்அணிகலன்களுடன்குழந்தையாகச்செங்கீரைஆடியநயத்தினைவிளக்குக.**

**34. அடிபிறழாமல் எழுதுக-**

"நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல் (அல்லது)

"வாளால் அறுத்துச் சுடினும்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல் .

## பிரிவு -3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**35. "கண்ணே கண்ணுறங்கு!**
**காலையில் நீயெழும்பு!**
**மாமழை பெய்கையிலே!**
**மாம்பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு!**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!" - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.**

**36. பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

**37. தன்மை அணி குறித்து எழுதுக.**


## பகுதி - IV ( மதிப்பெண்கள் : 25 )

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

**38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)**
**ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

**39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)**
**ஆ) "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில் , மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



**41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.**

**42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக .**

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

(அல்லது )

**மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark . The milky clouds start their wandering . The colourful birds start twitting their morning melodies in percussion . The cute butterflies dance around the flowers . The flowers fragrance fills the breeze . The breeze gently blows everywhere and makes everything pleasant .

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக .**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது என்பதை அறிகிறோம்.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.

1) ஒரு மொழியின் இலக்கியம் யாரால் அமையப்பெறும் ?

2) தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் யாவை ?

3) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்வாறு அறிவீகள் ?

4) தமிழ்நாட்டில் கூலங்கள் எத்தனை வகைப்பட்டனவாக விளங்குகின்றன ?

5) ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் எது?

## பகுதி - V ( மதிப்பெண்கள் : 24 )

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 x 8 = 24

**43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக். (அல்லது)**

**ஆ) "மலர்ந்தும் மலராத பாதிமலர் போல**
**வளரும் விழி வண்ணமே - வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந் தென்றலே - வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே" - கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.**

**44. அ) "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக. (அல்லது)**

**ஆ) கு.அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.**

**45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை , தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். - இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.**

**(அல்லது )**

**ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக . முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.**

## மாதிரி வினாத்தாள் 1

## பகுதி 1

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 15 x 1 = 15

**1. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று -----------, ----------- வேண்டினார்.**

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

**2. "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" இவ்வடி குறிப்பிடுவது**

அ) காலம் மாறுவது ஆ) வீட்டைத் துடைப்பது இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

**3. அருந்துணை என்பதைப் பிரித்தால்**

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

**4. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

**5. மாவலன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்**

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருசெந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**6. "பெரிய மீசை சிரித்தார்" - தடித்தச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**7. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்திக் காரணமாக அமைவது □**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்**

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**9. வாய்மையே மழை நீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

**10. "இங்கு நகரப் பேருந்து நிற்கும்?" என்று வழிபோக்கர் கேட்டது --------- வினா.
"அதோ அங்கே நிற்கும்." என்றும் மற்றொருவர் கூறியது ---------------- விடை.**

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**11. "மாபாரதம்தமிழ்ப்படுத்தும்மதுராபுரிச்சங்கம்வைத்தும்"என்னும்சின்னமனூர்ச்செப்பேட்டுக்குறிப்புஉணர்த்தும்செய்தி**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**பாடலை படித்துப் பின்வரும் வினாக்களுக்கு ( 12,13,14,15 ) விடைதருக**

"விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்

பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதால்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே”

**12. இப்பாடலின் ஆசிரியர்** அ) நல்வேட்டனார் ஆ) நப்பூதனார் இ) அதிவீரராமபாண்டியன் ஈ) ஔவை

**13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்** அ) முல்லைப்பாட்டு ஆ) பரிபாடல் இ) மலைபடுகடாம் ஈ) காசிக்காண்டம்

**14. "மகிழ்வன செப்பல்" - இத்தொடரில் பொருள்**

அ) மகிழ்ச்சியோடு செல்லுதல் ஆ) மகிழ்ச்சியாக இருத்தல் இ) மகிழும்படி பேசுதல் ஈ) மகிழ்வாக வாழுதல்

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி மோனையைக் குறிப்பிடுக.**

அ) திருந்துற, பரிந்து ஆ) விருந்தினனாக, வியத்தல் இ) பொருந்து, போமெனில் ஈ) எழுதல், ஒழுக்கம்

## பகுதி II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4 x 2 = 8

**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**16. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. - பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தைக் கூறுக.**

**17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?**

**18. உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கர்ளை எழுதுக.**

**19. விருந்தினரை மகிழ்வித்து கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

**20. "நச்சுப் படாதவன் செல்வம்" - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

### பிரிவு 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

**21. "என் அம்மை வந்தாள்"** (வழுவை வழாநிலையாக மாற்றுக)

**22. பழமொழிகளை நிறைவு செய்க.** 1. உப்பில்லா ------------ 2. ஒரு பானை -----------

**23. கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.** வளி - வாளி

**24. கலைச் சொற்கள் தருக.** Artifacts, Myth

**25. வழுநிலை மற்றும் வழாநிலைக்கும் இரண்டு வேறுபாடுகள் கூறுக.**

**26. பின்வரும் உரையாடரில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

★ "தம்பீ? எங்க நிக்கிறே?"

★ "நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."

★ "அங்நனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு நா வெரசா வந்துருவேன்"

★ "அண்ணே! சம்முவத்தையும் கூட்டிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

★ "அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

★ "ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"

★ "இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போன

வையி. நாங் கௌம்பிட்டேன்"

**27. ஆள் - தொழிற்பெயராக மாற்றுக.**

## பகுதி 3

### பிரிவு 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**28. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான், 'முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றி பேசினால்.......... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

**29. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்கு செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்.**

**30. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்கு சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.**

### பிரிவு 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**31. வெண்மையில்லை பல்கேள்வி மேவலால் - இடஞ்சுட்டி பொருள் தருக.**

**32. வைத்தியநாத புரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக**

**33. அடிபிறழாமல் எழுதுக.**

**"அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல். (அல்லது)**

**"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடல்.**

### பிரிவு 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 5 x 5 = 25

**34. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

**35. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்**
**ஆகுதல் மாணார்க்கு அரிது. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

**36. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.**

## பகுதி 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

**37. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)**

**ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

**38. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையாருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)**

**ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துக்கள் பிறதுறைக் கருத்துக்கள் தமிழுக்குச் செழுமை**

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு "செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை" என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.**

**39. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**





**40. விண்ணப்பப் படிவம் நிரப்புக.**

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்லியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் | ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**41. அ) வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**புயலின்போது**

| | |
|---|---|
| ★ புயலின்போது வெளியே செல்ல வேண்டாம் | ★ வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின் போதே வெளியேறவும். |
| ★ தொலைப்பேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதை தவிர்க்கவும். | ★ மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும். |
| ★ வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | ★ காற்று அடிப்பது நின்றாலும் எதிர்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |

| | |
|---|---|
| ★ மீனவர்கள் கடலிக்கு செல்வதை தவிர்க்கவும். | ★ வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்களும் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**ஆ) மொழிபெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

## பகுதி 5

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 x 8 = 24

**42. அ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக (அல்லது)**

**ஆ) "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேட்கை. மேரியிடமிருருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றி கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை விவரிக்க.**

**43. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" எனும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. (அல்லது)**

**ஆ) நிகழ்வுகளைத் தொகுப்பு அறிப்பை எழுதுக.**

மகளிர் நாள் விழா

இடம்: பள்ளி கலையரங்கம் நாள்: 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் - நன்றியுரை.

**44. அ) உங்கள் பகுதியில் நடைப்பெற்ற அரசுப் பொருட்காச்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**

**(அல்லது)**

**ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்க...**

## மாதிரி வினாத்தாள் 2

### பகுதி 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 15 x 1 = 15

**1. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**2. "தன்நாட்டுமக்களுக்குத்தந்தையும்தாயும்மகனுமாகஇருந்தஅரசன்"என்னும்மெய்க்கீர்த்தித்தொடர்உணர்த்தும்பொருள்**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**3. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

**4. கோசல நாட்டின் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**5. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**6. "இங்கு நகரப் பேருந்து நிற்கும்?" என்று வழிபோக்கர் கேட்டது ---------------- வினா. "அதோ அங்கே நிற்கும்." என்றும் மற்றொருவர் கூறியது ~~~~~~~ விடை.**

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**7. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்**

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**8. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் --------------**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**9. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல் இ) வலிமையை நிலை நாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**10. "பெரிய மீசை சிரித்தார்" - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**11. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**
**செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடம் என்பதில் எனக்கு பெருமையே.**
**செய்தி 3 - காற்றின் ஆற்றலை பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்**

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நொக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர

இன்னே வருகுவர், தாய் என்போன்

நன்னர் நன்மொழி கேட்டனம்

**12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?**

**13. இப்பாடலின் ஆசிரியர் ?**

**14. கோவலர் பொருள் தருக.**

**15. உறுதுயர் - இலக்கணக் குறிப்பு.**

## பகுதி 2

### பிரிவு 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 4 x 2 = 8

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**16. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

**17. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

**18. குறிப்பு வரைக. - அவையம்**

**19. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

**20. உறங்குகின்ற கும்பகன்ன "எழுந்திராய் எழுந்திராய்**
**காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய்"**
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

**21. செய்க எனத் தொடங்கும் திருக்குறள் எழுதுக.**

### பிரிவு 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

**22. "வரும் கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன்" - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

**23. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.**

புதிர்

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட் கண்டுபிடிக்கவும்.

விடை

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட் வெயில் குறைவானது. பட் ஆனால், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்டுகளில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்து வைத்து கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்.

**24. அகராதியில் கண்டு பொருள் கொள்க.** அ) அண்ணம் ஆ) அன்னம்

**25. கலைச் சொற்கள் தருக.** Irrigation, Document

**26. விடை வகைகள் யாவை?**

**27. பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக**

தம்பீ எங்க நிக்கிறே நீங்க சொன்ன இடத்துலதாண்ணே

எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு பேப்பரப் படிச்சிகிட்டு இரு நா வெரசா வந்துருவேன்.

**28. குறிஞ்சி நிலத்தின் பெரும்பொழுதுகள் மற்றும் சிறுபொழுது யாவை?**

## பகுதி 3

### பிரிவு 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

**30. "கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன." - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைய தமிழனின் திணைநிலத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

**31. உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது் ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**1. முச்சங்கங்கள் யாவை?** **2. சங்கப் பலகையில் அமர்ந்திருந்தவர்கள் யாவர்?**

**3. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை இடுக.**

### பிரிவு 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2 x 3 = 6

**32. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "நனந்தலை உலகம்" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல். (அல்லது)**

**ஆ) "விருந்தினனாக ஒருவன்" எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.**

### பிரிவு 3

**எவைவேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**35. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்" - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகை சுட்டிக்காட்டு விளக்குக**

**36. "கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்**
**குரிமை உடைத்திவ் வுலகு" - அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

**37. தீவக அணியை விளக்குக.**

## பகுதி 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

**38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)**
**ஆ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

**கவிஞன் யானோர் காலக் கணிதம்**

**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்**

புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்

பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்

இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்

இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை

ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்


அவனும் யானுமே அறிந்தவை அறிக - கண்ணதாசன்

**39.** அ) மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம் புதுப்புதுச் செய்திகள் கிட்டும். கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பாத்திருப்பவராக, யாருமற்றவராக. இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக. (அல்லது)

ஆ) கடிதம் எழுதுக.

உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41.** படிவத்தை நிரப்புக.

நூலக உறுப்பினர் படிவம்

--------------------- மாவட்ட நூலக ஆணைக் குழு

மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் ----------------------------- உறுப்பினர் சேர்க்கை அட்டை:

அட்டை எண்: உறுப்பினர் எண்:

1. பெயர் -----------------------------------------------------------------
2. தந்தை பெயர் -----------------------------------------------------
3. பிறந்த தேதி --------------------------------------
4. வயது -------------------
5. படிப்பு ----------------------
6. தொலைப் பேசி எண் ----------------------------
7. முகவரி -----------------------------------------

நாள் ----------------- நூலகத்தின் உறுப்பினராக பதிவு செய்ய இத்துடன் காப்புத் தொகை ரூ-----------------, சந்தா தொகை ரூ ------------------------, ஆக மொத்தம் ரூ. -------------- ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்:

தங்கள் உண்மையுள்ள

திரு/திருமதி/செல்வி/செல்வன் ---------------------------------- அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை　　　　　　　　　　பிணைப்பாளர் கையொப்பம்

**42. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும். கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், "ஆம், காணாமல் போய்விடும்" உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி?" என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்.**

**மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?**

**(அல்லது)　　　　ஆ) ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.**

| | |
|---|---|
| **யாழிசை** | It's like new lute music |
| **அறைக்கும் யாழிசை** | Wondering at the lute music |
| **ஏதென்று சென்று** | Coming from the chamber |
| **எட்டிப் பார்த்தேன்** | Entered I to look up to in still |
| **பேத்தி,** | My grand-daughter |
| **நெட்டுருப் பண்ணினாள்** | Learning by rote the verses |
| **நீதிநூல் திரட்டையே.** | Of a didactic compilation. |
| **பாரதிதாசன்.** | Translated by Kavignar Desini |

## பகுதி 5

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.**　　　　3 x 8 = 24

**43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக**

**(அல்லது)**

**ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

**44. அ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்' எனும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.　　(அல்லது)**

**ஆ) உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாததை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**

**45. அ) கட்டுரை - "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்"　　(அல்லது)**

**ஆ) பள்ளிஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**குறிப்பு: நூலின் தலைப்பு - நூலின் பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்**